உ

முருகக்கடவுடுணை

மயிலாசலக்கலம்பகம்

திருப்புகழ்

பதிகங்கள்.

இவை

மஹான வண்ணச் சரபம்

முருகதாசசுவாமிகள் திருப்புகழ்ச்சுவாமிகள்

எனவழங்கும்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகள்

அருளிச்செய்தன.

பொம்மைய பாளையம் பெரியமடம்

வீரசைவசிங்காசனாதிபதியாகிய

ஸ்ரீமத் - சிவக்கியானபாலையசுவாமிகள்

பொருளுதவிகொண்டு

திருவாமாத்தூர்

கௌமார சபையாரால்

பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம் பதிப்பு.

இரத்தாக்ஷி௵ மகரரவி

1924

சென்னை:
கேஸரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

உ

முருகக்கடவுடுணை

சாத்துகவிகள்

சோழவந்தானூரிலெழுந்தருளியிருந்த

ஸ்ரீமத் - கந்தசாமி சுவாமிகள்

அருளிச்செய்தன.

அறுசீர்விருத்தம்

மேலைவிண்ணுளரவர்வேள்விப் புலையுமிகழ்திருப்புகழோன் விளம்பிசருட்டப், பாலையனுக்கருள்புரிந்த மயிலமலைக்குகன்கொள்கலம் பகநாற்பான்மை, யோலையெழுத்துயர்வுணராப் புதுப்புலவர்குழுவறியா துண்மைவெண்மை, வாலையருண்முற்பவத்தும் பெற்றபுலவோருணர்ந்து மகிழ்தற்பாற்றே.

வெண்பா

கள்ளக் கருத்தினர்க்குக் கைப்பாய்க் களங்கமின்றித்
தெள்ளத் தெளிந்தவர்க்கே தித்திக்கு—முள்ளப்
பலிக்குந் திருப்புகழைப் பாடுஞ் சரபங்
கலிக்குமயி லக்கலம்ப கம்.

இந்நூலாசிரியரது மாணாக்கர்களிலொருவராகிய

தி - செ. சித்திரபுத்திரபிள்ளையவர்கள்

இயற்றியன

அறுசீர்விருத்தங்கள்.

திருவருண் முருகதாசன் றிருப்புகழ்க் காரனெங்கள்
குருபரன் றண்டபாணிக் கோலமுஞ் சமைந்தமேலோ
னருள்வலிப் பெரியோர்போற்று மயிலொடு மயிலமேவிக்
கருணைசெய் கந்தன்மீது கலம்பக முரைசெய்தப்பால். (௧)

அதிநய வண்ணப்பாவே யாந்திருப் புகழுமற்றும்
பதிகமோ ரிரண்டும்பாடிப் பாலைய முனிக்குமன்னன்
றதிபகர்ந் தருட்போராண்மை தோய்சிவப் பிரகாசற்கும்
விதிமுறைப் பதிகம்பாடி மேதினி யுயச்செய்தானே. (௨)

எண்சீர் வண்ணவிருத்தம்.

தனந்தனந்தன தானன தனனா.

கலம்பகம்பல பாடிடுபுலவீர்
    கவின்பெறும்பொழி லார்திருமயிலா
சலம்புரந்தவிர் சேயசண்முகவேள்
    சரண்புனைந்துயு மாறுகொள்விழைவா
னலம்பொலிந்தநெல் வேலியில்வருவா
    னவின்றதொன்றுள தேயதனிடைநீர்
பொலம்பிறங்கயி னீபமொடணிதோள்
    புனைந்தவண்கவி நாடுதல்கடனே (௩)

இந்நூலாசிரியரது பத்தர்களிலொருவராகிய

உரத்தூர் சின்னுரெட்டியாரவர்கள்

இயற்றியன

வெண்பா.

மாமதுரச் செந்தமிழ்ப்பா வாணர்தமக் கன்னையாய்ப்
பாமருஞ் சீர்பெறச்செய் பாலைய - னுமகனோர்
தண்டபா ணிச்சரபந் தன்னைமயி லாசலத்திற்
கண்டளவி லுள்ளங் களித்து. (க)

கட்டளைக்கலித்துறை

குருநீதிக்கேற்ற முகமனுங்கூறிக் குழைந்தணைத்துத்
திருநீறுநெற்றியிற் றீட்டிநங்கந்தன் றிருவடியிற்
கருமாலைநீக்குங் கவிமாலைசூட்டெனக் காணரிய
பெருமானுரைத்தன னென்றேசந்தோடம் பிறந்தபின்னே. (உ)

இரட்டையாசிரிய விருத்தம்

அந்தமயிலாசலக் குகன்மகிழ்கலம்பகமு மணிதிருப்புகழிராறு, மநு தினஞ்சிறுவர்களு மாவலொடுமேத்துதற்காகுமிருபதிகங்களுந், தொந்த முறுமெய்ப்புகழ்ச் சிவஞானபாலைய சுவாமிபுனை பதிகமொன்றுந், தூயபுலமைச்சிவப் பிரகாசமுனியிசைதொனிக்கின்றபதிகமொன்றுங், கந்தவேளருளையுந் தனதன்பருக்குதவு கருணை பொலிகின்றபண்புங், கவி கோடியாயினும் பொழிவதற்கஞ்சாத காளமுகினிகர்மாட்சியுஞ், சந்தமலி யொலியலந் தாதியுடனெழுவகைத் தமிழிலக்கணமொழிந்த, தாட்டீக மும்பின்னுமுள்ளபலதகவுந் தழைத்திடமொழிந்தனனரோ. (௩)

குருவே துணை

பதிப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியசுவாமிகளது மாணாக்கரும் குமாரருமான

ஸ்ரீ - மு - செந்திநாயகம்பிள்ளை

இயற்றியது.

எண்சீர்விருத்தங்கள்.

திருமலியு மயிலமலைத் தலைமிசைவாழ் முருகோன்
றிகழ்புயத்திற் கலம்பகப்பா மாலைமுன்பாலையன்
பொருவிலுரைப் படிமுருக தாசகுரு நாதன்
புகன்றணிந்தா னதனையிந்தப் புவியினர்தேர்ந் துய்வான்
கருணைகொளப் பாலையன் சுதனும்பா லையன்
கவின்மிகுமச் சினிற்பதித்துக் கனவுதவி புரிந்தா
னிருநிலமுற் றவர்பெறவப் புத்தகந்தீர்ந் ததனு
லிரண்டாகும் பதிப்பினைநன் கினியதனை யாலே.

அந்தப்பா லையன்சுதனுப் பொன்னுசா மிப்பே
ரமைந்துதவ நிலைகொளும்பா லையனெனும் பெரியன்
சொந்தப்பான் மையிற்பொருளீந் தச்சியற்றிச் சோலை
துன்னுசிர வணபுராா மானந்த முனிவன்
வந்தற்பாற் றன்னிடஞ்சந் திதபெருங் களிப்பை
வளர்க்கவெளிப் படுத்தினன்பொன் மயிலுகைக்குங் கந்தன்
சந்தப்பாப் பதிகமுதற் சிலதுதிக ளதனிற்
சார்ந்தமைந்த வப்பெருமை சாற்றரிதா மன்றே.

குருபாதமேகதி.

முருகக்கடவுட்டுணை.

மயிலாசலக்கலம்பகம்.

பாயிரம்.

கொச்சகம்.

அன்றுசிவப் பிரகாச னரியதுதி தனக்கெய்தச்
சென்றுபகர்ந் தனைநாடிச் சிவஞான பாலையன்
குன்றுளுயர் மயிலமலைக் குமரனுக்குக் கலம்பகமொன்
றின்றுசொலத் திருப்புகழோ னிடத்திலினி திசைத்தானே

வெண்பா

ஆட்டிப்பால் வாய்மை யடக்கி யடுத்துவந்து
சீட்டுக்கு ளாடலொன்று செய்துபல—பாட்டுடைய
பாலையனை யேவியென்னைப் பற்றிவலி தாண்டுகொண்டான்
சோலை மிகுமயிலத் தோன்.

எண்சீர்வண்ணவிருத்தம்.

தனதனதத்தன தத்தத்தனந்தனு
சயிலமுழுக்கவும் வெட்கச்சிறந்தாரளுர்
தமதுருவொத்தரு விப்பொற்பிசைந்துளதா

மயிலமலைக்குக னுக்குக்கலம்பகநூல்
வனைகுவதற்குயர் சொற்கட்டுவந்தருள்வீர்
வெயிலவனுற்றவ யிற்றுச்செழுங்களிறே
வெளிறுமலர்க்குளி ருக்கைக்கிசைந்தவனே
யயின்மயில்க்குக்குட முற்செப்பநின்றனனே
யடியர்பதக்கம லத்துற்ற நுண்பொடியே.

நூல்.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

திருமகள்சேர் நெடுமாயன் செங்கமலக் கண்கடரு
மிருமடவார்க் கிடைநீடு மெழிற்பவள மலைபோல்வாய்
பரிதிமதி யிசைந்தாங்கு பகர்முடியு முகமொன்றும்
விரிகருணை விழிமூன்றும் விளங்குகுழைச் செவியிரண்டும்
வண்பனுவற் பைங்கிள்ளை மணநுகரு மணிநாசிச்
சண்பகமுஞ் சிறுமுறுவற் றரளநகைக் கனிவாயும்
பொற்பணியும் பன்மலரும் பொலிந்தகழுத் தொடைமார்பும்
விற்படுமின் னெனக்காணும் வென்றிவேல் வியன்சீரு
மடல்வயிரந் திரிசூல மபயம்வர தந்துலங்குங்
கடகநெடுங் கரந்தாங்குங் கவின்றோள்க ளொருநான்குங்
குஞ்சிமணிச் செஞ்சதங்கைக் கொத்தரையுங் கோசிகமும்
விஞ்சியபே ரானந்தம் விளைத்தருளுந் துணைத்தாளுங்

கொண்டுமயி லாசலத்தின் குவட்டிலுறுங் கோயிலிடை
மண்டுசடைச் சிவஞானி வலத்தமர வாழ்கின்றாய்
மயிலேறித் தகரேறி மழுவெள்ளைக் களிறேறிக்
குயில்போலு முமையாள்கண் குளிரவருங் குருந்தேநீ

இவையெட்டுந் தாழிசைகள்.

அரன்வழிபடமுன மருணலமருளினை
முரகரியமரர்முன் மொழிபுகழ்மருவினை
யயனமுதலமர வறமொடுகறுவினை
புயலிவர்மகபதி புனைமுடியுதவினை

இவைநான்கும் அராகங்கள்.

அன்பொடுமுன் றுதிகூறி யாறெழுத்தா லருச்சித்துத்
தென்பொதியைமிசைவாழ்வான்சிறப்பனைத்தும்பெறச்செய்தாய்
நின்றுமைத் தொன்றினையே நிதங்கூறச் சவியாத
மின்னுளென் றிழந்தகரம் விரைந்துதவி மீண்டுவந்தாய்

நற்கீரன் சிறைநீக்கி நவிலரிய தமிழுணிவான்
கற்கீறி யலகையையுங் கடியவடி வேல்விடுத்தாய்
முற்றுசுவைக் கவிப்பொய்யா மொழிப்புலவன் களிகூரப்
பற்றுமொரு கோலொடுமுன் பாலையின்முட் டையுமானாய்

தென்னருணைக் கோபுரத்திற் றிகழொருவன் றனக்காக
முன்னமொரு தூணிடத்தின் முளைப்பதற்கு மிசைவுற்றாய்
போரிநகர் முனிவன்முதற் புகலுமவர் புகல்கின்ற
சீரியவ ரளவில்லார் சிந்தித்த பேறளித்தாய்

இவையாறுந்தாவுகள்.

ஏனமருப்பற மோதிவதைத்தனே
யேழிசையிற்கவி கோடுதொடுத்தனே
மானவிர்கட்குரி யாரைமயக்கினே
மாசறுசிட்டிவி ஞேதமியக்கினே

இவைநான்குநாற்சீரோரடியம்போதரங்கங்கள்.

மாவடி யோடற வென்றனே
மால்வரை யாவினு நின்றனே
தாமத ரோர்வரி தாயினே
சாரணர் வாழ்வற மேயினே

இவைநான்குமுச்சீரோரடியம்போதரங்கங்கள்.

சேவல்பொ றுத்தனே
பாவம றுத்தனே
சிந்தையு ளுற்றனே
விந்தைகள் பெற்றனே

இவைநான்குமிருசீரோரடியம்போதரங்கங்கள்.

ஆதலில் - இது தனிச்சொல்.

கடலிற்பொருனையிற் கனலிற்றமியேன்
றிடமுடன்விடுத்த செழுந்தமிழ்ப்பனுவ
லனைத்துமீண்டொளிர்தர வளித்துமுன்னின்று
னித்துணைத்துயருஞ் சோரதோரி இத்
திருமலைக்குவட்டிற் செய்தபோரா

இருமலைக்கோயிலி லுரைத்தமாற்ற
மாதியபிறவு மலைத்தோரும்
பேதியாவண்ணம் லேசப்புரிந்து
கைச்சிலைக்குறவர் கவின்றருசாரற்
பச்சிளஞ்சோலைப் பரண்மீதிருந்தாண்
மதலையென்றியாவரும் வழுத்தவைத்துப்
பதநிழற்றருவாய் பரமெனவந்தேன்
விதிமுறைதவறி வெள்ளிலையென்று
கதிர்மணிவடமுலை கருத்துட்டோன்றப்
பழையபாவொன்று பகர்வான்றனையும்
விழைதருகருணை மிகையாற்புரந்தாய்
நின்றிருவுள்ளமெந் நேரத்
தென்றிசைப்பொழிக்கு மெனவிரங்கினனே. (க)

ஒலித்தாசிரியச்சுரிதகம்.

வெண்பா.

இரங்குந் திருவுள்ளத் தேற்றமுற்ற செவ்வேள்
வரங்களெல்லா நல்குமலைகேள்—குரங்கனைய
பாழ்மனமே பல்கோடி பத்தர் பரிசுபெற்று
வாழ்மயிலத் துள்ள மலை. (உ)

கட்டளைக்கலித்துறை.

மலைத்தெய்வமேபரமென்றெருப்பிடாச்சிலமானிடருஞ்
சிலைத்தெய்வம்வைத்துப் பலவாறுநாமங்கள் செப்பலென்றோ

நிலைத்தெய்வம்வாழு மயிலாசலத்தி னிறைபுகழ்நேர்
கலைத்தெய்வமானபிடியேவெண்டாமரைக் கன்னிகையே. (௩)

கலிப்பா.

கன்னிக் குந்த்தி கணவன் மயிலவெற்பை
யுன்னிக் கருத்தோ டுருகப் போற்றிசைக்கு
மென்னிட்ட மின்னதென யாரறிவா ரென்றனக்கு
மின்னிற் றிகழ்ந்தகதிர் வேலுமயி லுந்துணையே. (௪)

கலிநிலைத்துறை.

மயிலாசலத்துற்ற குமரேசனுக்கான வழிபாடதாற்
கயிலாயமொடுமேரு வரைமீதுவைகுங் கனற்கண்ணுதல்
பயிலாகமத்தைப்ப ழிக்கின்றதீயோர்கள் பகைமிஞ்சுநா
ஞெயிலாருமடவார்த மக்கிச்சைகொடுவாட லொவ்வாததே

கட்டளைக்கலிப்பா.

வாதநாற்பிணக் காளர்கண்காணரு
மலயமால்வரை மாமுனிதன்னருட்
போதவாரியின் மூழ்கிட நாடுவேன்
புந்திநொந்துபு லம்பிடலாகுமோ
வேதநான்முகக் கள்வனைக்குட்டிய
வீறுகொண்டொளிர் மெஞ்ஞானதேசிகா
மாதமோர்திரு நாள்வருஞ்சீர்திகழ்
மயிலமால்வரை வாழ்முருகையனே. (௫)

கலிவிருத்தம்.

ஐயமின்றிமுன் னறைந்தவாசகப்படி யருளி
மெய்யர்தம்புடை யுடுறஷிடுக்குநா ளுளதோ
வையம்வாரெனொடு துதிசெயுமயிலமா மலையின்
செய்யபொற்குவ டாமெனத்திகழ்தருஞ் சேயே. (எ)

அறுசீர்விருத்தம்.

சேயநாண் மலர்கொண்டுன்னைத் தினந்தின மருச் சித்தேத்துந்
தூயவர் கமலப்பூந்தாட் டுகளினி தணும்வீண்போமோ
மாயவன் மருகா விண்ணோர் மகள்புணர் கணவாவள்ளி
நாயகா மயிலவெற்பி னடஞ்செயு முருகவேளே. (அ)

எழுசீர்விருத்தம்.

முருகருமலர்க் கடம்பணிபுயத்தனை மூவிருமுகத்தானை
யருகர்பாழ்மதத் திமிரமிவ்வுலகைவிட் டகலவந்தருள்வானைப்
பெருகுசீர்த்திரு மயிலமா மலைமிசை பேணியபெரியோர்தங்
கருணைஞானமுஞ் சித்தியுமுணர்பவர் காலனுக்கஞ்சாரே. (கூ)

எண்சீர்விருத்தம்.

அஞ்சலளித் தாண்டபெருங் கருணைச்சீரு
மருணகிரி தானெனமீ யறைந்தசொல்லும்
வஞ்சகமென் றிகழ்வதற்கு மஞ்சுகின்றேன்
வருத்தமினிச் சகிப்பதற்கும் வல்லேனல்லே

னெஞ்சகத்தன் ஞுடியதை மறக்கமாட்டே
னெடுமயிலக் குவட்டினின்முன் னின்றேன் கண்பார்
பஞ்சவன்னச் சிகியூரும் பவளமேனிப்
பண்ணவனை யெண்ணரிய பான்மையானே. (கo)

இரட்டையாசிரியவிருத்தம்

ஆனமட்டிற்பணிபு ரிந்தனதுமெய்யன்ப ரகவயினிற்பு
கவிரும்பா, தணிநகைமடந்தையர்மு லைத்துணைநினைத்துருகி
யலமருந்தமியனேனை, யினருக்கெமனனைய வீரர்முதலோர்
களுமி றைஞ்சும்பதத்தில்வைத்துன், னெழில்வதனநிரை
குலவு மறுவகைநெறித்தலைவ னென்றெருளிரவுஞ்செய்
வையோ, கானவக்குடியிலொரு கருகூலமெனவந்த கன்னிக்
கிசைந்தகணவா, கனகநகராதிபன்வ ளர்த்தபிடிகண்டுளங் களி
கூரவருகந்தனே, வானளக்குங்குவடு தொறுமிழியுமருவிபல
மாலிகையெனக்குலாவு, மயிலாசலத்தில்வரு புலவோர்துதிக்கு
மொரு வடிவேல்பிடித்தகுருவே. (கக)

புயவகுப்பு.

தனன தான தத்த தன - தானத்தனந்தன.

குருபராவெனத்தினமு முருகிநாடுமெய்ப்புலவர்
கொணர்வதானமுத்தமிழை நேசித்துயர்ந்தன
குரவநீபமுற்பகரு மளவிலாமலர்த்தொகுதி
குலவுமாலிகைத்திரள்கள் சூடிப்பொலிந்தன

குறைவுறுவொளிப்பரிதி யனையதோளணிப்பகுதி
கொடுபல்பூணொடுததொருமு நூலுற்றிலங்கின
குலிசமுவிலைப்படைவில் கணைவைவேன்முதற்பலர்சொல்
குருதிபூணுடைக்கருவி சேரச்சுமந்தன
குகுகுகூவெனத்தனது சிறகைமோதடற்பறவை
குளறிடாமொழிக்கிளியொ டேறிப்பிறங்கின
குளிரும்வாவியிற்கவுரி முலையினோடுகிர்த்திகையர்
குயமுமார்வமுற்றமுத மீயப்பிசைந்தன
கொடியராவினைப்பகலை யுலகின்மாறிவைத்தமரர்
குழுவெலாமெதிர்த்தமர்செய் தோடக்கவின்றன
குறளைநாரதத்தவசி முயலும்வேள்வியிற்றகரொர்
குதிரையாகிடக்கசையி னால்விட்டுவந்தன
குடையதாமெனக்கலப நிழல்கொண்மாமயிற்கடவல்
குணமெனாநினைப்பவர்க ளொடுற்றவிர்ந்தன
குமிழிதோய்மதத்தயில மொழுகும்வாரணக்களிறு
குதறினாலெழிற்றலையின் மோதிச்சிவந்தன
குவளைநேர்விழிச்சசிமின் மருவுவான்வளர்த்துதவு
குமரிபூண்முலைக்களப மாரக்கமழ்ந்தன
கொடியினூடுவைத்திறுக முடியும்வார்தழைக்கலைகொள்
குறமினாளணிப்பரண்மு னேகிக்குவிந்தன
கொலைசெய்வாள்விழிச்சிறிய மகளிர்பார்வைமெய்த்தவர்கள்
குலைவுறுமனக்கவன மீறப்பொருந்தின

கொடுமையேமிகப்புரியு மவர்கள்வேரறக்கறுவு
குறியுளார்தமக்கிழிவு றுமற்புரந்தன
கொடையிலாழுழுக்கயவர் மனைகடோறுமுற்றடியர்
குறுகிடாதருட்கடலின் முழ்கச்செய்பண்பின
குசையுநாணுறக்கதுமை யுடையமிபாமெனப்பெரிது
குதிகொள்வேனுளதநினும நாள்சற்றொளிர்ந்தன (வ)
வருவவாதமிடடுமுழு மவர்கள்போகமற்றவர்க
ளணுகுமாறிரட்டியந னீதிக்குமொன்றின
வணிகொள்வார்செவிக்குழைக ளுலவுசீர்பொறுத்தழிவி
லசலமேயெனக்கவிஞர் பேசக்கிடந்தன
வடலையாருடற்பரமர் பிரணவாகரப்பொருளை
யறியுகாள்புனற்சடில மேறிக்குளிர்ந்தன
வகிலலோகமுற்பருகி யுமிழுமால்வயப்படையை
யடையுமாறியற்றியநல் வீறுற்றெழுந்தன
வரியநான்மறைக்கிழவ னுடலில்வேர்வைவிட்டலறி
யவசமாகிடச்சிறிது கோபிக்கைகொண்டன
வமரர்கோன்மிகப்பயமொ டிணையில்காவிரிக்கரையி
லமையெனுவுருப்பெறுத நீரப்புரிந்தன
வடல்கொள்வீரருட்டலைவ னொருவனீசுரக்கணைகொ
டவுணர்கோனினைப்பழிதல் காணச்சிறந்தன
வலரும்வாரிசக்கடவுள் வரமதானுவப்படையு
மவர்கண்மேலெதிர்த்தவனை யாளப்புகுந்தன

வளவின்மாயைவெற்புருவ முடையதானவப்பயலை
யணுவைநேர்பொடிப்படமு னொட்டுகின்றன
வழலும்வாய்விடக்கடிது பொருதகாருகக்கொடிய
னழியவேல்விடுத்துலக மோதத்திகழ்ந்தன
வறிவினான்மிகப்பெருமை யுடையகோளரித்தகுவ
னறையும்வாசகப்படிய னேனைத்தடிந்தன
வலையகோதநிக்கிடையி னெடியமாமரத்துருவொ
டவிருவானையப்பொழுதி லேவெட்டுமொய்ம்பின
வமலயோகநத்துவசின் மயசிவோகமுற்றவர்த
மரசனுமகத்தியனை நேர்முத்தரன்பின
வயர்வுறுமலெக்கணமு முருகனேயெனப்பகரு
மவள்கைவேறுபட்டதனை யிதற்கிரங்கின
வலகையான்மிகத்தளரு மொருவனேடுபரப்பலரு
மவிவுறுதுகற்கதவு கிறப்பிளந்தன
வதிகவாழ்வுடைப்பழைய மதுரையூரினிற்புலவ
ரலமராதுகைக்குறியி னல்லைத்தநண்பின (௭)
கருதுமாறுமுற்குலவி யுதவிடாதபொற்குவடு
கதறமோதிடத்தகுதி யாவுற்றசெண்டின
கடலையேவிடத்துணியும் வருணனார்தொழத்தனது
கதிர்குலாவுசத்தியினை வீசிக்கனன்றன
கனகநாடுடைத்தலைவன் வலியதூதரைக்கொடுசெய்
கபடமானதிற்சிறிது கோவற்றிருந்தன

கவிசொலேனெனத்தினமு நவல்பொயாமொழிச்செந்திரோர்
கரியகோல்பிடித்திசையு மாடற்பயின்றனை
கனலதாமலைக்கருகி னிலவுகோபுரத்துயுமோர்
கவிஞருஞறியிற்பகர்பல் பாடற்றுறைகந்தனை
களிறுநாணுறத்தொனிசெய் பணுவலாரொருத்தனது
கலியின்வேரறத்திருடி யியத்துணிந்தனை
கலைவலார்மிகப்புகழு மிசைகொள்போரியிற்றவசி
கவலைதீர்வதற்கொருக வாசத்தியைந்தனை
கறையில்பாலையற்குவகை பெருகவோர்கவிக்குரிய
கனவிஞர்மலர்க்கொடுசெல் வாரதத்தமிழ்ந்தனை
கழுழனர்கையிற்றலையை நிருமலாநதிக்குரிய
கரையில்வீசுமுற்கடிதி லேகிக்கவர்ந்தனை
கழறுமேழ்வகைப்புவியி னுயிரெலாமழத்தனது
களியினுன்மிகக்குதிகொ ளேனத்தைவென்றனை
கயிலையீசனைபொருவு முனிவன்வாய்மொழிப்படியோர்
கடவுண்மாமணிச்சுடிகை வீழத்துரந்தனை
கனியெண்மோதகக்குவிய லனையவேமிகப்பருகு
கரியினீள்வயிற்றிரவி மேவக்கடிந்தனை
ககனமாநதிப்புனலை யனையநிரைழைத்துமைகொள்
கனவிடாயறச்செயும்வி ஞேதத்தொழும்பினை
கமலவாவிவிட்டெழுமோர் முதியதாதையுட்கருது
களவுதீர்தரக்கரம தான்மெய்ப்புகன்றனை

கவளயானையொத்தொளிரும் வழுதிகூன்விடச்சுரமொர்
கணாநிலாதறத்திருவெ ணீறிட்டுகந்தன
கடுவைநேருடற்சமண முனிவராமுழுக்கொடியர்
கழுவிலேறிடத்தமிழை வாரிச்சொரிந்தன (௫)
பருவருமலர்க்கணைக ளஸில்கோடிதைத்துருகி
மகளிர்சேனையிற்குரிமை மீறிப்புணர்ந்தன
மதுரசாகரத்தமிழை யுதவுசீருடைப்பொதியை
வரையின்வாணர் மெய்த்தவசு போலப்படர்ந்தன
வகுளநாண்மலர்த்தொடையல் புனையும்வேண்முதற்சிலருண்
மகிழ்வெலாமறப்பெருகு கோலத்தமைந்தன
வரதமானதைப்பொருவி லபயமானதைக்கொடுதன்
வலிமைநாடுமுதநடமி சாரதைதவிர்ந்தன
மறவனேடுகைச்சமர்செய் திரவிலோர்கொடிக்குவகை
மலியுமாறெழிற்கயல்கண் மீறக்கொணர்ந்தன
மறதியாலுணக்களியின் முடுகுவான்வெளிப்படவு
மனையின்மேயதிற்சிறிதி லாறப்பகிர்ந்தன
வயதினாலுமிக்குயரு மவன்முனைவலிற்கடியின்
மணைவிலோர்பழத்தினைய நாள்விட்டெறிந்தன
மறுவிலாவரைக்கவிதை யொருவனேதலிற்பனிய
மரமதூடுகொப்பொடிவ தாகதெரிந்தன
மனையலாதுமற்றவரை யனையெனுநினைப்பவன்முன்
மணியிணுவறப்பகர்த லாதிக்கமர்ந்தன

வனசலோசனத்தொருபெண் முடியின்மேல்விழத்தகுகல்
வழுகுமோர்படிக்கடியி லேகிற்கைகண்டன
வயிணவாதரத்தொருவ னிசையுநாளின்முற்புனேயும்
வளேபமாமடற்றளே க ளோவத்தொடர்ந்தன
வயிரவாதிகட்களவி னிணமுமுனுமிக்குதவும்
வலியபோரினுக்குரிய வீரத்தழுந்தின
மனதுவேறுபட்டிடுத லிலதுநாடிநிற்பவர்கண்
மறலிதூதருக்கயர்வு றுமற்றிரிந்தன
மலேயிலேறிமுற்புலியி லுருளுமாணவச்சிறுவன்
மடிவுறுதெடுத்துலகி லேவிட்டவம்பின
வரியராவினத்தரசர் பலர்சொனூலுமுற்றுதலின்
மகிமையாண்மையொப்பனவெ லாமுற்றடர்ந்தன
வளமைசேர்திருப்புகழை மொழிகுவார்களுக்கெளிய
மயிலமாமலேக்குமரன் வாகைப்புயங்களே (கஉ)

வெண்பா.

புயலார் மயிலமலேப் புண்ணியமே போல்வான்
கயலார்கண் வள்ளி கணவ—னியலாரப்
பாடுமடி யேன்றனக்குப் பத்தர்மனப் பங்கயந்தோ
ருடுமடி யேன்றமாட் டான். (கங)

கட்டளேக்கலித்துறை.

மாட்டாதவென்னே வலியவந்தாட்கொண்டு வண்கமலத்
தாட்டாமரைத்தொண்டு செய்யென்னமுன்புதடுத்து நின்றுன்

கேட்டார்மகிழ வரங்களெல்லாந்தருங் கீர்த்திகொண்டு
பாட்டாலுயர்மயி லாசலத்தோங்கயிற் பண்ணவனே, (கச)

அறுசீர்விருத்தம்.

பண்குலவுசெந்தமிழா ளின்கமலத்திருவடியே பரவு மென்முன், கண்குலவுகோதைமயிற் பரிமீதிலொருதரநற் காட்சியீந்தாள், பெண்குலவுமொருபாகப் பிஞ்ஞகனுக்குபதேசம் பேசும்வாயாய், திண்குலவுமயிலமலைக் குருபரனே வேலணியுந் திரடோட்சேயே. (கரு)

எழுசீர்விருத்தம்

சேயமாமுகங்க ளாறுடைக்குமர தேசிகன்றிருக்கை வேற்பெருமான், றாயவெண்சேவற் கொடியணிந்தாடுஞ் சுப்பிரமணியனையன்றி, மாயவன்பரமன் கணபதிமுதலாம் வானவரிலையெனவுணர்வார், தாயகமான மயிலமாமலைச்சீர் சாற்றிடத்தக்கவரெவரே (கசு)

எண்சீர் வண்ணவிருத்தம்.

தனன தந்ததன தனதன தத்தன.

எவர்களும்புகழு மயிலமலைக்குக னெனமொழிந்தவன திருசரணத்திடை, தவமுபன்றுறைபு மனமுளவித்தகர் சீமையடைந்தவர்கள் பெறுவனசெப்பிடி, லவனியெங்குநிறை தருபுகழ்சத்திய மதிவிதங்குலவு மதுரநயத்தமிழ், சிவன்முகுந்தனயன் மகபதியொப்பவர் திறமையின்பமலி சமரசமுத்தியே. (கஎ)

இரங்கற்றுழிசை.

முத்தமனையாகைமடவீர் மொழியக்கேளீரென்கனவின், முன்னமொருநாண்மயிலமலை முருகக்கடவுள்வலியவந்து, சித்தங்கவர்ந்தான்வளைகவர்ந்தான் சேலைகவர்ந்தான்றிறல்கவர்ந்தான், சிறிதுநாணமில்லாமற் றேடித்திரிந்துதிகைக்கவிட்டான், பைத்தவரவக்கடிதடமும் பணைத்தமுலையுமதவேளும், பாவைத்தொனியும்பிறவுமெனைப் படுத்துந்துயரஞ்சகிக்கரியே, னெய்த்தகுராவங்குவளைவெட்சி நீபமுதலாமாலைகளி, னேருமொன்றையெனக்காக நீர்போயிரந்துகொணர்வீரே. (கஅ)

வெண்பா

வீர வடிவேற்கை வித்தகனை வெள்ளிமலைக்
காரன்விழித் தீயில்வந்த காரணனை—நீரருவி
கொட்டுமயி லாசலத்திற் கும்பிட்டுக் கொண்டபின்னு
மிட்டுமயி லாரிடஞ்செல் லேன். (கசு)

கட்டளைக்கலித்துறை.

ஏனலங்கானிற் பரண்மீதிருந்த விளங்குறத்தி
பானலங்காமர்க் குருகிப்பணிந்தவன் பண்ணவர்க்கா
வீனலங்காதிபற் செற்றோன்மருக னெனத்துதித்து
நானலங்கான மயிலாசலத்தினை நண்ணினனே. (உ0)

கலிவிருத்தம்.

கண்ணல்கண்டு நமக்குமயிலம்வா
மூண்ணலோர்வர மாயினுநல்கிலான்

கின்னரநேர்முலைக் கிர்த்திகைபாலனுகர்
வன்னாவாய்ச்செயல் வன்மையில்வன்மையே. (௨௧)

கலிப்பா - கைக்கிளை.

வன்ன முலைத்துணைமைய வாய்மொழியைத் தாழ்குழலை
நன்னயஞ்சேர் கண்ணிணையிக நம்புமென்னை நத்துகில்லாய்
கன்னல்விற்கை மாரன் கடும்போர் விளைக்கின்ற
தென்னடிநான் செய்வே னெழின்மயிலைத் தேந்திழையே.

நெஞ்சுவிடுதூது - தாழிசை.

ஏந்துபூண்முலை மங்கைமார்களே யேவிருலவர் தங்களுக்
கின்பமெய்திட வாடிவாடியி றைஞ்சுவாரெழில் வண்டினம்
பூந்துணர்க்கடம் பாரமீதுபொ லிந்ததேன்மிக வுணர்தென்
புந்தியின்றிம யங்குமஞ்சுகம் பொற்புயத்துற நற்கிளி
வேந்துடன்கரி கூருநாரைகண் மெல்லனப்பக ராதுபோ
மேகமாதிய யாவுமென்றன்வி ருப்பமுற்றுரை யாதவே
நிந்தற்கரி தாகுமென்றுயர் நெஞ்சநீபறி கின்றையா
னீடுசீர்மயி லாசலக்குக னேரினின்றுநி கழ்த்திடே. (௨௨)

நேரிசையாசிரியப்பா.

திகழ்த்தரும்பெருமை நிலவுதென்மலயத்
தகத்தியமுனிவற் கருளியவீறும்
பண்டுநற்கீரன் பருவரலொழித்துத்
தொண்டுகொண்டவிர்தரு தூயபுகழும்

கருணையேவடிவ மாகக்காண்டரு
மருணையூர்ப்புலவற் களித்தசெந்தமிழங்
கடனடுவிழிந்து கரைமடத்தவிர்தரு
திடமலிபாலைய னாதியசித்த
ரெண்ணிலார்க்குதவு மெழிற்பெருஞ்சிறப்பு
நண்ணிநின்றன்பா னானும்வந்தடுத்தே
னென்பெருங்குற்ற மியம்பரிதாயினு
நின்பெருங்கருணை நினைக்கரும்பாற்றாற்
றவிர்க்குமென்றுன்னித் தமிழ்கொடுசிந்து
கவித்தொடைவனையக் கருதினனாதலி
னைஞ்ஞிறக்கலாபத் தணிக்குடைபரிக்கு
மஞ்ஞைவாகனத்தின் மரகதவன்னக்
கிள்ளையோர்பாகங் கிளர்தரவொருபால்
வெள்ளைமால்களிறு மேனாள்வளர்த்த
பொன்னிறத்தன்னம் பொலிதரநடுவி
லுன்னியபதினா றுருவிலொன்றெடுத்துச்
சேவலுந்தண்டுந் திருக்கைவேலும்
பாவலர்பனுவல் பகர்வனபிறவுந
திகழ்தரவந்தருட் சேவைநல்கிப்
புகழொடுதவமும் பொருந்தவைத்தருள்வாய்
தென்னையுமாவுஞ் செருந்தியுங்குருந்தையும்
புன்னையும்பிறவும் பொலிதருசாரற்
குயிலினம்பாடக் குரங்கினங்கொட்ட

மயிலினமாடும் வளந்திகழ்மயில
மாமலைக்கோயில் மயினினிதமருங்
கோமளக்குமர குருபரக்குகனே. (உ௪)

வெண்பா.

குகனே மயிலமலைக் கோமானே யீசன்
மகனே யெனத்தினமும் வாழ்த்தி—முகமாறும்
பன்னிரண்டு தோளும் பதமிரண்டு நாடுநர்முன்
னென்னிரண்டு கைகுவியு மே. (உ௫)

துறை - கட்டளைக்கலித்துறை.

குவிக்குங்கைத் தொண்டரைக் காப்பான்மயிலக் குவட்டிறைவன், செவிக்கின்றுயரமெல் லாமுரைத்தாடருஞ் செய்பதமை, கவிக்கின்றதிங்கட் குடைமதவேடன் கணையைவென்று, புவிக்கணிறைந்த புகழ்வானத்தூடும் புகச்செய்ததே. (உ௬)

மடக்கோச்சகக்கலிப்பா.

புகழனந்தமுறவாக்கும் பொருளுநல்குமுறவாக்கு
மிகலறுக்குமயிலமலை யிடஞ்சேர்க்குமயிலமலை
பகனெனினுங்களித்தாளும் வண்கொடிதூங்களித்தாளு
மிகவணிதற்செயவேளே வினைவிலக்குஞ்செயவேளே. (உஎ)

கலிவிருத்தம்.

வேளைக்குத விடுமெய்ப்பொருள் வினைவேரற வென்று
தாளைத்தலை மிசைவைத்தரு டருசண்முக முருகோன்

வாளைப்பொரு கண்ணுருடன் மகிழுந்திரு மயில
நாளைக்கெனு மொழியின்பய னணுகச்செயி னலமே. (உஅ)

அறுசீர்விருத்தம்

நலங்குலவுமயிலமலைக் குமரேசன்றிருவடியை நண்ணி டாம, லிலங்கொடாழுஞ்சென்றிரந்து பட்டசாமித்தனையென் றியம்பப்போமோ, கலங்கரியநெஞ்சசத்தோ டாறெழுத்தைத் தினந்தோறுங் கருதியன்பாற், றுலங்குபுகழ்க்கடன்மூழ்குங் கவுமாரர் வேடமிகத் தோய்ந்த நானே. (உகூ)

எழுசீர் விருத்தம்,

நானுநீயுமற் றனைத்துமொன்றெனப்பல ஞானநூல் சொலக்கேட்டு, முனுமாவியு மொன்றெனுந்துணிவுகொண் டுழன்றிடவிடலாமோ, தேனுமாவுமுன் றருமொருகுறமகள் சிறுபதம்பணிந்தோனே, வானுளார்வரும் பொழின்மிகுமயி லமா மலையுடைக்குகவேளே. (ஙூ)

எண்சீர்விருத்தம்

வேள்விடும்பூங் கணைகள்வந்து தைக்கமேனி
மெலிவடைந்து வெண்ணகைவாய் மின்னுருண்கண்
வாள்விடத்தா லிறந்தமுதாற் பிழைக்குஞ் சிந்தை
வசமாமென் றனக்கிரங்கா வன்மையாதோ
கேள்வியுற்ற சிந்தைமொழி போதாதேயோ
கிளிதானென்றெனைப்பலகால் கிளத்திலாயோ

கோங்விலக்கு மயிலமலைக் கோயிலானே
குன்றுதொறுநடமாடுங் குலததாட்கோவே. (௩க)

மடக்குக்கட்டளைக்கலிப்பா.

கோவில்கொண்ட குறிஞ்சியிராகமே
கூறக்கேட்கை குறிஞ்சியிராகமே
வீவின்மேனி முதிர்ந்தவராகமே
வென்றுமீண்ட தெதிர்ந்தவராகமே
காவிசெங்கடம் பப்புயமாலையே
கானவள்ளிக ணம்புயமாலையே
யாவியென்பவர்க் காட்சிமயிலமே
யன்பர்வேண்டருட் காட்சிமயிலமே. (௩௨)

துறைடிவஞ்சிப்பா.

மயிலெனநடித் தயிலெனவிழித்
தொயிலுறநடந துயிர்கவர்பவ
ரிருபூண்முலைக் கருதாமருண்
டருளாவலற் றிருள்பாழ்மனம்
போலும்பதஞ் சாலுங்கவி
மாலுண்டுளார் பாலுந்தினந்
தேனெனவினித் தூனையுமுருக்
கினமில்கவி யானவில்கிலே -.னிதனுற்
செந்தகைக்கிரியெனச் சிகிமேல்
வந்தருள்செயத்தகு மயிலத்தரசே. (௩௩)

பதினான்குசீர்விருத்தம்.

சேயநின்முகங்கள் பூதமோரைந்துந் திகழ்பரப்பிரமமு மாகுந், திறன்மலிதிரடோ ளகம்புற்மெனநூல் செப்பியபன் னிருசமையந். தூயவர்விரும்புந் திருவடித்துணைபல் சுருதி யாகமப்பொருண்முடிவு, துங்கவேலுலகைத் தருமவண்மற் றுஞ் சொலும்படையுருத்திரத்தலைவர், மாயவன்முதலோர் வணங்கிடுமொருவன் மயிலுடன்சேவலுமீசன், மலயமாமுனி வன் பாலையனனையார் வழிபடுஞ்சீடரிவ்வாறே, யாயசீரனந்த முடையநீவெளியேற் கருள்செயாதிருப்பதுமுறையோ, வரு விசூழ்மயிலா சலப்பெருங்கோயிற் கழகியகுமரநாயகனே.

வெண்பா.

நாயிற் கடையாகி நானிலத்து ரத்தனைக்கும்
போயிற் றொறுமிரக்கும் பொல்லேன்றன் — வாயிற்
றமிழ்மணக்கச் செய்தபிரான் றையனல்லார் கொங்கைச்
சிமிழ்மணக்குந் தென்மயிலச் சேய். (நரு)

கட்டளைக்கலித்துறை.

சேயிலங்குந்திரு வுள்ளமுள்ளீ ரொன்று செப்புகின்றேன்
கோயிலங்குன்றக் குறிஞ்சியெங்கெங்குங் குறுகிநொந்து
வாயிலங்குன்றி வருந்தாமலெங்கண் மயிலவெற்பின்
மேயிலங்குங்குமக் கொங்கைமின்னார்பொன் வெறுத்துய்மினே.

மடக்கு - தாழிசையிரங்கல்.

மின்னிலங்கிய வேலனென்சிறு மின்னிணைக்கட்வி ருப்பி லான், மேவலார்க்கெம னேவேண்மகண் மேவநாடுத லோர்கி லான், பன்னிரண்டுசெ விக்குகன்சிலர்பன்னிடுஞ்சொல்வி ளுவிலான், பாடுவார்க்கருள் கந்தனீங்கிவள் பாடுகண்டுப ரிந்தி லான், மன்னிடும்புகழ்ச் சேந்தனேங்கணே மன்னிடும்பைம றுக்கிலான், வாரணக்கொடி கொண்டசேய்முலை வாரணத்து யர் மாற்றிலான், வன்னிசேர்கரத் தண்ணலார்மகன் வன்னி னைப்பைவி டுக்கிலான், மயிலமாமலை வள்ளலியான்பெறு மயி லின்மட்டினில் வஞ்சனே. (௩௭)

அம்மானை - வெண்டளை

வஞ்சமெல்லாந் தீர்க்கு மயிலமலை வாழ்முருகோன்
கஞ்சனரி யீசனுக்குக் கண்டனன்கா ணம்மானை
கஞ்சனரி யீசனுக்குக் கண்டனனே யாமாகிற்
கொஞ்சங் கருமங்கைக் கொண்டதே னம்மானை
கொண்ட தமரக் குலத்தினரா லம்மானை. (௩௮)

தாழிசையிரங்கல்

அம்மானையாடிக்க ழங்காடிமுத்தாடி யணிமேவுபந்
தாடிச்சிறுசோறு விளையாடி வெயூர்வாடி யயர்வின்றியே
செம்மானம்வருமட்டு முச்சில்வைத்தாடிச் சிரித்தாடியென்
சேலைதொட்டாடித் தினந்தோறுமறவாது சீராடுவாள்

பொய்ம்மானுடன்போன வன்றங்கைமைந்தனைப் பொறிமஞ்ஞையிற்
புகழ்கொண்டமயிலாசலச்சாரலிற்கண்டபோதேயெனைச்
சும்மாவிராதேய வன்பாலெனக்கான சொற்சொல்லெனச்
சொல்லத்துணிந்தாளுறங்காளொனொருசகந்துடிக்கின்றதே.

வஞ்சிவிருத்தம்.

துடியடிக் களிற்றின் றோழனை
யடியர்சூழ் மயிலத் தண்ணலை
வடியயிற் கரத்து வள்ளலைக்
கொடியனென் றுரைக்கக் கூடுமோ. (௪0)

கொச்சகக்கலிப்பா

கூடுமவர்க் கருள்வோனைக் கூடாரைக் கொல்சேவ
லாடுமருட் கொடியானை யாடாம லசைப்பானைத்
தேடுமன்பர்க் கெளியானைத் தேடாரைத் திருத்தானைப்
பாடுநருண் மயிலத்தைப் பாடாதார் பதர்தாமே. (௪௧)

ஊசல் - எண்சீர்விருத்தம்

தாமரைக்கண் முகுந்தனென வளர்ந்துகாட்டுந்
தனிமயிலா சலக்குவட்டிற் றவத்தோர்போலுந்
தூமணிமண் டபத்திருமகளிரோடுந்
துவர்மேனி யெழிலோங்கத் தொண்டர்சூழ
வேமவட்டம் பூண்டவிர்செம் மணிப்பீடத்தி
லெழுந்தருளி யினியதமி ழிசைகேட்டும்பர்க்

காமகளி ரங்கைவழி யாடீருச
லயில்வேற்கைப் பெருமானே யாமெருசல். (௪௨)

இன்னிசை வெண்பா

ஊசற் குழையாடவார்க் குள்ளத்தை பொப்புவித்து
நாசப் படாத நலமளிக்க வல்லாயோ
மாசற்ற தென்மயில மாமலையில் வண்டுமொய்க்கும்
வாசக் கடம்பணிந்தே வா. (௪௩)

கட்டளைக்கலித்துறை.

தேவருக்குஞ்சசி கேள்வன்றனக்குஞ் சிவன்முதலா
மூவருக்குந்துணை யாமுருகாவென் று முன்னுமன்ப
ரியாவருக்கும்பொது வாய்மயிலாசலத் தெய்தினர்க்கே
பூவருக்குந்தள ராவுண்மைஞானப் பொருளெய்துமே. (௪௪)

கலிநிலைத்துறை

பொருசேவலணிகொடி மயிலாசலத்தெந்தை பெரிதுவாய்மையிற்
றருசேவையொருவாறு பெற்றோர்மலர்த்தா டலைக்கொள்வதே
குருசேவைமுதலாய பலபேறுமென்னுங் குணத்தோர்களாற்
றிருசேருமருமத்தன் முதலாகநூல்சொன்ன சிலருய்வரே. ()

அறுசீர் விருத்தம்

உப்பகல்வரந்தந் தாட்கொண் டுலகரோடுழலாவண்ணஞ்
செய்யநின் புகழேநாடுஞ் சிந்தையுந் திகைக்கலாமோ
பைபர வருந்துந்தோகைப் பரிநடம் பயிலுஞ்சோலை
மையறு மயிலக்குன்றில் வதிதரும் வள்ளையானே. (௪௬)

பாண் - நாழிகை.

வளமலிந்த மயிலவெற்பின் மன்னரென்னை முன்னைநாள்
வலியவந்தி ரந்தணைந்த வண்மையொன்று மறிகிலா
யளவிலாத வுண்மைசொல்லி யவைமறந்து வஞ்சமா
யவரிருக்கை நீதமென்ற றைந்திடத்த காதடா
பளபளத்த வேலணிந்த பன்னிரண்டு தோளிலென்
பாவிநெஞ்சி ருந்தும்வேறு பாவைமாரை நாடினார்
களவினீயு ரைத்ததூது போதுமீடில் பாணபோய்க்
கந்தர்பாலு நெஞ்சறிந்த கன்னியென்று பன்னிடே.

தவம் - வேற்றெலிவேண்டுறை

பன்னிரண்டுதோளானைப் பவளமலையனையானைப் பழுதிலாறு
சென்னியுடைக்குருபரனைத்திருமயிலக்கிரிபுரக்குஞ்சேயைநாளு
முன்னியுன்னி யுறங்கியுறங்கிடா
நன்னிலைத்ததவ ஞானிகட்கானதே. (௩அ)

எண்சீர்விருத்தம் - கட்டு

ஆனையுருவானதிரு ஞானமிசை தோன்று
மழகியசண்முகத்தொருசெங் குழவியினைமுன்னாள்
பூனையுய்யச்செய்தானைத் தேனைநிகர்பாடற்
பொழிவாருக்கருள்புரியும் விழிமூவாறுடைய
கோனைநெடும்பனிவரையின் மேனைமகடன்னைக்
கொற்றவைவேலெனக்கரத்திற் பற்றவல்லகுகனை

பானையொக்கும் விழியார்கண் டனமுறப்பவனி
வரும்பரனை மயிலவெற்பில் விரும்பியதென் மனமே. (௪௯)

ஒட்டையாசிரியவிருத்தம்

மனமுனது திருவடியை யல்லாது மற்றொன்றில் மருவா
திருக்குமியல்பும், வாக்குனது புகழன்றி வேறுவிதமொன்றை
யும்வ ழுத்தாதவண்மைநெறியுக, கனபணிபுனக்கன்றிவே
றொருவருக்குமுயர் காயமுயலாததிலையுக, கமழுமபனீரிலை
யில் வைத்தவெண்ணீறுகொடு கடையனேற்கமையவருள
வாய், புனமறமடந்தையொடு பொன்னகர்ப்பிடிதழுவு புய
நிரைபொலிநதபுனிதா, புனலிகுரவங்கடம் பிநநிவரரு
செச்சை பொற்பணியுடன்புனைநதா, யனவரதநடநவிலு மரக
தமயூரத்தி லயில வேலெடுத்துவருவா, யணிமயிலமலையினது
தலையினிதம்விளையாடு பானைநதமுருகேசனே. (௫0)

வெண்பா.

ஏசகன்ற பல்பாட் டிசைநதபுகழ்த் தோள்களிலென்
மாசடைந்த சொல்லும் வணைவானை - யீசனுக்குச்
சொன்னதனைக் கிள்ளையொடுஞ் சொல்லிமயி லாசலத்தின்
மின்னவிர்வேல் பற்றிநிற்கும் வேள் (௫க)

கட்டளைக்கலித்துறை.

வேளஞ்சித்தன்னுரு மாறித்திரிய விளங்கெழிற்சேய்
வாளஞ்சிறந்தகண் ணார்நடமாடு மயிலவெற்போன்

காளஞ்சிறிதுமில் லாப்பொருள்கேட்டுப்ந்த கண்ணுதல்பாற்
றுளஞ்சிவிகைபெற் றுத்துதிபாடிய தன்மையென்னே. (நெ௨)

கலிநிலைத்துறை

என்னேயழு நின்றிருக்கூத்து மிரண்டுமொன்று
யின்னேகளி கூரவைக்குந்திற லில்லைகொல்லோ
மின்னேர்சடை யான்முதலாகிய மேலவர்க்கோர்
மன்னேமயி லாசலக்கோயிலில் வாழ்பிரானே. (நெ௩)

அறுசீர்விருத்தம்

இரங்கல் - சிலேடை

வாழுங்கிளையி னிலைநீங்கி வளர்மென்முகைபா முலைபசந்து
சூழுமணையா ரிடைநாணிச் சோர்ந்துவாடித் தளர்வெய்தி
வீழுங்காய மிகக்காய்ந்து வேனிற்சகியா வியன்கோங்கென்
பாழுமகள்போன் மயிலமலைப் பவளக்குகன்மால் படைத்த நாளே.

களித்தாழிசை.

படையாலொரு முதுசூருடல் பப்பாதிய தாகப்
பண்ணுங்குகன் மயிலாசல நண்ணுங்களி யுடையே
முடைநாறிய வூனுண்பவர் முன்னேகியு நில்லே
முதிர்செந்தமிழ் மொழியுஞ்சில முனிவர்க்குற வாவோம்
விடையேறிய பரமன்றலை மீதுமுப லகனும்
விறன்மாயவ னதுசெங்கையின் மிளிர்கின்றவை யேவும்
மடையாளமெ னக்கூறிடு மவருக்கிழி வுரையே
மயன்மாதைவெ றுக்காதவ ரறையும்புகழ் நமதே. (நெ௫)

எழுசீர்வண்ணவிருத்தம்.

தனதந்தனதன தானன—தனதான.

நமனஞ்சியபெரியோரவர் தவமிஞ்சியபயனுமென
நவிலும்பனுவலைநாடொறு—மிகழ்தீயோர்
நமரென்றுழல்வதுபோயநு தினநின்பணிபுரிவேனொரு
தரமிங்கிதமயின்மேலெதிர்—வருவாயே
குமரன்குருபரன்வேள்குகன் முருகன்சரவணநீர்தரு
குழகன்றனையெனவோதுநர்—செவியூடே
யமலன்பெறமொழிதாரக விபரஞ்சொலிமயிலாசல
மதினின்றருள்பொழிசீர்திகழ்—கிழவோனே. (௫௬)

மருட்பா.

கிழமுனிவன் வேடமிட்டுக் கேகயத்தை விட்டுப்
பழகிவசஞ் செய்துகுறப் பாவை—குழல்சரியச்
சேர்ந்தனி கூர்வான் றிகழ்திரு மயிலத்
தார்ந்தமெய் யடியவர்க் கஞ்சிக்
கூர்ந்தபூங் கணையான் கும்பிடல் வியப்பே. (௫௭)

கழிநெடிலடியாசிரியத்துறை—மடக்கு.

வியனார்கமலமலரினமே விளம்புமுலகமலரினமே
வெள்ளைநிறத்துக்குருகீரே வெண்முனிறத்துக்குருகீரே
கயலின்குலமேகேதகையே கருத்தைச்சுடுமேகேதகையே
கருங்குவளையேகடனுரையே காணேன்வளையேகடனுரையே

புயல்வந்தருந்துங்கசப்புனலே பொருந்துமுறவுங்கசப்புனலே
புளினத்திடரேயளப்புனையேபொல்லாதிடரேயளப்புனையே
வயமிக்குளவன்பேரொலியே மயிலத்தொருவன்பேரொலியே
மயலினிலையஞ்சகியேனே வந்தாளிலையஞ்சகியேனே. (௫௮)

வெண்பா.

ஏனமற மங்கைவைவேற் கிட்டானை யிடில்பசுங்
கானமற மங்கைவைவேற் கைக்குகனை—ஞானமற
மங்கையத்த ரேயா மயிலத்திற் கண்டுசென்னிக்
கங்கையத்த ரேயா கலாம். (௫௯)

கட்டளைக்கலித்துறை.

கலையானவத்திர வாணிபுகழுங் கவின்மயில
மலையானவத்திர வாணிந்தையையனையும் வாழ்விக்கும்வே
ணலையானவத்திர வாணிபங்குன்றொடு நந்தவென்றோ
னிலையானவத்திர வாணித்தர்போலு மியல்பினர்க்கே. (௬௰)

அறுசீர்விருத்தம்.

இயல்வளமுமலைவளமும் பொழில்வளமும் புனல்வளமு
மிமையார்போற்றும், புயல்வளமுமற்றுமுள்ள பலவளமுந்
திகழ்மயிலம் புரந்தசெவ்வேள், கயல்வளங்காட்டியநெடுங்கட்
குஞ்சரிக்குங்குறமகட்குங் கணவன் செந்நெல், வயல்வளந்
தண்மருதமுத னானிலத்துஞ்சென்றாடி வருதலுண்டே. (௬௧)

ஊர் - எழுசீர்விருத்தம்.

வருமமின்றிய தொண்டருக்கருட்செயு மயிலமாமலைச் சேய்க்குத், திருநிலாவிய பரங்கிரியேரகஞ் செந்திலம்பதி சோலை, மருவுமாமலை யாவினன்குடிமுதல் வண்டமிழ்ப்புல வோர்சொல்,பொருவிலாயிரங் கோடிகளாகிய பொருப்பெலாந் தனதாமே. (௬௨)

அடிமடக்குக்கோச்சகக்கலிப்பா

தனம்பகமா னவர்மீதே தனம்பகமா னவர்மீதே
வினம்பரவு பதியென்று வினம்பரவு பதியென்று
வுனம்புயத்தாட் டுதியாதோ வுனம்புயத்தாட் டுதியாதோ
கனம்படரு மயிலமனே கனம்படரு மயிலமனே. (௬௩)

சித்து - தாழிசை

அமலன்புகழ் மயிலாசல மதில்வாழ்சிவ ஞானிக்
கருள்செய்தயி லணிதோளுடை னருகிற்றிகழ் சித்தன்
றமரென்றுள பலசித்தர்க டந்தாண்மலர் மகரந்
தலையிற்புனை தருசித்தர்த மைப்போலணிட லுள்ளே
மேந்தன்மைவி டாதேபல மீயங்கொடு வந்தா
லெண்ணூறுவ ருடமாயுளி லங்கச்செய வல்லே
முமலத்தடை யறியேமிரு நாகந்தரு வாயேன்
முன்கட்டிவெ ளுக்கச்செயு முறைபுந்தெரிவேமே. (௬௪)

இதுவுமது - எண்சீர்விருத்தம்

வேமப்பான் முழுக்காட்டி யாடைசாத்தி
வெண்ணீறு மிகப்பூசி வேணமட்டு
மேமப்பாத் திரத்திலன்னம் பருப்புநெய்பா
லிருமூன்று சுவையுடனீ யிந்தாயானு
மியாமப்பா லியைந்தரச வாதஞ்செய்வோ
மிராப்பகன்மா றிடப்புரிவோ மிவையல்லாமற்
சேமப்பாங் குறுமயில மலைப்பொற்கோயிற்
றிருக்கைவேற் சித்தர்தம்பேர் செப்புவோமே. (௩௫)

வெண்பா

செப்பரிய பல்சீர்த் திருமயில மாமலையிற்
றப்பனைய மேனிச் சுராதிபனை—யெப்படியுங்
காணும லென்றன் கலிதீர மாட்டாது
நாணும லுந்திரியே னுன். (௩௬)

கட்டளைக்கலித்துறை

நானங்கமழு மயிலாசலத்தி னடிக்குமருட்
கோனங்கமழு மயிலாசலத்தினர் கும்பிடுந்தா
ளானங்கமழு மயிலாசலத்தின னன்றடற்சூர்
வேனங்கமழு மயிலாசலத்தினல் வீட்டிடுமே. (௩௭)

கலிவிருத்தம்.

வீட்டு நேய மிருந்துனை நாடிடுமென்
பாட்டு மாலை பரிந்தருள் செய்குவையோ

காட்டு வள்ளியைக் காவுடை யான்மகளிற்
கூட்டு வாய்மயி லாசலக் கொற்றவனே. (௧௮)

சம்பிரதம் - தாழிசை.

கொற்ற வர்க்குமுயர் மாதவர்க்குமொரு
கோனெனக்குலவு குமரவேள்
கோழியங்கொடிகொண் மயிலவெற்பிலிரு
கோதையர்க்குநடு மேவுவா
னற்றமீதெனவ றிந்தளிக்குமுரு
கையெய்யொழுகு மயிலிறை
னம்புயக்கழனி னைந்துதெண்டனிடு
மன்புகொண்டுதமிழ் பாடினன்
மற்றவர்க்குநிகர் வாழ்வெய்தாதுடலு
மனமும்வெள்ளைநிற மாகிடு
மாநிலத்திழியெ றும்புமோர்பெரிய
மலையெனத்திகழும் விழியினீர்
வற்றலின்றிவரு நல்வினைப்பயனும்
வம்பதாமணியும் வெண்கலை
மண்ணடைந்துநிற மாறுமெண்ணில்பல
வாயிலிற்புகலு மாகுமே. (௧௯)

எண்சீர்விருத்தம்.

ஆகுமதை யழிப்பதற்கு மழிவதனை யாக்குதற்கு
மயில்வேற்கைக் குருபரனை யன்றியிலை யெனத்தேறிப்

பாகுநிகர் தமிழ்ப்பாடல் பலபாடிக் களிகூரும்
பழையோர்கள் பெற்றபயன் படிறேனும பெறவேண்டி
யோகுடையார் மலிபொதியை யுயர்திருச்செந் தூராருணை
யொளிர்திருமா மலைபொருதை யுருமலையா தியதலந்தோ
றேகுமதிற் சலிப்பெய்தி யெழின்மயிலா சலக்குவட்டி
லின்றுவந்து பரவுகின்றே னினிநடப்ப தறியேனே. (௭௦)

வஞ்சித்துறை.

அறிஞர்சூழ் மயிலத்
தெறிகதி ரெழிற்சேய்
வெறிகமழ் மென்றாட்
குறிகொள்ல் குணமே. (௭௧)

மறம் - வெண்பா.

குணப்பிசகுந் தோள்வலியுங் கொண்மறவர் பெண்ணை
மணப்பதற்கு மன்னனிச்சை வைத்தாற் - கணப்பொழுதி
லந்தப் புரத்திருக்கு மாயிழைமா ரெல்லோரு
மிந்தமயி லத்துறுவா ரே. (௭௨)

இதுவுமது கட்டளைக்கலித்துறை.

வார்வேல்புரக்கு மயிலாசலத்து மறவர்கொம்பைச், சேர்
வேனென்றெண்ணு மரசேசவுந்தூ தருந் தேயவழக், கோர்
வேம்பைக்கட்டுத லன்றோ முன்கற்பகத் தூறெழித்த, சீர்

வேங்கைக்கோவ்வுங்கொள் யாப்பட்டபாட்டைத், தெளிந்து
சொல்லே. (௭௩)

கலிவிருத்தம்.

சொல்லு மாய்ப்பொரு ளான சோதியை
யல்லு மாய்ப்பக லாகி யல்லதைப்
புல்லு மாறெழின் மயிலைப்புங்கவ
னெல்லு மாறுமா முகங்க ளோதுமே. (௭௪)

எண்சீர்விருத்தம்.

ஓதும்பனுவற் றொகையாவையுநின் னுபயக்கழல்சூ டிடு
முண்மையுணர்ந், தேதுங்கனறெகன் றுரையாவழியா லெனை
யுந்தருவே னிடையந்தகுமோ, காதுஞ்சிலைவே டர்புனத்தின
ளுங் ககனத்தினர்கன் னிகையும்புரியும், வாதுங்களியா கிந
டிப்பவனே மயிலத்தொருநல் வரமின்றருளே. (௭௫)

தறும் - தாழிசை.

மின்றயங்கும்வடி வேலணிதோளுடை விகிர்தன்
விரைமலிந்தபணி நீபமுளான்வியன் மயிலக்
குன்றடித்துமயின் மேல்வரல்கண்டத னாலே
கொண்டமையலென நின்குறிகூறுது கோதாய்
நன்றவன்றருசு கம்பெறுவாய்மலை யாதே
நானுரைத்ததுபொ யல்லநிணைமெய் நம்பா

யென்றனக்குநிறை நாழியினெல்லொடு சோறு
மெண்ணெயுங்கலையு மீந்துவிடிப்பொழு தம்மே (௭௬)

இதுவுமது - அறுசீர்விருத்தம்.

அம்மாவென்குறி கேளுன் ணுக்கஞ்சுந்தர மீகை
அம்மாபோமென்றி ராதே தூயமயில மலைவா
ழெம்மான்றன்புயஞ் சேரு மின்பக்கடலை நல்கு
மைம்மான்கட்புன னீங்கி வருத்தந்தீருள மகிழ்ந்தே (௭௭)

கட்டளைக்கலிப்பா.

மகிழுமாமலர் மாலிகைமாரவேண்
மலயக்காலில் வரக்குயில் வாய்விடச்
சகிகணிந்தையு மம்புலியுஞ்சுடத்
தையல்வாடித் தயங்கிடலாகுமோ
வெகினமூர்தியைக் குட்டியகையனை
யீசன்மால்பணிந் தேத்தியமெய்யனே
முகிலறுமயி லாசலத்தையனே
முத்தமிழ்ச்சுவை முற்றுணர்தெய்வமே (௭௮)

இரட்டையாசிரியவிருத்தம்.

தெய்வங்களத்தனையு மொன்றெனவுணர்த்திடத் திருவுரு
வெடுத்த தெய்வஞ், சிவசமையமுதலாகு மறுவகைச்சமைய
முந் தெண்டனிடநின்ற தெய்வம், பொய்வலித்தானவர்கள்

வசியொழித்தமரர்வளர் பொன்னுலகளித்ததெய்வம், பொறியனையகுஞ்சரிமு லைத்துணைக்களபம் பொலிந்தமார்புடைய தெய்வ, மைவனக்குயிலனைய வள்ளிமின்றந்ததினை மாவினின் மகிழ்ந்ததெய்வம், வண்டமிழ்ப்புலமைதிகழ் கவுமாரருக்கினிய வரமெலாமுதவுதெய்வம், வைவதற்கஞ்சாத கொடியேனையன்றுதிரு மலைமீது காத்ததெய்வ, மயில்வாகனத்தெய்வ மயிலார்புயத்தெய்வ மயிலாசலத்தெய்வமே. (எக)

நிலைமண்டிலவாசிரியப்பா

தெய்வப்புலமையுந் திருப்புகழ்ச்சிறப்பு
மைவகைப்பொறிகட் கடங்காவறிவுந்
தொண்டர்தம்பணியுந் தூயநெறியு
மண்டலத்தரையரும் வணங்குமாண்பு
மன்னபல்சீரு மடைவதுகுறித்து
நின்னருட்பேறு நினைதருநெட்டுயிர்த்துந்
தோகைமாமயிலைச் சுடர்ச்செஞ்சூட்டு
வாகைவெண்சேவலை வடிவேற்படையை
முறவிலைச்சூல முதிரொளிவயிர
மாவிலம்படல்வாள் வயங்கெழிற்கேடகஞ்
சக்கரஞ்சங்கந் தனிக்கயிறங்குச
மிக்கசீர்ப்பணிகண் மிகவணிந்துள்ள
பவளமால்வரைநேர் பதிறுருவிற்
றவளவெண்ணீற்றுச் சங்கரன்பரவுஞ்

சிற்சிலவற்றொடு தினந்தினங்கருது
நற்செயல்பொலிந்த நாயினேன்மனத்தைத்
தளர்வொடுசலியாத் தகையுறப்புரிவா
னளவில்பேராட லலைபுனற்பொருநைத்
திருவுருமாமலை யாதியிற்செய்து
பருவம்வந்தடுத்தது பதறேலென்ன
விருதரங்கூறி யிறுமாப்புய்த்தும்
பருவரன்மிடியிற் பட்டார்போலப்
புல்லர்தம்மனைகளிற் போய்வரவிடுத்து
நல்லறல்கடுக்கு நறைக்குழன்மகளிர்
கணையிணையிணைவிழிக் காமர்கனிவாய்
துணைமுலைவிளைநலந் தொய்யின்மென்றோ
ளிறுணிகர்வேளர சிருக்கையாதியினு
முறுவரச்செய்தனை யொருகணக்கொருதர
மாதலின்மருண்டன னருணகிரியென்
றோதலும்பிறவு மொளியாவண்ணங்
குழீஇயமுனிவர் குழாத்தொடுமாசு
கழீஇயமதிநிகர் களிற்றிற்றோன்றித்
தகர்கொணர்வீர வாகுத்தலைவ
னிகரெனவிளங்கவெண் ணீறளித்தருள்வாய்
பைம்புயற்புனலைப் பவளமேய்க்குஞ்
செம்புகர்வேழத் திரணொடுந்தடக்கைப்
புழைவழியுறிஞ்சும் புதுமலர்ப்பொதும்பர்

தழைவளமயிலா சலப்பெருங்குவட்டிற்
குலவுபொன் மதிற்றிருக் கோயி
னிலவுசீர்பொறுத்த நிமலசற்குருவே. (௮௦)

மதங்கம்-வெண்பா.

சற்குருவாந் தன்மைத் தவத்தோர் தமைமறந்து
நிற்கு மிசைமதங்கி நீலவிழி—பொற்குவட்டை
யன்னமயி லாசலத்தா னறிருதோ ளடியதா
லின்னமைசை யாதிருந்த தே. (௮௧)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

இருஞ்சூலங்கொண்ட வயிரவர்போற்று மிகன்மதங்கி
வருஞ்சூறைக்காற்றெனச் சீறிசினந்தழல் வாய்திறந்து
பெருஞ்சூதரான புறமதத்தோர்களைப் பெய்த்தருந்திக்
கருஞ்சூதங்கொன்றபி ரான்மயிலாசலங் காண்பவளே. (௮௨)

இதுவுமது-அறுசீர்விருத்தம்.

பவச்சாதியாமதங்கி தருநரம்புபஞ்சினுக்கும் பருவநல்கு,
மவச்சாவவெய்யின்முள்ளிற் றவிப்பாரைக்கழல்புரக்கு மன்
றிப்பின்னுந், தவச்சார்பினுயர்வசிட்டன் கைக்கொண்டான்
மதனடியார் தவிர்ப்பார்கொல்லோ, நவச்சாமைப்பயிரெள்ளா
மயிலத்தானன்பர்சொல்லு நவைச்சொற்கேட்டே. (௮௩)

கலிவிருத்தம்.

கேட்டினுக்கு ளஞ்சிநின் கிளித்தமிழ்க்கிளத்துவேன்
மாட்டிரங்கி டாதிருக்கும் வன்மையென்ன நன்மையோ
கோட்டினத்து யர்ந்தவண்மை கொண்டதானமயிலம்வாழ்
தாட்டிகச்ச டானனச்ச ரோசமுற்ற தலைவனே. (அச)

எழுசீர்விருத்தம்

தலையாலன்புடனே யுனைச் சந்ததமும்பணிவேன்
முலையானைக்கிடைபோ மன மூடமொழித்தருள்வா
யிலைவேல்கொண்டவனே தக ரேறியசேவகனே
யலைரும்பார்புகழ்சீர் மயி லாசலவித்தகனே. (அரு)

எண்சீர்விருத்தம்.

வித்தையாலும்வ ருந்திடா நன்வி ரைப்பதாம்புயம்
வேண்டுவேன், முத்தைவென்றவெ ளிறணிந்தொரு முத்த
முந்தரவல்லையோ, தத்தையொன்றகு லாவுதிண்புயச் சண்
முகாமயி லாசலத், தத்தைதங்கையொ டாடல்கண்டுவப் பான
சீர்புனை யண்ணலே. (அசு)

பதினாறுசீர்வண்ணவிருத்தம்.

தன்னத்தனதனதானன—தந்ததான.

அன்னற் கொருபொருள்பேசுநின்
வண்மைப் புகழ்மிகவோதியு
மன்னச் சிறநடையார்மயன் மிஞ்சுகிறேயன்

விண்ணைப் பழமுனதாறிரு
நண்மைச் செவியினுளேகியென்
வெம்மைக் கலிகெடுமாறுபு ரிந்திடாதோ
தின்னாத் துணைமுலைவேடுவ
மின்னுக் கெதிர்பசிமீறிய
தின்னக் கிழமுனியாயுமி ரந்துளானை
வண்ணத் தமிழ்மயிலாசல
நண்ணித் தொழுமடியார்களை
வன்மைச் சமனணுகாதருள் கந்தவேளே. (௮௭)

பதினறுசீர்வண்ணவிருத்தம்.

தானதனதத்ததன-தனனதான.

வெளணிமலர்ச்சமரு மீனமலிவுற்றபுலே
மேவியநெறிக்கயவர் பகையும்வினை
வீடுதொறலைக்குமிடி நோயுமிகலிற்றமியன்
வேதனைபொறுத்துழல்வ தறிகிலாயோ
காளவிடமிக்கொழுகும் வாயரவினைப்பருகு
கானமயிலிற்கலப நிமலினோடே
கீதலிருவர்க்குகடு வேலுடனுதித்தளவில்
காலபயமற்றநிலை யுதவுவாயே
வாளவுணருக்கரச தாமெனமுளைத்ததெடு
மாமரமறக்கறுவு புயவிசாகா

வாரணமுகத்தனைய னொடுபகைத்துலக
மாதிரமுழுக்கவலம வருகுமாரா
தாளநிகர்பொற்புமுலை மாதரணைவர்க்குமொரு
சாமியெனமெச்சிடினு மகிழ்குகேசா
தாரணிதுதிக்குமயி லாசலமுகட்டில்வரு
தாபதர்தமக்கருள்செய் தகையுளானே. (அஅ)

காலம் வெண்பா

ஆனந்தா கின்றுதினி யாவரிதனுங் காலமற்ற
ஞானபரா னந்த நமக்கருளவான்—வானளவுஞ்
சீரார் மயிலமலைச் செவ்வேளெனவிளங்கும்
பேரார் குருபரப்பி ரான். (அகூ)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

பரப்பியதென்றற் கனல்காட்டிமாங்குயிற் பாட்டொலிக்கு
வரம்பெறுமாநதி நீருண்டவேனின் மயிலமலைச்
சிரப்புனைதாளுடைச் செவ்வேண்மயலிற் செலுத்துமென்று
றரம்படுகார்பனி யென்செய்யுமோவிளந் தையலையே. (கூ0)

இதுவுமது-எண்சீர்விருத்தம்.

தையலுக்கு முலையரும்பு முதிராக்காலஞ்
சரசநய மொழிப்பயனுஞ் சாராக்காலம
வெய்யமதன் கணையெடுத்து வெகுளாக்காலம்
வியன்கழங்கம் மானையூச்சில் வெறுக்காக்காலம்

பையனைய நடிகடப்பூ மலராக்காலம்
பழையமத நூல்சிறிதும் படியாக்காலம்
வையமுநன் முன்றுலகுந் துதிக்குந்தொல்சீர்
மயிலமலைக் குகன்மோக மலிந்ததன்றே. (௪௧)

பன்னிருசீர்த்தாழிசை.

மலியுங்கருணை விழியான் வானோர்பரவு பெருமான்
வடிவேன்முருகக் கடவுண் மயிலமலைச்சண் முகனை
யொலிதங்கியதிண் கழல்சே ருபயசரணங்கருதி
யுருகித்தொழுமெய் யடியார்க் குரியபணிகள் புரிவார்
கலிமையமதனை விதியைக் காலன்றனையுண் மதியார்
கடலைக்கடலிற் சுழலார் கமழ்செந்தமிழ்முற் றுணர்வார்
புலிமைக்கரியை யுரித்தார் போலுஞ்சிலரைப் பணியும்
பிதச்சமைய மாறும் புகழத்திகழ்கின் றவரே. (௪௨)

எண்சீர்த்தாழிசை.

திகழுஞ்சண்முகப் பண்ணவன் வீரஞ் செறிந்தபன்னிரு
திண்புயன்றேவர், புகழும்வேலுடைச் சேவகனண்மை பொ
லிந்தசேவலம் பொற்கொடிக்கார, னகமுஞ்சாகரஞ் சூழ்புவி
மெச்ச வலிர்ந்தசீர்மயி லாசலத்தண்ண, லிகழுஞ்சிந்தையு
ளேனையுமாட்கொண் டிடத்துணிந்ததை யாரறிவாரே. (௪௩)

பன்னிருபதின்றுசீர்ந்தாழிசை.

ஆரார்செஞ்சடைப் பரமனார்விழி யழலினுதித்த முருக
வேலகத்தியன்முத லானதொண்டருக் கருள்விளக்குமுன்

னளித்தவன், வாரார்பூண்முலைக் குறத்திகுஞ்சரி மருவுந்திண் புயவானவன்-மயிலமால்வரை யருவிநீர்மிக வந்துபாயுநல் வய லிலே, யோராருழுவர் களித்துமையல்கொண் டேப்பமிட்டுவங் தடுப்பதா-லினித்தமொழிகள் பேசிச்சரசத் திணங்கிநாழிகை போக்குறீர், காரார்மென்குழல் சரியப்பெரிய களபமுலைகள் குலுங்கிடக்-கவிழ்ந்துநிமிர்ந்து நாற்றையெடுத்துக் கையானடு மின் பள்ளீரே. (சச)

சவலைவெண்பா.

ஈரம் பொருந்தா விதயத் தெளியேனை
வாரம் பெருத்து வலிதாண்டா
ஞரம் பொலிமயிலத் தன்பர்பகை மாற்றுதற்காம்
வீரம் பெறுங்கதிர்வேல் வேள். (சரு)

ஏகபாதம்-கட்டளைக்கலித்துறை.

வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே
வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே
வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே
வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே (சசு)

மருதம்-தாழிசை.

நன்றேவருகச் சிவபெருமான் ஞானகரமே வருகமறை நாலுமுணராப் பொருள்வருக நறைப்பூங்கடம்பு மலர்பவளக்,

குன்றேவருக மயிலூரும் குருந்தேவருகக் கனககர்க்-கோ மான்மகள்சேர் குகன்வருகக் குறத்திகணவா வருகவிரைந், தின்றேவருகக் களிறேறி யின்னேவருகக் கழறியவா-றியற்றி யாள வருகவுன தின்பங்கொடுக்க வருகவருண், மன்றேவரு கப் பலகோடி மலையாய்வருக வருகவே-மயிலாசலத்தில் விளை யாடும் வாழ்வேவருக வருகவே. (கஎ)

எண்சீர் வண்ணவிருத்தம்.

தன தன தன தன தனன தனன.

வருபலகனவினி லொருவாசகமே
மகிழ்வுடனுரைசெயு முருகோனிமையார்
தருமகளழகிய குறமாதுடனே
தறுகிய மலைகளி லுயர்வானதுகே
டிருவருள்வளமுறு சிவஞானியைநேர்
சிலர்பிரணவமத னுரைதேறியதா
லிருமையுமெளியவர் பெறுமேன்மையிலு
லிசைபொடுவளமிகு மயிலாசலமே. (கஅ)

தாலை-முடுகுத்தாழிசை.

சலனமற்றதிரு மயிலவெற்பிலரு டழைவுறக்குரவை யிடுமினோ-சண்முகக்கடவுள் வள்ளிகுஞ்சரித மக்கெனக்கு ரவை யிடுமினோ, வலமிகுத்தசெரு சேவல்வேல்கலப மயி லெனக்குரவை யிடுமினோ - வண்டமிழ்ச்சுவைம லிந்திடப்புல

வர் வாழ்வுறக்குரவை யிடுமினோ, நலமனைத்துமுத வத்தகுந்த சிவ முானிமுன்குரவை யிடுமினோ, ஞானிலத்துயிர்கண் மிடியி லாவுவகை நடுவுறக்குரவை யிடுமினோ; குலமறைப்பகுதி யாக மத்தினொடு கூடிடக்குரவை யிடுமினோ, கோதையீர்சிறிய கொங்கையீரளவில் குமரியீர்குரவை யிடுமினோ. (௬௩)

நேரிசையாசிரியப்பா.

மின்னவிர்ந்தாங்கு மிளிர்கதிர்வேலும்
பொன்னவிர்மஞ்ஞையும் பொருதகர்ப்பரியுங்
களிறுஞ்சேவலுங் கழறுவபிறவும்
வெளிறுநீறணிந்த மேனியும்விளங்கப்
பரசிவன்றிருமால பதுமப்புத்தே
ளரசிலைபோன்றே யவிர்தருமல்குற்
சசிமினுள்கணவ னுதியர்சார்தரப்
பசிமுதலொழிந்த பல்லோர்சூழக்
கந்தநாயகனைக் கவின்றிகழ்பொதியை
மந்தமாருதம் வரப்பெறுமயிலத்
தந்தணர்போற்ற வமர்பெருந்தகையைச்
செந்தகைப்பைந்தகைத் தேவியரிருவர்
நடுவினிதமரு ஞானபண்டிதனை
மடுவினுமொருக்கால் வந்தசண்முகனை
யேத்துவாரேத்து மியல்பினுக்கிசைந்த
நாத்துணைவாணி நவைதவிர்முதுநூல்

கறமுழிவணங்குங் கான்மலர்படைத்த
முற்றுணர்புலவனை முருகக்கடவுளைக்
கனவினுநனவினுங் கண்டுவப்பெய்திச்
சினமறக்களைந்து திரும்பாமுத்தி
வீட்டுறக்கருதி வியன்றமிழ்மொழியாற்
பாட்டுரைத்தணியும் பழங்கவுமாரர்க்
கணிமலர்ப்பொதும்ப ரடர்ந்தபல்குறிஞ்சியும்
பிணியறுத்தழியாப் பெருமைநல்கும்
புனிதப்பூசையும் புரைதவிர்நாட்டமுங்
கனியுமெய்யுணர்வுங் கழிக்கருந்திருவே. (ஈ)

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை

வெண்பா.

மயிலமலைக் கோயிலுக்குள் வாழ்முருக வேளுக்
கயிலதனைப் போற்றுமவ னன்பாற்—பயிலுங்
கலம்பகத்தைக் கற்குமவர் கல்வியறி வென்னு
நலம்பகம்பெற் றுய்யு நரர்.

சிவ சுப்பிரமணிய குமரகுருபர முருகக்கடவுள்சகாயம்.

வாழி.

எண்சீர்விருத்தம்.

அழகியசண் முகத்தொருமெய்க் கடவுள் வாழி
யமரர்குலா திபன்வளர்த்த வணங்கு வாழி
குழலுடைப்பூங் குயிலனைய குறத்தி வாழி
கொற்றவைவேன் மயில்சேவற் கொடிச்சீர் வாழி
பழமறையோ விடமயிலப் பொருப்பு வாழி
பத்திநெறிக் கவுமாரப் பண்பு வாழி
மழவிடைக்கோ னனையசிவ ஞானி வாழி
வையகமும் வானகமும் வாழி மாதோ.

குருபாதமேகதி.

தெய்வமே துணை

முருகக்கடவுட்டுணை.

மயிலாசலத் திருப்புகழ்.

காப்பு—வெண்பா.

அயிலத்த னாறுமுகத் தைய னனந்தஞ்
சயிலத்தி லாடுந் தலைவன்—மயிலத்துச்
செவ்வேண் மகிழத் திருப்புகழாற் போற்றுதற்குக்
கைவேழ மாமுகத்தோன் காப்பு.

நூல்.

தனதனதத்தனதானன - தனதானா.

பருவாதிக்கிணையாமெழில்
வதனமலர்த்தொகையாறொடு
பழுதறுசெச்சைகுலாவிய மலைபோலே
பகர்தருபொற்புறுமாறிரு
புயமுமிரட்டையதாமுயர்
பதமுநினைத்துருகாதவெ னெதிரேநீ
திருமுடிவச்சிரவாகுவ
லயநிரைகொத்துமதாணிகள்
சிறுமணிகட்டரைஞாணிகர் பணியோடே

திகழ்மயில்குக்குடகேதன
மணியவைதொட்டிருந்தபெரொடு
சிகிமுகத்திற்றருசேவைப்பு முனைநாமோ
குருமணியொத்தொளிர்கோமள
வடிவமுடைக்குமாரவட
குவடெனும்விற்குரியார்பணி குகவேளை
குமரியொருத்திவிசாரமொ
டுருகவனத்திடைபோயொரு
குறமகளைத்தொழுமார்வம துடையோனை
மருமலிகற்பகநீழலி
லரசுசெலுத்தும்வலாரிதன்
மதலையிடத்தின்முனோர்மொழி பகர்வோனை
வரியளிமொய்த்துளதாமரை
யணிமிகுபற்பலவாவிகொண்
மயிலமலைக்கரசாகிய பெருமானே. (க)

தனனதானனத்தானனதனதன - தனதானா.

களபபூதரப் பூண்முலைமகளிரை
வழிபடாதுனக் கேபணிபுரிபவர்
கருணைஞானவித் தாகியபிரணவ முணரேனே
கடுவைநேர்மொழித் தீமிகவுடையவர்
மனைகடோறுமுற் றுயிர்நயமொழி
கழறுநாவலர்க் கோரிடியெனமிக மிளிரேனே

குளவிபோலருட் சீர்கொடுகிலவிய
முனிவர்தாண்மலர்த் தூளணிதலையினர்
குலவுபோரவைக் கூடதிபுவகைபொ டமரேனே

குகுகுகூவெனக் கூவிநிமுனமிரு
சிறகைமோதநடற் சேவலைபெழுதிய
கொடியையேமிகப் பேசிடுமொருநல மருள்வாயே

சளமெலாமிகச் சோவெனவலறிய
வமரர்கோனுவப் பாகிடநிசிசரர்
தமதுவாழ்வறச் சாடியகதிரயின் முருகோனே

நவநீறுமிக் கார்திருவுருவின
ரிமயமால்வரைக் கோன்மகள்கணவரோர்
சரபமானவுற் சாகர்முனுதவிய புதல்வோனே

வளமருமலர்ச் சோலையின்மதுவெறி
பெருகுகோடரத் தாலெறிபடிகனி
வகையெலாமிழுத் தோடியவருவிகள் பலவாலே

மருதமாதியிற் காதரமெனவளர்
கிரிகளியாவுமொப் பாகிடலரிதெனு
மயிலமாமலைக் கோயிலின்மருவிய பெருமாளே.( )

தனனத்தனதன - தனதான

கடலைப்பருகிய முனியைப்புகழ்பவர்
கழலைப்பணிவது தவிராதே

கதிபெற்றுனதருள் வெளியிற்புகுமவர்
கவிதைச்சுவையினை யிகழாதே
சுடலைப்பொடியணி சிவனைப்பரவிய
சுகுணக்கவுணிய முனிபோலே
துரிதத்தமணர்க ளிகர்துர்ச்சனர்வலி
தொலையச்செயும்வர மருள்வாயே
விடலைக்கனிபய ஞெடியற்கினியவர்
விழையத்தகுமொரு துணைவோனே
விரைமுற்றியகுர வலர்பொற்புறுபுய
மிசையுற்றிலகிய கிளியோனே
நடலைக்கவுரவ ரவையிற்செலுமிரு
நளினக்கழலினன் மருகோனே
நதிபற்பலதரு மயிலக்கிரிமிசை
நடமிட்டருளிய பெருமாளே. (௫)

தனதானதத்தத னதன-தனதான.

பழகாத துட்டர்மனதையும்
விழியாலு ருக்கிநலநகர்
பழிகாரி கட்குமலர்கொடு திரியாதே
பலியோடு புற்றிமகிழ்வுறு
பெரியோரை நித்தமிகழ்பவர்
பகர்வாசகத்தைநலமென மதியாதே

யழகான புட்பவனைகொடுன்
வடிவேனி றுத்திவழிபடு
மதுதிதெ னச்சொல்பவர்களை   மருவாதே
யருணாச லத்திலுளவொரு
முதுகோபு ரத்தினடியினி
லடியேனி டத்தின்மொழிதலை   யருள்வாயே
குழகாகு றத்திமுலைபுணர்
முருகாம லைப்பெணுதவிய
குமராவெ னச்சொல்புலவரை   யகலானே
கொதிநீர்பெ ருக்குகடலிடை
துயில்வானு ரத்தில்வளரொரு
குலமாத ளிக்குமிருவர்கண்   மணவாளா
மழமால்வி டைக்கணநுதின
மிவர்வார்து தித்தபொழுதினின்
மறைநான்மு கத்திலுளபொருள்   பகர்வோனே
வருவார்நி னைத்தபடிவர
மருள்சீர்பொ றுத்துவளமலி
மயிலாச லத்திலுறைதரு   பெருமாளே. (௪)

தந்தத்தான தனதான தனதான தன - தனதான

அஞ்சப்பேடையனைய தாருநடைமாதரொடு
கொஞ்சிச் சீராடுவத லைறிவுமாறியுன
தன்பர்க்காகாதகொடி யோனெனநலோரிகழ மெலியாதே

யம்பொற்பாராள்கிறவ லாரிமுகலோர்கதிரை
நம்பித்தீவெள்வியினி லாருயிர்கொல்வார்பலரு
மஞ்சப்போராடுமெறி வாளர்புகழோதுநல மறவாதே

வஞ்சத்தோர்வாழுமனை வாசல்களிலேகியடல்
வென்றித்தோள்வீமனெடு மால்விசையன்மாரனெனும்
வம்புக்காளானகவி வாணருடனேதினமு மிகலாதே

மஞ்சைப்போலேயிலகு தோகைமயின்மீதிலிரு
பங்கிற்றேவானையொடு வேடமகண்மேவவெதிர்
வந்துற்றோர்நாள்கனவிலோதியவிதேதமதை யருள்வாயே

கஞ்சப்பூமீதுவளர் நான்முகனைமோதியொரு
குன்றிற்கூடேகதறி வாடவிடுமேன்மைபெறு
கந்தப்பாவாள்வலிமை தோயுநவவீரர்பணி துணைவோனே

கங்குற்போலாகமுறு சூரன்முகலாமவுணர்
மங்கிப்பூலோகமொடி வானுலகுப்வாழவொரு
கங்கைச்சேயாகிவரு ஞானமணியேயிறைவர் குருநாதா

நெஞ்சத்தாலேகருதி டாதபலவாறுவரும்
விந்தைக்காராதிருவெ ணீறணியுமேலவரை
நிந்திப்பார்காலனிக ரானகவுமாரரொடு திரிவோனே

நிம்பத்தார்சூடவுமு ளரிசைகுவாயளவில்
குன்றத்தானேமயில மாமலையிலேமிகவு
நின்றெற்போல்வார்பிழைபொலாநலமதாகவருள்பெருமாளே.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனதானதத்ததன தனதானதத்ததன-தனதானா.

அறிவையறி வருபிரம நிலையெனுநன் முனிவரடி
பணியாதெ திர்த்திகலி யிகழாணவத்தினரு
மிடியினிடை மறுகிவரு மிரவலர்கள் விழைதலொரு
கடுகாமெ னப்பெறவு முதவாதொ ளிப்பவரு
மருதினமு மடமகளிர் கலவிநல மெனவுருகி
வழிபாடி யற்றுகரு நிகரான துட்டர்மகிழ்
வடையாதே

யபரிமித மதுரநய குணமருவு கவிதைபல
தமிழாலு ரைத்துமலை தொறுமேகும் விற்பனரும்
விதிதவறி யளவிலுயிர் பதறியழு வருபுரியு
மவர்வேர றுக்குமெம னெனும்வீர முற்றவரு
மரியவள மருவுபொழில் குலவுபொதி யையிலுறையு
முனிவோன்ம லர்க்கழலை மறவாத பத்தர்களு
மெலியாதே

பிறிதிணையி னடனமர கதமயிலின் முதுகிலிந்
மடவார்த மக்கிடையி லயில்வேல்பி டித்தமரர்
முனிவர்முத லினர்பரவ வொருபவள மலையெனவ
முகமாறும் வெற்புறழ்ப னிருதோளு மிக்கொழுகு
பிரசமது வுளகமல மலரிணைய துணையடியு
முதலாமு றுப்புமுழு மையுநேர்வ ரக்கருத
லறியாயோ

பெரியதிரு மலைமுகடு கிடுகிடென வருள்பொழுதி
லுயிர்போயு டற்றசையை நரிநாயு ணச்செயினு
மருணைமுது கிரிவட வருக்கதனில் வருபொழுதி
லருள்வாழ்வ ளித்திடினு மடியேனி ழைத்தபல
பிழையுநல மெனவுலகு மொழியுமிவ ணுழலும்வினை
யணுகாதி னித்துயரி லமிழாதி ருக்கும்வகை
புரிவாயே

மறிமழு விளையபய வரதமுட னணிதருகை
யொருநாலு டைப்பரம சிவனுமொ திர்த்தமத
னிருளுடல நொடியிலெரி படமுனியு மழல்விழிகொள்
பெருமானு மைப்பெண்முலை புணர்தோளு டைப்புனிதர்
மதகரியி னெடுபுலியை வதைபுரியு மிறைவரத
வணிவார்தொ றுத்தனது செயலான திற்சிறிது
பகர்வோனே

வருணமணி தருபுலவன் முதலினர்சொல் கவிபுனையு
நெடியோன டற்றுவர் குலகால னைத்தமுதி
லலைகடலி னிடைநெளியு முரகவணை மிசைதுயிலும்
விழியான்வ ரைக்கவிகை கொளுமாயன் மிக்கபுகழ்
மழுபுமுர கரிகொடிய கனகனுடல் கிழியவென
வொருதூணிடத்தில் வரு திருமால்வி ருப்பமுறு
மருகோனே

குறிபகரும் வனசரர்த மிகணிலுறு சிறுமிதரு
இணைமாவி னிற்பிரிய மிகுகோம ளக்குமர

அடியவரை யிகழுமவர் குலமுழுது நசியவென
வருகோப மிக்குடைய முருகோனு ரைக்கரிய
குகைகடொறு நடநவிலு மிருசரண முளகடவுள்
குகுகூவெனச்சிறகை யறைகேத னத்தனெனின்
மகிழ்வோனே

குறைவிலவள மலிபொழிலு ளிளையவர்கண் மகளிரொடு
விளையாடு டக்கரிய நிறவேடர் கைச்சிலையொ
டிரலையென வணுகவவர் மகளிர்நகும் வியன்மருவு
குளிர்சார லிற்றவசு புரிவார் பழக்கமது
கொடுகிளிகண் மறைபயிலு மயிலமலை தனிலிணையில்
குருவாகிய மக்கினிய சிவஞான வித்தைதரு
பெருமாளே. (௬)

தனனதானன தானனதானன—தனதான.

கரியபேய்நிக ராமதவேள்விடு கணையாலே
கவலைநோய்மலி வாய்மடமாதர்முன் மறுகாதே
கிரிகடோறுநி றுளனநாணித முறுமாறோர்
கிளியெனுமிக வோதியவாய்மொழி மைதானே
சரிகுலாவிய தோளுமையாளருள் புதல்வோனே
சகலதேவரு நாடுமயேசுரர் குருநாதா
வரியராவணை மாயவனார்திரு மருகோனே
மயிலமாமலை மேல்விளையாடிய பெருமாளே. (எ)

தனன தனத்தனன தனத் - தனதானா.

கவலைமிகப்பெருகுதலிற் றுதிசெயுட் பழியுமெனுட
கனவிலுரைத்திடுவனபொய்த் தொழியாதே
களபமுலைச்சிறுமியர்சொற் சுவையைவிழிக்கயலிணையைக்
கருதியளப்பருமயலிற் றவியாதே
தவளநிறபபொடியுடனக் கணிபவரைக்கறுவுதொழிற்
சமணர்முதற்பகர்சிலருட் களியாதே
தமநியவெற்பனையமயிற் பரிமுதுகிற்றிகழ் தருநற்
றருணமதைத்தெரியவருட் புரிவாயே
புவனகரத் தலமதனிற் சிசுவெனவுற்றிகன்மலிமுப்
புரதகனற்கொருபொருளைச் செப்பியவாபா
புழையுறுகைக்கரிமுகவற் கிளையகுகக்கடவுளெனப்
புகலுமவர்க்கினியவைமிக் கருள்வோனே
சிவசமயத்தினர்தழையக் கவுணியருட்சிறுவனெனத்
திகழுமுழுப்புலமையுடைக் குரவோனே
செறிபொழிலிற்பிடியையடற்களிறுதொழத்தகும்வளைமைத்
திருமயிலக்கிரிமுருகப் பெருமாளே. (அ)

தனதான தந்ததந்த - தனதானா.

கொடிபோனு டங்குகின்ற விடையார்ப தம்பணிந்து
கொலையாதி யுந்துணிந்து புரிதீயோர்
கொடைநாடி நெஞ்சநொந்துபலவூர்தொறுந்திரிந்து
குறைதீர்வதின்றிவம்பி லுழலாதே

யிடிபோன்மு ழங்குசெஞ்சொன் மலிபாடல்கொண்டுவந்து
விருதாளி டம்புனைந்து மகிழ்மேலோ
ரிவனோர்தொ ழும்பனென்று தமியேனையுஞ் சொல்வென்றி
யிசைவாக விஞ்சையொன்று தருவாயே
படிவான ரந்தகொண்டல் விழியிய வந்தபெண்கள்
பழகார்வ மிஞ்சுதுங்க மணவாளா
பதினாறு டம்பனென்று சிலநூல்விளம்பநின்று
பலவாறி லங்கும்விந்தை யுடையானே
மடியாவ ரங்கொடுந்து முதுசூர்வ ணங்கவென்று
மயிலேறும் வென்றிநன்று முருகோனே
வளையோலி டுந்தடங்கண் மலிசார லங்குறிஞ்சி
மயிலாச லம்புரந்த பெருமாளே. (௪௩)

தனனதனதனனதன - தனதானா.

சரதமொழி சிறிதுமொழி வரியபிழை யுறுகொடியர்
தமதுமனை களிலடிமை புகலாமோ
சதுமறையி னுவலுமறு வகைநெறியை யிகழுமவர்
சரபமென வுலகின்மிளிர் தரலாமோ
சுருதிவிக சிதவினய சரசகுண மகவிரதி
தொழுதுருகும் வினையுமலி வுறலாமோ
துரியநிலை யெனுமவுன ரகசியம துணருமவர்
துணையடியி னுகிர்பொடியு மெளிதாமோ

பாதவிதி வழிகனக சபையினட மிடுமிறைவர்
பணியவொரு பொருள்விரிவை மொழிவோனே
பகவனரி யெனவடிவு கொடுகனக னுடல்கிழிவு
படமுனியும் வயவனது மருகோனே
வரதமுறு கையுமபய மெனமிளிர வொருகனவில்
வருகருணை மிகையுடைய குருநாதா
வனசரரு முனிவரருள் கொடுகொடுமை தவிரவளர்
மயிலமலை மிசைநிலவு பெருமாளே. (௰)

தனனதானனத்தனதன - தனதான.

சகுணதேசிகப் பணிபுரி பவரையேசிடத் தணிபவர்
தமதுவாசகப் படிசெல நினையாதே
தமநியாசலத் தினைநிகர் முலைமினார்களைப் பணிபவர்
தருவதானபொய்ப் பொருண்மயல் பெருகாதே
முகுளநாண்மலர்த் துணர்கொடு னடிகண்மீதருச் சனைசெயு
முனிவரோடுநித் தமுமுறு முயர்வாலே
முறைகெடாதமுத் தமிழ்மழை பொழியும்வாழ்வுபெற் றகல்புவி
முழுதுமோதிடத் தகுபுகழ் பெறுவேனோ
குகுகுகூவெனத் தொனிதரு பெரியசேவலுற் றிலகிய
குவடுநேர்புயத தணிபல படையோனே
குமரிகோமளப் பகவதி கவுரிநாரணற் கிளையவள்
குழவியாயடற் றகுவரை யடும்வீரா

வகுளமாலிகைப் புயமத னுடன்முனுள்வரப் பெறுமிரு
மகளிர்பூண்முலைச் சுவடுறு மணிமார்பா
வளமெலாமுமுற் றுயர்பல குவடுதோய்தரத் திகழ்திரு
மயிலமாமலைக் கழகிய பெருமாளே. (கக)

தனதத்ததானன — தனதானு.

பலபொய்ச்சொல்பேசிய முறைகெட்டவேசியர்
பகவிச்சைமேலிட மெலியாதே
பகைமுற்றுசாரணர் நிகரற்பர்கூறிய
பனுவற்குமேன்மைகள் பகராதே
புலகைப்பொய்தானெனு நிலைபெற்றஞானிக
ளுறவைக்கனவிலு மறவாதே
யொருபுத்தியாலுனை வழிபட்டபேருட
னொளிரச்செய்தாளவு நினைவாயோ
வலகற்றதானவ ருடல்விட்டுவானுற
வடும்வெற்றிவேலணி புயவீரா
வரைமெயாத்ததோண்மற மகளிச்சையாணித
மவள்செப்பும்வேலைகள் புரிவோனே
வலைவைப்பெணொடு நடமிட்டவாரண
மகிழக்குலாவிய துணைவோனே
வருபத்தர்நாடிய படிபெற்றுவாழ்வுறு
மயிலத்தின்மேவிய பெருமாளே. (கஉ)

முற்றிற்று.

நூற்பயன் - வெண்பா

வெயிலைத் தருங்கதிர் வேல் வித்தகவேண் மேவு
மயிலத் திருப்புகழை வாழ்த்திற்—குயிலனையார்
சூழவருங் காமன்முதற் சொல்பகையெல் லாந்தடிந்து
வாழவல்ல போதம் வரும்.

வேலுமயிலுந்துணை.

பதிகம்.

காப்பு-வெண்பா.

மயிலா சலக்குமரா வள்ளிமண வாளா
கயிலாயத் தாருதவுங் கந்தா—வயிலாருங்
கையாநீ வந்து கழறியவை யத்தனையும்
பொய்யாக லாமோ புகல்.

அறுசீர்விருத்தங்கள்.

செந்தமிழ்ப்பாமாலையினுக் காசைகொண்டு புனைவது போற் சிறந்த பேற்றைத், தந்தருளவேண்டாமோ விதுவுனக்குத் தெரியாதோ சாற்றுவானேன், வெந்தவெண்ணீறணிவார் தம் மழல்விழியிற்பொறியாகி மேனாள்வந்தாய், கொந்தலருகடம் பணிந்த கொற்றவாமயிலமலைக் குமரவேளே. (௧)

இனிச்சகிக்கமுடியாத தூயர முறக்கண்டுமன மிரங்கிடாமற், பனித்தமொழிப்பேதையருக் குருகவிடன்முறைதானோ

பணியென்செய்வேன், றௌனித்தசிறு சதங்கையுந்தண் டையுங்கழலுங்குலவுமிரு துணைத்தாளானே, குனித்தவரிச் சிலைவேடர் மகள்கணவா மயிலமலைக் குமரவேளே. (உ)

செக்கிலிடுமெள்ளேபோற் பெரிதுவருந்திடுவேன்முற் சிகியிற்றோன்றி, யிக்கினற்கும்விரிஞ்சனுக்கு மியமனுக்குமஞ் சாம லிருக்கச்செய்வாய், வக்கிரவெண்கோட்டுமத களிற்றி னுக்குப்பின்றோன்று மதலாய்வெள்ளைக், கொக்கிறகுபூண்ட பிரான் றவப்பயனே மயிலமலைக் குமரவேளே. (ந)

நெஞ்சறியப்பிழைகோடி புரிந்திருக்குந் தமியேனுண் ணீவந்தந்தா, ளஞ்சலளித்தனையதுகண் டிறுமாந்தேனூர் தோறு மலைக்கவேண்டாம், வஞ்சரறிவரியானை வாரணப்புட் கொடியேந்தி வயங்குங்கையாய், குஞ்சரியாள்களிகூருங் கோமானேமயிலமலைக் குமரவேளே. (ச)

நற்றவஞ்செய்வார்வியக்குந் திருவேடமிகக்காட்டி ஞான மில்லாச், சிற்றறிஞர் தாமுமிகழ் தீமைமிகப்புரிவேனைச் சினந்து தள்ளேல், பற்றறுத்தபெரியோருக் கெளியோனே பன்னிருகைப் பவளக்குன்றே, குற்றமெலாம்பொறுத்தருளுங் குணக்கடலேமயிலமலைக் குமரவேளே. (ரு)

பாமரருட்சிறந்தொளிருந் தமியேனுஞ்சிறிதேனும் பழு தில்லாதார், தாமடையும்பெரும்பேற்றுக் கிச்சைகொள்ளச் செய்தனையே தருவாய்கொல்லோ, பூமணமுக்குட்டியகைப் புல வோனேயெவ்வுலகும் புகழ்பெம்மானே, கோமளசுந்தரமட வார்க் கினியோனேமயிலமலைக் குமரவேளே. (சு)

தேன்வார்க்குமலர்ப்பொழிற்றண் குறிஞ்சிநிலமெங்குமி கச் சென்றுபாடி, யான்வாழக்குறித்தவித மறிந்திருந்து மிரங் கர்மைக் கென்னசெய்வே, னூன்வாட்டி நுகர்வேடர்க் கினியா னென்றிறைஞ்சினற்கு முறுகண்மூர்த்தாய், கூன்வாட்கைநவ வீரர் துணைவோனேமயிலமலைக் குமரவேளே. (எ)

பிச்சையமுதருந்தியும்வெண் ணீறுமிகப்புனைந்துநல் லோர் பிரியம்பெற்றுங், கச்சைவெண்டமுலைமடவார் கடைக் கண்ணுற்படுந்துயரங் கழியாதேனே, பச்சைநிறத்திருமாலுக் குரிமைமிகுமருகோனே பரமன்வாழுங், கொச்சைநகர்க்கவு ணியனு வந்தோனேமயிலமலைக் குமரவேளே. (அ)

அலைவாரித்துரும்பேபோற் பலவாறுசுழலுமனத் தடிய னேனைப், புலைவாழ்க்கையுடையார்க்கு மஞ்சிநிற்கச்செய்த னையே புகழ்ச்சீர்ந்தாள், நலைவாணிக்கிலக்கணநூல் விரித் துரைக்கும்புலவோனே கருணைக்குன்றே, கொலைவாட்கைச் சூர்தடிந்த கொற்றவனேமயிலமலைக் குமரவேளே. (கூ)

பூவினுக்குளுறைவானும் புணரியினிற் றுயில்வானும் புரந் சுட்டானு, நாவிடதத்திற்கொள்ளுமுன்றன் றிருப்புகழைப்பகர் வேனு நவியலாமோ, காவிலகுபொன்னகரி காப்போனை யெவ்வுலகுங் கவினுமாறு, கூவியசீர்ப்பெருஞ்சேவற் கொடி யானேமயிலமலைக் குமரவேளே. (க௦)

பாடரியபலமறையா கமங்களுக்குங்குருவான பான்மை யுற்றும், வேடமகள்பாவிரந்தா யென்றிகழ்வார்க்கொல்குமென் றன் விருப்பமீந்தா, ளாடகமேயனையபொறிச் சிறைவண்டு

மலிசோலை யடுக்கமெங்கும், கோடாமாடிடக்குயிலின் னிசை காட்டுமயிலமலைக் குமரவேளே. (கக)

செஞ்சுவைத்தீந்தமிழ்ப்பொதியைக் கிரிக்கடுத்தநெல் வேலிச் சிறுவனன்பாற், கொஞ்சுகவிமாலைகொண்டு மகிழ் வானைமயிலமலைக் குமரவேளே, நெஞ்சுருகிவழிபாடு புரிந்து திருநீறணிந்து நேடுவார்முன், னஞ்சுறமுழங்கரியநிறச் சமனணு காதெனன்பதுமெய் நவின்றுய்வீரே. (கஉ)

முற்றிற்று

பதிகம்.

காப்பு - வெண்பா.

கயிலைக் கிரியானுங் கைகுவிக்குங் கந்தன்
மயிலத் தினைக்கருதி வாழ்த்த—வெயிலவனைக்
கொண்டுசெய்த வேற்படையுங் கொற்றநவ வீரர்களுங்
கண்டுநின்று காக்கக் கடன்.

கலிவிருத்தங்கள்.

அடியார்புடையூடணுகிக்கருதும்
பழவாழ்வுபடைத்திடு நாளுளதோ
பொடியாடியபுங் கவனுருதவும்
வடிவேன்முருகா மயிலத்தரசே. (க)

தளர்வுற்றவர்தம் மைநினைத்தயர்வே
னிளமைக்கழிவெய் துமுன்வந்தருள்வாய்

இளர்மூத்தமிழ்பா டியகிள்ளையினுள்
வளர்கிற்பரனே மயிலத்தரசே. (௨)

கரையின்றியகா மநெடுங்கடலின்
றிரையென்றுறுதீ வினையென்றொழிவே
னரைவிஞ்சியநற் சரபம்பொருபுள்
வரையுங்கொடிசேர் மயிலத்தரசே. (௩)

ஏழைக்கிதமோ துமிடக்கினரற்
கோழைப்படுகின் றருணங்கெடுமோ
மாழைக்குயர்வன் னநறுங்கனிசேர்
வாழைப்பொழில்சூழ் மயிலத்தரசே. (௪)

சொல்லிற்சுவையின் றியதுர்ச்சனர்பான்
மல்லிட்டுவருந் தலொழித்தருள்வாய்
கல்லிற்றிரிகின் றவர்கன்னிகையாம்
வல்லிக்கெளியாய் மயிலத்தரசே. (௫)

பாகைப்பொருபைந் தமிழ்பாடிடுவா
ரோகைக்கடலூ டுறவந்தருள்வாய்
தோகைக்குடையோ டுசுமந்தளிகூர்
வாகைப்பரியாய் மயிலத்தரசே. (௬)

நின்னுவனிரம் பியநெஞ்சொடுவா
ழென்னைகயிளைப் பதறிந்திலையோ
பொன்னுடர்தரும் கொடிபூண்முலைசேர்
மன்னுமுதல்வா மயிலத்தரசே. (௭)

வியன்மிக்குளனே ணுபுரத்திடைவந்
தியல்செப்பியதியா வனெனத்தெளியேன்
மயல்வெற்பொடுவா ரணமும்பொடியாம்
வயமுற்றவனே மயிலத்தரசே. (அ)

புலைமாவறவென் றுயர்புண்ணியனே
நிலையானவனென் றுநிகழ்த்திலனே
வலைவாரிதிசூற் றிடுமெம்புவியின்
மலைதோறுறைவாய் மயிலத்தரசே. (௯)

மூவர்க்குயிரா முருகாவெனவே
கூவத்தகுகொள் கையளித்திலையோ
சேவற்கொடியுஞ் சிகிவாகனமும்
வாவத்திகழ்தென் மயிலத்தரசே. (௧௦)

குருவாமெனநம் பியகொள்கையினோர்
கருவாழிகடக் கவிடுத்திலையோ
பொருவாதகடம் புபுனைந்தவனே
வருவார்களிகூர் மயிலத்தரசே. (௧௧)

மஞ்சார்பொழில்சூழ் மயிலத்தரசிற்
சஞ்சானனனு ரமர்நெல்லையினு
னெஞ்சாரநிகழ்த் தியபாநுவல்வார்
பஞ்சாயுதனன் னபதத்தினரே. (௧௨)

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

சிவக்கியானபாலையசுவாமிபதிகம்

காப்பு-வெண்பா.

தவஞானத் தோர்பரவுந் தண்மயில வெற்பிற்
சிவஞானிக் கோர்பதிகஞ் செப்பிப்—பவவேலைக்
கப்புறத்து மெய்வாழ் வடைய வானீன்ற
துப்புறழ்மால் வேழந் துணை.

வெண்டளைக்கலிப்பாக்கள்.

எவ்வேளை யுந்தன் னிதயத் தெழில்வேற்கைச்
செவ்வேளை வைக்குஞ் சிவஞானி சேருமிடம்
வெவ்வேளுக் கஞ்சி வியன்சார லெங்குநித்த
மைவேழ மாட வயங்குமயி லாசலமே. (௧)

பொய்மம் புரமும் புவியும் புரந்தருளுஞ்
செம்மற் சிவஞானி சிறுவாச செய்யுமிடங்
கைம்மலராற் செவ்வேற் கடவுளையே பூசிப்பார்
மம்ம ரறுப்பான் வளர்ந்தமயி லாசலமே. (௨)

ஆன்ற புலவோ ரளவில்லா ராய்ந்துரைக்குந்
தேன்றதும்பு பாடற் சிவஞானச் சித்தரிடங்
கான்ற மதுமலர்ப்பூங் காவுலகங் காக்கும்வைவேற்
றோன்ற லருட்சீர் துலங்குமயி லாசலமே. (௩)

நீடுபுகழ்ச் செவ்வே ணிகழ்த்துமொழி கொண்டொருவன்
பாடுஞ்சிவஞான பாலையன் பத்தரிட
மீடுரைக்க வொண்ணு வெழிலார் மயில்கோடி
யாடும் பெருமை யவிர்ந்தமயி லாசலமே. (௪)

பூரணமா முண்மைப்பொருளுணர்ந்த புண்ணியத்தாற்
சீரணமற் றுய்ந்த சிவஞானி சீர்த்தவிடங்
காரணமு மெண்ணில்பல காரியமு மானதென்று
மாரணைத்தோ ளைப்புடைத்தோ னுறுமயி லாசலமே. (௫)

வெம்பு குணத்து மிலேச்சருக்கு மெய்விளக்குஞ்
சிம்புவனைய சிவஞானச் செல்வரிடம்
பம்பு கடலைப் பரிந்தாடை யாவுடுத்த
வம்புவிக்கோ ராதரமே யானமயி லாசலமே. (௬)

நல்லு மணலுங் கருப்பிரதங் காட்டும்வண்ணஞ்
சொல்லுஞ் சிவஞானி சோராமல் வாழுமிட
மல்லும் பகலுமற்ற வானந்த வீட்டுள்வைத்துப்
புல்லுங் குகன்சீர் பொலிந்தமயி லாசலமே. (௭)

வென்றி விசையன் விரும்புந் தவத்தினுக்காப்
பன்றியின்பின் னேகிவரும் பாலையன் பற்றுமிட
மின்றிகழும் வைவேல் விகிர்தன் விரும்பநிற்குங்
குன்றினத்துண் மேலாக் குலவுமயி லாசலமே. (௮)

எண்ணில்பல சீருமெடுத் தேத்துவா ரெல்லவர்க்கு
நண்ணியபே ரீந்தசிவ ஞானியென்று நத்துமிடம்
விண்ணினர்க்கோ ராதரமாம் வேற்பெருமான் வேழமுகப்
புண்ணியனோ டாடும் பொருவின்மயி லாசலமே. (௯)

மெய்வழக்கர் நால்வரென வென்றிமிகுஞ் சித்தியற்றித்
தெய்வநலங் கண்ட சிவஞானத் தேவனிடம்
பொய்வலிமைத் தானவராம் பொல்லார்க் கெமன்போலுங்
கைவடிவேற் கந்தன் கவின்றமயி லாசலமே. (௧௦)

வல்லவர்கள் போற்று மயிலா சலத்தினையு
நல்லபுகழ் பெற்றசிவ ஞானியையு நாடியின்று
செல்லணைய வோசைத் திருப்புகழோன் செப்புமிவை
சொல்லறிஞர் தம்மைத் துகள்சிறிதுந் தோயாதே. (௧௧)

முற்றிற்று

சிவப்பிரகாசமூர்த்திபதிகம்.

காப்பு-வெண்பா.

தெய்வப் புலமைச் சிவப்பிரகா சக்குருவைச்
சைவத் தலைமைத் தமிழ்க்கடலை—யுய்வதெண்ணிப்
போற்றுதற்குக் காப்பு புகர்முகத்திற் பூண்கொள்பிறைக்
கீற்றுறழோர் கோட்டுக் கிரி.

கலிவிருத்தங்கள்.

குரவனுல் வெல்லருங் கொடியற் செந்திலைப்
பரவலால் வெல்லுநின் பான்மை யென்சொல்வே
னரவணி வாணெஞ் சகத்தி லாக்கலாற்
கரவறுஞ் சிவப்பிர காச மூர்த்தியே. (க)

அந்தணன் மடிபிடித் தவன்ற னுருயிர்
சிந்தவோ தியபுகழ் சிறிதென் றெண்ணிடேன்
செந்தமிழ் பாலையன் சேரச் சிந்தையுட்
கந்தனோர் சிவப்பிர காச மூர்த்தியே. (உ)

புலைமலி மாரிதேர் பொடித்த வண்ணமந்
நிலையினர் பலரையு நீற்ற நண்ணுவி
ரலைநுகர் மலைமுனி யளித்த முததமிழ்க்
கலையுணர் சிவப்பிர காச மூர்த்தியே. (ந)

சொற்பனத் தென்னுணீர் சொன்ன வாசக
மற்பரு மொப்பமெய் யருடந் தாட்கொள்வீர்
விற்பனப் புலவரும் வெருண்டு நாணுறுங்
கற்பனைச் சிவப்பிர காச மூர்த்தியே. (ச)

புவித்தியக் கறுகலம் புரிதல் வேட்டுளேன்
றவித்திடா துதவுநுஞ் சரதம் பொய்க்குமோ
குவித்திடு மனமிலாக் கோள ரோர்வருங்
கவித்திறற் சிவப்பிர காச மூர்த்தியே. (ரு)

தமுனிகர் தவத்தரிற் றமிய னன்பினுக்
கமுகியர் நீரலா தாருள் ளார்கொலோ
பழமறை யாகமப் பயனெ லாமிகக்
கழறிய சிவப்பிர காச மூர்த்தியே. (சு)

கேட்டிய லெனக்கருட் கிளர்சசி தோயவிந்
நாட்டிய லுமதிசை நவிலற் பாலதோ
வேட்டிலல் லமன்புக மெழுகி மெய்ந்நிலை
காட்டிய சிவப்பிர காச மூர்த்தியே. (எ)

விசையனுக் கருள்புரி வேட னாரு
ணைசைகொடு துதித்துநா னலிய லாகுமோ
விசைவில்புன் கவினர்நெஞ் சிரணங் காண்டரு
கசைநிகர் சிவப்பிர காச மூர்த்தியே. (அ)

இருமக வின்றநும் மீச ரென்றுதிக்
கருள்செயுந் தினத்தையா னறியச் சொல்லுவீர்
பெருமைசால் பத்தியில் பிசிதர் பேணிடுங்
கருமமில் சிவப்பிர காச மூர்த்தியே. (கூ)

வாதவூர் முனிமுதல் வருக்கு நால்வர்மெய்ப்
போதம்வேட் டுறவினைப் புரிந்த தார்கொலோ
மாதர்நல் லார்புவி மாடை நாடுமுக்
காதலில் சிவப்பிர காச மூர்த்தியே. (கo)

உலப்பில்சீர் திகழ்நல்லாற் றாரி லொன்றிடை
கலப்புறுஞ் சிவப்பிர காச மூர்த்தியைப்
புலப்பகைத் திருப்புகழ்ப் புலவன் போற்றிவை
சொலப்பெறு மவரெலாந்துயரெய் தார்களே. (கக)

முற்றிற்று

தெய்வமே துணை

தனிவெண்பாக்கள்.

குருவுங் கணபதியுங் கொற்றமழு வானுந்
திருமடந்தை காவலனுஞ் சேணில்—வருசுடருந்
தேவினத்தின் றூயான சிற்சத் தியுமுருகோன்
மூவிரண்டாக் காட்டு முகம்.

சத்தி வடிவேற்கைச் சண்முகனைச் சந்ததமு
நத்தியெழுத் தாறு நவின்றிட்டேன்—சித்தியுட
னுக்கம் பெருக்கி யருள்விளக்கு மெஞ்ஞானத்
தூக்கம் வருகின்ற து.

மேகங்கா ளுங்களுக்கு வேலா யுதனுனை
மாகம் புரந்திருக்கு மன்னனை....யேகபர
வத்ராவின தாணையிந்த மாநிலத்தின் மேற்கருணை
வைத்துமிகப் பெய்ம்மின் மழை.

வந்தமே கத்தை மழைபொழியச் சொல்லாம
லெந்தவூ ரிற்பொழிதற் கேவுகின்றாய்—சந்தனப்பூஞ்
சோலைப் பொதியைநிகர் தொன்மயிலை வெற்பிலொரு
வேலைப் பிடித்ததெய்வ மே.

என்னிமித்த மோவடிவே லேந்துமயி லாசலத்தோன்
றன்னிமித்த மோமுகில்காள் சாற்றுவீர்—மின்னியிடித்
திங்குவந்து பெய்யாம லேகுகின்றீ ரெண்ணிலுயிர்
மங்குமுன்னம் பெய்ம்மின் மழை.

இரையதனை நீக்கித் தெரிசனந்தந் தாண்டோ
ருரைபகர வொண்ணாதோ வோதாய்—பரையுதவு
மைந்தனே யீடின் மயிலா சலத்துறையுங்
கந்தனே யெங்கண்முரு கா.

இன்னாந் துயர்ப்படுதற் கென்னுன் முடியாது
நின்னன்ப ருண்மை நெறிதந்தாண்—முன்னங்
கிரிதுளைத்த வேற்கைக் கிழவா குமரா
வரிதுனக்கொன் றில்லையல்ல வா.

கந்தா கடம்பா கதிர்வேலா கன்னிபெற்ற
மைந்தா குறத்தி மணவாளா—விந்தாருஞ்
செஞ்சடையான் போற்றுகுரு தேசிகனே யென்னிருகண்
பஞ்சடையா மற்றிருக்கண் பார்.

குருபாதமேகதி.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்ச்

சின்னத்தம்பிப் புலவரியற்றிய

கல்வளையந்தாதி

மூலமும்,

பழைய உரையும்.

இவை

சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ்

தமிழ்ப் போதகாசிரியர்

S. அனவரதவிநாயகம்பிள்ளை, M.A., L.T.,

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1913

விலை அணா 5.

முன்னுரை.

தமிழாசிரியர்மாட்டு வான்முறையாகத் தமிழ் கற்கப் புகும் மாணவர் முதலாகக் கற்கத் தகுவனவாயும் அவர்களாற் கற்கப்படுவனவாயு முள்ள நூல்களு ளொன்றாய மறைசையந் தாதி இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற் றிகழ்ந்த சின்னத் தம்பிப் புலவரால் இயற்றப்பட்டது. அவர் சரித்திர முதலிய வற்றை யறிதற்கு ஆதாரங்கள் இந்தியாவில் சிறிதுமில்லை. இதுவரை வெளிவந்த மறைசையந்தாதிப் பதிப்புக்களும் இவ் விஷயத்தில் மௌனமே சாதித்தன. யாழ்ப்பாணத்து அ. சதாசிவம்பிள்ளை யென்பவர் எழுதி வெளிப்படுத்திய பாவலர் சரித்திரதீபகம் என்னும் நூல், தமிழ் நூல்கள் செய்தருளிய புலவர்கள் சரித்திரத்தை அகராதிமுறையால் விளக்குவது, யாழ்ப்பாணத்துப்புலவர்கள் சரித்திரங்களைக்கொஞ்சம் விசேஷ மாக எடுத்துரைக்கின்றது. அதிற்கண்டபடி: "யாழ்ப்பாணப் புலவருக்குள்ளே திலதம்போல் விளங்கிய இவர், நல்லூரில் இருந்தவரும், இற்றைக்கு (1886) முன்பின் கஅ௦வருஷங்களின் முன்னே இலங்காதிபதியாய் இருந்த சைமொன்ஸ் என்னும் உலாந்தா மன்னனாற் சேர்க்கப்பட்ட தேசவளமை என்னும் யாழ்ப்பாண நியாயப் பிரமாணத்தைப் பரிசோதனை பண்ணித் திருத்தும் பொருட்டு நியோகிக்கப்பட்ட பல பிரபுக்களுள் ஒருவருமாகிய வில்லவராய முதலியாரது புத்திரர். இப்புலவர் பாலியப் பிராயத்தே பாடும் வரம் பெற்றிருந்தார் என்று சொல்லுவர். வடகரை வித்துவான் ஒருவர் முதலியார்மேற்

பிரபந்தம் ஒன்று பாடிக்கொண்டு அவர் உறைவிடந் தேடிவந்து விசாரணை செய்தபோது, தெருவிற் பிள்ளைகளோடு பாக்குக் கட்டி விளையாடிக்கொண்டு நின்ற இப்பாலியப் புலவர் :

“பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூதலத் தோர்க்கு நன்னிழலா—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்”

என்று தம் பிதா வீட்டுக்குக் குறிப்புச் சொற்றனராம். இவர் பாடிய அந்தாதிகள் இரண்டுள. ஒன்று மறைசையந்தாதி எனப் பேர்பெறும். நூறு செய்யுட்கொண்ட இது வேதாரணிய ஈசன்மேலது.

“சேந்தா தியன்மணிப் பூண்புலி யூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத் தியானஞ்செய் வில்லவ ராசன் றிருப்புதல்வன்
நந்தா வளந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதி மாலையை வேதாட வீசற் கணிந்தனனே”

என்றதனுல் அவ் வந்தாதிக்கு இவர் ஆக்கியோன் எனல் விளங்கும். மற்றது கல்வளை அந்தாதி. இது சண்டிருப்பாயிலுள்ள கல்வளைப் பிள்ளையார் மேலது. முந்தினதில் நின்று சற்றே கருகல் கொண்டது.

* * * * *

இவ்விரண்டு அந்தாதிகளுள் மறைசை அந்தாதிக்கு உடுப்பிட்டி, ா. ா. அ. சிவசம்புப் புலவர் உரை இயற்றி அச்சிடுவித்திருக்கிறுர். இந்த உரை நயப்பையும் வியப்பையும் “உதயதாரகைப்” பத்திரிகையிற் பேசி இருக்கிறேம்.

ஒருமுறை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிற் கனே சையர் வீட்டில் அநேக வித்துவசனர் சபைகூடி இராமாயணத் துக்கு அர்த்தம் பண்ணிக்கொண்டிருக்குஞ் சமயம், அவர் சொல்லமுடியாது மலைத்த ஓர் பாட்டிற்கு இளைஞராதலில் ஓர் கோணத்தில் உளுக்கார்ந்திருந்த இப்புலவர் அர்த்தஞ்சொன்ன திறமைக்காக மகாகனவானுன அவ் ஐயர் பண்டாரக்குளம் என்னும் ஓர் வயலை இவர்க்கு வெகுமதி கொடுத்தனர். சின் னத்தம்பிப் புலவர் என்ற சொற்பொருட்படி சின்னப் பைய லாய் இருந்தபோதே சரஸ்வதியின் கடாட்சவீட்சணம் இவரு க்கு அகப்பட்டது என்றதற்குப் பின்வருங்கதை சாட்சியாகும்.

இவர் சிறுமையிலே பாடசாலைக்குச் செல்லாது கல்வியை அசட்டைசெய்து மாடுமேய்க்கும் பிள்ளைகளோடு விளையாடித் திரிபவராதலிற் றந்தையார் இவரைக் கண்டிக்க, இவர் அவர் கண்ணுக்குத் தென்படாது ஒளித்துப்போய்த் தாயாரிடம் அன்னம் வாங்கியுண்டு கட்டாக்காலிபோல் மறுபடி பாய்ந்து விடல் வழக்கம். இப்படித் திரியும்போது ஓர் நாள் வழக்கம் போலப் பிதா இல்லாத நேரம் வீட்டுக்கு வந்து போசனம் உண்டு, அவர் முதல் அடி எடுத்து எழுதி வைத்துவிட்டுப் போன ஓர் அந்தாதிப் பாட்டை இறப்பி லிருக்கக் கண்டு எடு த்து, அதின் உ-ம் ௩-ம் ச-ம் அடிகளை எழுதி வைத்துத் தன் பாட்டிற் போயினராம். பிதா வீட்டுக்கு வந்து முன் தொடங்கி விட்டுப்போன பாட்டை முடிக்கும்படி ஓலையைத் தேடி எடுத் துப் பாட்டு முடிந்திருக்கக் கண்டு, இங்கே வந்துபோனது யாரென்று மனைவியிடம் கேட்க, அவள் அச்சங்கொண்டு மறை

த்தும், பின் நாயகன் நெருக்கத்தால் அந்தப் பேய்ப்பையல் தான் உங்கே வந்தானென்று கூறப், பிதா மகிழ்ந்து இவரைத் தேடி அழைத்து நேசம் பாராட்ட, அப்புறம் இவர் அந்தாதி பாடி முடித்தனர் என்ப. இவரது சுற்றத்தார் நல்லூரிலும் சண்டிருப்பாயிலும் இருக்கிறார்கள். மானிப்பாய் அச்சியந்திர சாலைத் தலைவருள் ஒருவரான ஶ்ரீ. ஶ்ரீ. அ. சிற்றம்பலம் என்பவரும் இப்புலவர் வமிசத்தவரே."

நெடுநாள் முன்னர் இக் கல்வளையந்தாதி உரையோடு பிரசுரஞ் செய்யப்பட்டது. அஃது இக்காலத்து அருகி வழங்குதலாலும், தமிழ் கற்கும் மாணவர்க்கு உரையோடு கூடிய கல்வளையந்தாதிப் பதிப்பொன்று அவசியமா யிருத்தலாலும் இது பிரசுரிக்கப்பட்டது.

S. A. P.

செம்பொற் குவட்டினிற் பாரதந் தீட்டிய கோட்டினன்சீர்க்
கமபக் கரிமுகன் கல்வளை வாழுங் கணபதிக்கு
நம்பற் கினியமுற் சங்கத்து நூலென நல்லைச்சின்னத்
தம்பிப் புலவனல் லந்தாதி மாலையைச் சாற்றினனே.

உ

சிவமயம்.

கல்வளையந்தாதி

மூலமும் உரையும்.

காப்பு

தார்கொண்ட பூமல் லிகைச்சேக்கை யிற்றும்பி சாலப்பம்புஞ்
சீர்கொண்ட கல்வளை யந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்
பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயுங்கும்பக்
கார்கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே.

(இதன்பொருள்.) தார்கொண்ட பூமல்லிகைச் சேக்கையில்-மலர்களைக்கொண்ட அழகாகிய மல்லிகைப் படுக்கைகளில், தும்பி சாலப் பம்பும் சீர்கொண்ட-வண்டுகள் மிக வொலிக்கும் அழகைக்கொண்ட, கல்வளை அந்தாதி பாட - கல்வளை அந்தாதியை (யான்) பாட, (அதற்கு இடையூறு வாராமல்) முன் நின்று காப்பது-முன்னின்று காப்பது, திரைக்கடல் சூழ் பார் கொண்ட பல் உயிர்க்கு - திரையையுடைய கடலாற் சூழப்பட்ட பூமி (தன்கட்) கொண்ட பலவகையாகிய உயிர்களுக்கும், ஆணந்த மும்மதம் பாயும் - ஆணந்தத்தைச் செய்வதாகிய (அருள்) மும்மதம் பாயப்பெறும், கார்கொண்ட கும்பம் - அழகைக் கொண்ட மத்தகத்தினையும், களி - களிப்பினையு முடைய, கம்ப யானையே - தூணிற கட்டப்படும் யானையாகிய விநாயகக் கடவுளே.

(குறிப்புரை.) முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஆனந்தத்தைச்செய்வதை ஆனந்தமென்று காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். ஆனந்தமென்றதனால் அருள் வருவிக்கப்பட்டது. பாயும் யானையென முடிக்க. யானையென்று உபசரித்ததற் கேற்பக் கம்பத்திற் கட்டப்படுதல் கூறப்பட்டது. அடியாருடைய உள்ளமாகிய கம்பத்திற் கட்டப்படுதல் குறிக்கப்பட்டதெனினு மமையும். ஈற்றேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

ஒன்றா யிருசுடர் முத்தொழி னான்மறை யோதுமைந்தாய்
நன்றாய வாறங்கம யாவுக்குங் காரண நாதனுமாய்
நின்றாய்நின் கல்வளை யந்தாதிபாடவென் னெஞ்சகத்துப்
பொன்றா வருள்புரி வாயானை மாமுகப் புங்கவனே.

(இ-ள்) ஒன்றாய் - ஏகவஸ்து வாகியும், இருசுடர் (ஆய்)-(சூரிய சந்திரராகிய) இருசுடர் ஆகியும், முத்தொழில் (ஆய்) - (சிருட்டி திதி சங்காரமென்னும) முத்தொழிலை யுடைய மும் மூர்த்திகள் ஆகியும், நான்மறை (ஆய்) - நான்குவேதங்கள் ஆகியும், ஓதும் ஐந்து ஆய் - சொல்லப்படுகின்ற பஞ்சபூதங்கள் ஆகியும், நன்று ஆய ஆறு அங்கம் (ஆய்) - நன்மை ஆகிய ஆறு வேதாங்கம் ஆகியும், யாவுக்கும் காரண நாதனும் ஆய் - (மற்றுமுள்ள) யாவற்றுக்கும் காரண கடவுள் ஆகியும், நின்றாய் - நின்றவனே, மா யானை முகப் புங்கவனே - பெருமையாகிய யானைமுகக் கடவுளே, நின் கல்வளை அந்தாதி பாட-நுமது கல்வளைப் பதியைப் புகழும் (யமக) அந்தாதியை (யான்) பாட, என் நெஞ்சத்துப் பொன்றா அருள் புரிவாய் - எனது நெஞ்சினுள் அழியாத அருளினைத் தந்தருள்வீர்.

(கு-ரை) ஒன்று, ஐந்து, முத்தொழில்: ஆகுபெயர்கள்.

நூல்

கற்பக நாடர் பதின்சதக் கண்ணனெண் கண்ணன்றொழுங்
கற்பக வஞ்சி யிடக்கண்ணன் றந்தமுக் கண்ணனன்றிற்
கற்பக வேலெறி வேடுணை வன்கல் வளைபதிவாழ்
கற்பக நன்னிழல் சேர்ந்தார் கருக்கரை கண்டவரே.

(இ-ள்) கற்பக நாடர் - கற்பக விருக்ஷத்தையுடைய விண்ணுடைராகிய தேவரும், பதின்சதக் கண்ணன் - ஆயிரங்கண்ணனாகிய இந்திரனும், எண் கண்ணன் - பிரமதேவனும், தொழும் - வணங்கும், கற்பு அக வஞ்சி இடக்கண்ணன் தந்த முக்கண்ணன் - கற்பையுடைய திருவுள்ளத்தையுடைய வஞ்சிக்கொம்பு போலும் உமாதேவியாரை வாமபாகத்தில் உடையராகிய சிவபெருமான் பெற்றருளிய முக்கண்ணரும், அன்றில் கல் பக வேல் எறி வேள் துணைவன் - அன்றிற் பறவையின் பெயராகிய கிரௌஞ்சம் என்னும் பெயரையுடைய மலைபிளக்க வேலாயுதத்தை எறிந்த முருகக்கடவுளது துணைவருமாகிய, கல்வளைப் பதிவாழ் கற்பக நல் நிழல் சேர்ந்தார் கரு கரை கண்டவரே - கல்வளைப்பதியில் வாழ்கின்ற கற்பக விநாயகரது நல்ல திருவடி நிழலைச் சேர்ந்தவர் பிறவி (வெய்யிலின்) எல்லையைக் கண்டவரே (ஆவார்)

(கு-ரை) அன்றிற்கல் ஓர் குறிப்புமொழி.

கண்டலம் போதைப் புளினமென் றோர்ந்துகங் கம்பதுங்க்
கண்ட லமர்ந்து சிறகாற்றுங் கல்வளைக கற்பகநின்
கண்டல மூன்று மெனையாள்பொற் பாதமுங் காணவின்று
கண்டலன் போற்கண் படைத்திலன் வாசக் கமலத்தனே.

(இ-ள்.) கங்கம் கண்டலம்போதை புள் இனம் என்று ஓர்ந்து - பருந்து தாழம்பூக்களைத் (தான் பக்ஷித்தற்கு ஆகும்) பறவை இனம் என்று கருதி, (அவற்றைக் கவரவென்று) கண்டல் பதுங்கி அமர்ந்து சிறகு ஆற்றும் - கண்டன் மரத்திற் பதுங்கி இருந்து சிறகை ஆற்றப்

பெறும், கல்வளைக் கற்பக - கல்வளைப் பதியில்வாழுங் கற்பக விநாயகரே, நின் கண்டலம் மூன்றும் - நுமது கண்கள் மூன்றையும், எனை ஆள் பொன் பாதமும் காண-என்னையாண்டருளுகின்ற பொன்போலுந் திருவடியையும் (யான்) காண, வாசக்கமலத்தன்-நறு நாற்றத்தையுடைய அம்புயாசனத்தன், விண் ஆகண்டலன் கண்போல் - விண்ணுலகத்திலுள்ள இந்திரனுடைய ஆயிரங் கண்கள்போல, படைத்திலன் - (எனக்கும் ஆயிரங் கண்களைப்) படைத்திலன்.

(கு-ரை.) புள்ளினத்தில் ளகரம் தொகுத்தது. கண்டலமாந்து என்று பாடமாயின், கங்கம் கண்டலம் போதை கண்டு புள் இனம் என்று ஓர்ந்து பதுங்கி அலமாந்து என்றியைத்துப் பொருளுரைக்க.

கவானரம் பையஞ் சுரும்பு விரும்பு கருங்குழற்போ
கவானரம் பைக்குலம் போற்றிட வாழ்தல்கண் ணேனினிச்சங்
கவானரம் பைங்கத லிக்கனி சிந்திடுங் கல்வளைப்புங்
கவாநரம் பைத்திகழ் யாழ்க்கூற் றுமையருள் காதலனே.

(இ-ள்.) சங்கவானரம் பைங்கதலிக் கனி சிந்திடும் கல்வளைப் புங்கவா-கூட்டமாகிய குரங்குகள் செவ்வியாகிய வாழைப்பழங்களைச் சிந்துகின்ற கல்வளைப் பதியி லெழுந்தருளி யிருக்கின்ற தேவரே, நரம்பு திகழ் யாழ் கூற்று உமை அருள் காதலனே - நரம்புகள் விளங்குகின்ற யாழிசைபோலும் மொழியினையுடைய உமாதேவியார் பெற்றருளிய புத்திரரே, கவான் அரம்பை - தொடையாகிய வாழைத்தண்டையும், சுரும்பு விரும்பு அம் கரும் குழல் - வண்டுகள் விரும்புகின்ற அழகிய கருமையாகிய கூந்தலையுமுடைய, அரம்பை குலம் போற்றிட - தேவஸ்திரீகள் கூட்டம் துதிசெய்ய, போக வான் வாழ்தல் - போக நிலமாகிய விண்ணுலகத்தில் வாழ்தலையும், இனி கண்ணேன் - இனி (பெரும்பேறெனக்) கருதேன் (நும்முடைய திருவடியின் கீழிருத்தலைத் தந்தருள்வீர்).

(கு-ரை.) அரம்பை, போகம், யாழ்: ஆகுபெயர்கள். உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஐ சாரியை. (௫)

அருளத்த னந்து சிலைகதை வாள்சுட ராழிகொள்ளை
யருளத்த னந்தந் தெரியா வகைநிற்கு மைம்முகனின்
றருளத்த னந்த வனஞ்சூழுங் கல்வளை யண்ணலடி
யருளத்த னந்தரம் வாழ்வாரென் றால்வினை யஞ்சிடுமே.

(இ-ள்.) அருள் அத்தன் - அருள் (வடிவாகிய உமாதேவியை வாம) பாகத்திலுடையவரும், நந்து சிலை கதை வாள் சுடர் ஆழிகொள் ஐயர் உள-சங்கு வில் தண்டு வாள சுடரையுடைய சக்கரமாகிய பஞ்சாயுதங்களைக்கொண்ட விஷ்ணுமூர்த்தி கருதித்தேடவும், (அவருக்கு) தன் அந்தம் தெரியா வகை நிற்கும் ஐம்முகன் ஈன்றருள் அத்தன் - தமது (அடியாகிய) முடிவு தெரியப்படாதவகை நின்றருளிய ஐம்முகக் கடவுளுமாகிய சிவபெருமான் பெற்றருளிய கடவுள், நந்தவனம் சூழும் கல்வளை அண்ணல் - பூந்தோட்டஞ் சூழப்பெற்ற கல்வளைப் பதியில் வாழும் பெருமையிற் சிறந்தவர், அடியர் உளத்து அனந்தரம் வாழ்வார் - அடியாருடைய நெஞ்சத்தி லெப்போதும் வாழ்பவர், என்றால்-என்று துதித்தால், (அங்ஙன மவ்விநாயகக் கடவுளைத் துதிப்பவரைச் சாரந் திருத்தற்கு) வினை அஞ்சிடும் - வினைகளஞ்சும்.

(கு-ரை.) தன்னந்தம் என்பதில் னகரந்தொகுத்தது. நந்தனவனம் என்பதில் னகரங் குறைந்தது. (௪)

அஞ்சத் திரத்தன் முடிவேவ வேகொதித் தார்த்துரப்பி
யஞ்சத் திரத்தந் தகனவரும் போதுன் னபயநடை
யஞ்சத் திரத்த வடிவா னயனத் தமலைபெற்ற
வஞ்சத் திரத்தன் றுணைவாதென் கல்வளை யானந்தனே.

(இ-ள்.) அஞ்சத்து அன்ன நடை - அன்னத்தினது நடைபோலு நடையினையும், இரத்த வடிவாள் நயனத்து - இரத்தத்தைக்கொண்ட கூர்மையாகிய வாள்போலுங் கண்ணினையு முடைய, அமலை பெற்ற-உமாதேவியார் பெற்றருளிய, அம் சத்திரத்தன் துணைவா - அழகிய வேற்படையையுடையராகிய முருகக்கடவுளது துணைவரே, தென் கல்வளை

ஆனந்தனே-அழகாகிய கல்வளைப் பதியில் வாழு மானந்த குணமுடையவரே, திரத்து ஆந்தகன் - வலியினையுடைய கூற்றுவன், அஞ்சு அத்திரத்தன் முழவு எனவே கொதித்து ஆர்த்து உரப்பி - பஞ்ச (புஷ்ப) பாணங்களையுடையனாகிய மன்மதனது முழவப்பறைபோலவே வெகுண்டார்த்துரப்பி, அஞ்ச வரும்போது-அஞ்சும்படி வரும்போது, உன் அபயம் - (யான்) நுமக்கடைக்கலம்.

(கு-ரை.) ஏகாரம், தேற்றப்பொருட்டு. (ரு)

தனந்தனந் தந்தி மருப்பன்ன மாதர் தரைவிரும்பு
தனந்தநந் தந்திகழ் தண்டுறை தோறுமென் சஞ்சரிகந்
தனந்தனந் தந்திமி யென்கல் வளையன் சங்கக்குழைக்கா
தனநதனந் தந்தமொன் றானென்று நெஞ்சந் தனிலுன்னுமே.

(இ-ள்.) தனம் - பொன்னையும், தந்தி மருப்பு அன்ன தனம் மாதர் - யானைக்கொம்பை நிகர்த்த முலையையுடைய பெண்ணையும், தரை-மண்ணையும், விரும்புதல் நந்த - விரும்புதல்கெட, நந்தம் திகழ் தண் துறை தோறும் - சங்குகள் விளங்குகின்ற குளிர்மையாகிய நீர்த்துறைதோறும், மெல் சஞ்சரிகம் தனந்தனந் தந்திமியென் கல்வளையன் - மென்மையாகிய வண்டுகள் தனந்தனந் தந்திமியென் றொலிக்கப்படுங் கல்வளைப் பதியையுடையவர், சங்கம் குழை காதன் நந்தன் - சங்கக்குண்டலத்தை யணிந்த திருச்செவியினையுடையராகிய சிவபெருமானுடைய புத்திரர், அம் தந்தம் ஒன்றான்-அழகிய கொம்பொன்றையுடையவர், என்று நெஞ்சந்தனில் உன்னும் - என்று (விக்கினேசுவரரை) மனத்தி னினையுங்கள் (சகத்தீரே).

(கு-ரை.) நந்தனன் என்பதில் னகரந்தொகுத்தது. (சு)

சந்தன மின்னுமொற் கச்சணி பாரத் தனதடம்ப
சந்தன மின்னிடைப் பூவஞ்சிக் கொம்பனை தையலுட்க
சந்தன மின்னனுற் றுள்கல் வளையன் றனதிடம்போஞ்
சந்தன மின்னம் வரக்கண்டி லேமென்ன தாமதமே.

(இ-ள்.) மின் அன இடை வஞ்சி பூ கொம்பு அன தையல் - மின்னலை நிகர்த்த இடையினையுடைய வஞ்சிப் பூங்கொம்பை யொத்த தலைவியானவள், சந்தனம் மின்னு பொன் கச்சு அணி பாரம் தன தடம் பசந்து - சந்தனத்தையுடைய விளங்குகின்ற பொற்கச்சணியப்பட்ட பாரமாகிய தனதடம் பசலையுற, அனம் உள் கசந்து - அன்னத்தை யுள் வெறுத்து, இன்னல் உற்றாள் - துன்பமுற்றாள், கல்வளையன் றனது இடம் சந்து போம் அனம் - கல்வளைப்பதியை யுடையராகிய விநாயகரிடத்துத் தூதுசென்ற அன்னம், இன்னும் வர கண்டிலேம் - இன்னமும் வரக்கண்டிலேம், என்ன தாமதம் - யாது தாமதம் ?

(குறை-ர.) அன்ன அன்ன அன்னம் அன்னம் என்பவற்றில் னகரங்கள் இடைக்குறையாயின. மேல்வரு மிடைக்குறைகளையு முய்த்துணர்ந்துகொள்க. சந்தனமின்னு என்றதற்கு சந்தனம் விளங்கப்பெற்ற என்று பொருளுரைப்பினு மமையும். பசந்து பசக்கவென்பதன் றிரிபு. இது புறப்பொருளில் கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் தலைவியுடைய வருத்தத்தைக் குறித்துத் தூதனுப்பிய அன்னத்தைக்காணாது வருந்துந் தோழியர் தம்முட் கூறுங் கூற்று. (௭)

தாமதிக் காந்தச் சிலைபோன் மனத்தினைத் தந்தசைகா
தாமதிக் காந்தகை மென்மொழிப பூமின் றலைமகன்வே
தாமதிக் காந்தா மாகிநின் றோன்மைந்த தண்ணிதழித்
தாமதிக் காந்தம் புகழ்கல் வளையநின் றாட்கஞ்சமே.

(இ-ள்.) அசை காதா - அசைகின்ற காதையுடையவரே, மது இக்கு ஆம் தகை மெல்மொழி பூமின் தலைமகன் - தேனுங்கரும்பும் (நிகர்) ஆகும் (மதுரமாகிய) தன்மையையுடைய மென்மையாகிய மொழியினையுடைய இலக்குமிக்கு நாயகராகிய விஷ்ணுவும், வேதா - பிரமனும், மதிக்க அந்தரமாகி நின்றோன் மைந்த - கருத மறைவாய் நின்றவராகிய பரமசிவனுடைய குமாரரே, தண் இதழித் தாம - குளிர்மையாகிய கொன்றைப் பூமாலையையுடையவரே, திக்கு அந்தம் புகழ்

கல்வளைய-திக்குகளின் முடிவு (வரைக்கும்) புகழப்படுகின்ற கல்வளைப் பதியையுடையவரே, மதிகாந்தம் சிலைபோல் மனத்தினை தந்து-சந்திர காந்தக்கல்லை யொத்த (உருகும்) மனத்தை (முன்னர்த்) தந்து (நமக் கன்பனுக்கி), நின் தாள் கஞ்சம் தா-நமது திருவடித்தாமரைப்பூவைப் (பின்னர்த்) தந்தருள்வீர்.

(கு-ரை.) இச்செய்யுள் பூட்டுவிற்பொருள்கோள். பூவின்றலை மகன் என்றுபாடமாயின் பூமிதேவிக்கு நாயகரென்று பொருளுரைக்க. மதிக்காந்தம் என்பது பரூஉமொழி. திக்காந்தம் நீட்டல் விகாரம் பெற்றது. இதழி, கஞ்சம்: ஆகுபெயர்கள். மேல் இவ்வாறு பெருவழக் காவரு மாகுபெயர்களை உய்த்துணர்ந்துகொள்க. (அ)

கஞ்சக் கரந்தனின் மூவிலை வேல்கும்பங் கார்முகஞ்சங்
கஞ்சக் கரங்கதை மாதுள மேந்தி கவின்களம்பூ
கஞ்சக் கரம்பயில் வேல்வலை கைக்கொரு காந்தன்பொன்னு
கஞ்சக் கரம்புவி கும்பிடுங் கல்வளைக் கைவரையே.

(இ-ள்) கஞ்சம் கரம் தனின் மூவிலைவேல் கும்பம் கார்முகம் சங்கம் சக்கரம் கதை மாதுளம் ஏந்தி - தாமரை மலரை நிகர்த்த திருக் கரங்களில் மூன்றாகிய இலைபோலுந் தலைகளையுடைய சூலாயுதத்தை யும் கும்பத்தையும் வில்லையும் சங்கையுஞ் சக்கரத்தையுந் தண்டாயுதத் தையு மாதுளம்பழத்தையு மேந்தியிருப்பவரும், பூகம் கவின் களம் - கமுகுபோலு மழகிய கழுத்தையும், அரம் பயில் வேல் சக்கு - அரம் பயின்ற வேல்போலுங் கண்ணினையுமுடைய, வலைக்கு ஒரு காந்தன்-வல்லவைக்கோர் நாயகரும், பொன் நாகம் சக்கரம் புவி கும்பிடும் கல் வளை கை வரையே - பொன்னாகிய தேவலோகத்தாரும் வட்டமாகிய பூமியிலுள்ளாரும் வணங்குங் கல்வளைப்பதியிலுள்ள யானையே.

(கு-ரை) நாகம், புவி: ஆகுபெயர்கள். பூகம், மெலிக்கும்வழி மெலித்தல். பயிலல் ஈண்டு அராவுதல். அரம் பயில்வேல் என்பதற்கு அரத்தையும் (போர்) பயிலுகின்றவேலையும் என்று பொருள் கூறினு மமையும். ஈற்றேகாரந் தேற்றப்பொருட்டு. (க)

வரையாரம் பாலன்ன தோணகை வாணி வலவைகண
வரையாரம் பார்சடை யார்கல் வளைவெற்ப வண்ணமுத்தேன்
வரையாரம் பாளிதப் பூட்கொங்கை மீது வயங்குதொய்யில்
வரையாரம் பால விழியா ளிடையின் வறுமைகண்டே.

(இ-ள்.) வரை ஆரம் பால் அன்ன தோள் நகை வாணி வலவை கணவர் - மூங்கிலு முத்தும் பாலும்போன்ற தோளையும் பல்லையுஞ் சொல்லையுமுடைய வல்லவைக்கு நாயகரும், ஐ ஆர் அம்பு ஆர் சடையார்-அழகுநிறைந்த கங்கை நீர் பொருந்தப்பெற்ற சடையினை யுடைய வருமாகிய விநாயகக்கடவுளுடைய, கல்வளை வெற்ப - கல்வளைப்பதியி லுள்ள பொருப்பனே, அம்பு ஆல விழியாள் இடையின் வறுமை கண்டு - அம்பையும் நஞ்சையு நிகர்த்த கண்களையுடையளாகிய தலைவியினது இடையின் சிறுமையைக் கண்டு, கொங்கை - தனத்தில், பூண் மீது - (இன்றியமையாதிருக்கின்ற) ஆபரணத்தின்மேல், பாளிதம் வரை ஆரம் - குழம்பாகிய மலைச்சந்தனத்தையும், வயங்கு தொய்யில் வரையார் - விளங்குகின்ற தொய்யிலெழுதார் (அன்னையர்), (இங்ஙனமா னவளுக்கு) வண்ணம் முத்து ஏன் - (நீகொணர்ந்த) அழகாகிய முத்த மணிமாலையேன்?

(கு-ரை.) ஐயார் அழகிய ஆத்திப்பூமாலையையு மெனினுமமை யும். பாளிதம் கர்ப்பூரத்தைக்கலந்த என்றுரைப்பினுமமையும். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. வறுமை இப்பொருள்படுதலை "வறிது நகைதோற்றல்" என்பதிற்காண்க. இஃது அகப்பொருளில் பாங்கி கையுறை மறுத்தற்கிளவி. (௯0)

மைக்கண்ட னேறிய தேரச் சறுக்கும் வரதன்வெந்தீ
மைக்கண்ட நம்மையொட் டாவைங் கரத்தண்ணல் வாழுமிடம்
மைக்கண் டவள நகையார் குடையு மடுவினின்மா
மைக்கண்ட னீழலிற் சங்கீனுந தென்கல் வளைபதியே.

(இ-ள்.) மை கண்டன் ஏறிய தேர் அச்சு அறுக்கும் வாதன் - கருமையாகியமிடற்றினை யுடையராகிய சிவபெருமா னேறிய தேரின தச்சை யறுத்த வரதரும், வெம் தீமைக்கு அண்ட நம்மை ஒட்டா ஐங் கரத்து அண்ணல்-வெம்மையாகிய தீமையிடத்துச் சார நம்மை விடாத ஐந்து திருக்கரங்களையுடைய தலைவருமாகிய விநாயகக்கடவுள், வாழும் இடம் - வாழுமிடமாவது, மை கண் தவளம் நகையார் குடையும் மடு வினில் - மையையுடைய கண்களையும் வெண்மையாகிய பற்களையு முடையராகிய மகளிராடுங்குளத்தில், மாமை கண்டல் நீழலில் - அழ காகிய தாழைமரநீழலில், சங்கு ஈனும் தென் கல்வளைப் பதியே-சங்கு கள் (முத்துக்களை) ஈனப்பெறுங் கல்வளைப்பதியே (ஆகும்).

(கு-ரை.) குவ்வுருபு கண்ணுருபின் றிரிபு. (கக)

கல்வளை யாத விரும்புநெஞ் சேகைய ரோடுறவா
கல்வளை யார்சுனை வாயரக் காம்பல்செங் காவியின்பக்
கல்வளை யார நிலாவீச விள்ளுங் கழனிசுற் றுங்
கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன்புகழே.

(இ-ள்) வளையாத இரும்பு நெஞ்சே - வளையாத இரும்பையொ த்த மனமே, கையரோடு உறவு ஆகல்-கீழ்மக்களோ டுறவாகுத லொழி ந்து, வள் ஐயார் சுனைவாய் அரக்கு ஆம்பல் - வளமுமழகும் பொருந்திய சுனையிடத்துச் செவ்வாம்பற்பூ, செம் காவியின் பக்கல் வளை ஆரம் நிலா வீச விள்ளும் - அழகாகிய காவிப்பூவி னயலில் சங்கு முத்து நிலாவை வீச விரியப்பெறும், கழனி சுற்றும் - வயல்சூழப்பெற்ற, கல்வளையான் அங்குச பாசம் ஏந்தும் கரன் புகழே கல் - கல்வளைப் பதியையுடையவரும் அங்குச பாசங்களை யேந்துந் திருக்கரங்களையுடை யவருமாகிய விநாயகக்கடவுளது புகழையே கற்பாய்.

(கு ரை) இதுவும் பூட்டுவிற்பொருள்கோள். ஆகல் என்னும் எதிர்மறைவியங்கோள் வினைமுற்று வினையெச்சமானது; வினைமுற் றுவுரைப்பினுமமையும். வள்ளையார் என்பதில் ளகரந்தொகுத்தது.

வளையார் என்பதற்கு வள்ளைக்கொடி பொருந்திய எனினுமமையும். அரக்காம்பல் செங்காவியின் பக்கல் வளையார நிலாவீச விள்ளும் என்றதற்கு சேதாம்பலினதும் செங்காவியினதும் பக்கத்தில் சங்கு முத்துக்கள் நிலாவைவீச (அவை) விரியும் என்று பொருள் கூறினுமமையும்.

கரும்பனை யத்தனைப் பூவே ழிடந்தசெங் கண்விடைப்பா
கரும்பனை யத்துவக் கீர்த்துடல் போர்த்த கடவுண்மொழிக்
கரும்பனை யத்தர்கை மாங்கனி வாங்கிய கல்வளைமா
கரும்பனை யத்தனை யான்மற வேன்புன் கவிதைகொண்டே.

(இ-ள்.) கரும் பனை அத்தனை-கருமையாகிய பனைபோலுந் துதிக்கையினையுடையவரும், ஏழ் பூ இடந்த செங்கண் விடைபாகர் - (கீழ்) ஏழுலகத்தையும் (பன்றிவடிவாய்க்) கிழித்த செம்மையாகிய கண்ணை யுடைய (விட்டுணுவாகிய) இடபத்தை யூரும் பாகர், உம்பல் நைய துவக்கு ஈர்த்து உடல் போர்த்த கடவுள்-யானை வருந்தத் தோலை யுரித்துத் திருமேனியிற் போர்த்த கடவுள், கரும்பு மொழி அனை அத்தர் - கரும்புபோலு மொழியினையுடைய வுமாதேவியாகிய வாமபாகர், கை மாங்கனி வாங்கிய - (அவரது) திருக்கரத்தில் மாம்பழத்தை வாங்கிய, கல்வளை மாகர் உம்பனை-கல்வளைப்பதியிலுள்ள தேவர்களுக்குந்தேவரும், அத்தனை-(யாவர்க்குந்) தந்தையுமாகிய விநாயகக்கடவுளை, யான் புன் கவிதைகொண்டு மறவேன் - யான் புல்லியகவியாற் (பாடுதலை) மறவேன்.

(கு-ரை) விடைப்பாகர் என்றதற்கு விடைமேலேறி யருள்பவர் என்றுரைப்பினுமமையும். அனை இடைக்குறை. மேல் இவ்வாறு பெருவழக்காவரு மிடைக்குறைகளை யுய்த்துணர்ந்து கொள்க. (கரு)

கவிநா யகன்றிடு வாய்க்கிரைப் பண்டங் கறையிரத்தக்
கவிஞய கன்மக் குடம்பையை வீக்கியென் கண்டபயன்
கவிநா யகன்றெழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுங்
கவிநா யகதிருக் கல்வளை வாழுங் கணபதியே.

(இ-ள்.) கவி நாயகன் தொழும் ராமன் கொலை பவம் காய்ந்திடு துங்க விநாயக - குரங்குகளுக்குத் தலைவனாகிய அனுமானால் வணங்கப்படும் ஸ்ரீ ராமரது பிரமஹத்திதோடத்தை அழித்த உயர்ச்சியாகிய விநாயகக்கடவுளே, திரு கல்வளை வாழும் கணபதியே - அழகாகிய கல்வளைப்பதியில் வாழுங் கணபதியே, நாய் கவி அகன்றிடு வாய்க்கு இரைப்பண்டம்-நாய் கவ்விக்கொண்டோடும் (அதனது) வாய்க்கிரைப் பண்டமும், கறை இரத்தம் கவின் ஆய கன்மம் குடம்பையை - கறையாகிய இரத்தத்தா லழகுண்டாகப்பெற்ற கன்மக்கூடாகிய வுடலை, வீக்கி - பருக்கச்செய்து, கண்ட பயன் என் - (யான்) கண்ட பயன் (சிறிதும்) இல்லை.

(கு-ரை.) கவ்வி என்பதில் வகரந்தொகுத்தது. கறை இரத்தம், இருபெயரொட்டு. எவன் என்பது, என் என இடைக்குறையா நின்று இல்லை என்னும் பொருள்பயந்தது. (கச)

கணத்தலை வன்குழ விப்பிறைக் கோட்டன் கதிர்மணிப்பைக்
கணத்தலை வன்னச் சராக்கச் சரையன் களமரில்லங்
கணத்தலை வன்ன வளையூருங் கல்வளை காணிலரைக்
கணத்தலை வற்பகை முன்பணி மானுங் கருதிடினே.

(இ-ள்.) கணத் தலைவன் - கணங்களுக்குத் தலைவரும், குழவிப் பிறைக் கோட்டன் - இளமையாகிய பிறைபோலுங் கொம்பினையுடையவரும், கதிர் மணி பை கணத் தலை வல் நச்சு அராக்கச்சு அரையன் - கிரணத்தையுடைய மணியினையும் படத்தினையுமுடைய கூட்டமாகிய தலைகளையும் வலிய நஞ்சினையுமுடைய சர்ப்பக் கச்சையணிந்த அரையினையுடையவரு மாகிய விநாயகக்கடவுளது, களமர் இல் அங்கணத் தலை வன்ன வளை ஊரும் கல்வளை காணில் - உழவருடைய வீட்டின் முற்றத்தின்கண் அழகிய சங்குகள் ஊருகின்ற கல்வளைப்பதியைக் கண்டால், அலைவு - (கண்டவரது) துன்பம், கருதிடில் - ஆராயுமிடத்து, அரைக்கணத்து அற்பகை முன்பனி மானும் - அரைக்கணப்

பொழுதில் இருளுக்குப் பகையாகிய சூரியனுக்குமுன் பனி (யழிதல்) போல அழிந்துவிடும். (கரு)

கரியா னனத்தன் றொழுபதம் வேண்டிக்கண் ணூர்பவஞ்சங்
கரியா னனத்த மவர்க்கிழைப் பான்கடற் காசினிக்கோர்
கரியா னநத்தம் புரைகோட்டுக் கல்வளைக் கன்னமத
கரியா னனத்தன் புகழ்பாடி யுள்ளங் கசிந்திடுமே.

(இ-ள்.) கரியான் அனத்தன் தொழு பதம் வேண்டிக் கண்ணூர் பவம் சங்கரியான் - விஷ்ணுமூர்த்தியும் அன்ன வாகனராகிய பிரம தேவரும் வணங்குகின்ற (தமது) திருவடியை விரும்பிக் கருதாதவருடைய பாவங்களை யழிக்காதவரும், அவர்க்கு அனத்தம் இழைப்பான் - அவருக்கு நாசஞ்செய்பவரும், கடல் காசினிக்கு ஓர் கரியான கல்வளை நத்தம் புரை கோட்டு கன்ன மத கரி ஆனனத்தன் - கடலையுடைய பூலோகத்துக்கோர் சாட்சியான கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற சங்கை நிகர்த்த கொம்பினையுங் கன்ன மதத்தினையு முடைய யானை வதனத்தை யுடையவரு மாகிய விக்கினேசுவரக் கடவுளது, புகழ்பாடி உள்ளம் கசிந்திடும் - கீர்த்தியைப்பாடி மனமுருகுவீர் (சகத்திரே நமக்குப் பேரின்பமுத்தி கைகூடும்).

(கு-ரை) வைத்தியர் நோயாளருக்குக் கண்ணிற் படலத்தை யுரித்தலாதியவற்றைப் புரிதல்போலத் தீமைசெய்வார்க்கு அனத்தமிழைத்தனு மருளேயாதலிற் கடவுளிலக்ஷணத்துக்கு மாறுபடாமைகாண்க. கரியானனத்தன்றொழுபதம் வேண்டில் என்று பாடமாயின், விட்டுணுவும் பிரமதேவருந் தொழுகின்ற மேற்பதத்தை விரும்பினுல் என்று பொருளுரைக்க. (கசு)

சிந்தா மணிதென்ற லன்றி னிலாப்பகை செய்யவணி
சிந்தா மணிமுலை வாடின ளேழு செகமளந்த
சிந்தா மணிதுள வன்றேறு கல்வளைச் செய்யவருட்
சிந்தா மணிவாக் காதேனும் டயோதரச் செல்வினமே.

(இ-ள்.) சிந்து ஆ மணி தென்றல் அன்றில் நிலா பகைசெய்ய - கடலும் பசுவின்கழுத்திற் கட்டப்பட்ட மணியுந் தென்றற்காற்றும் அன்றிற்பறவையுஞ் சந்திரனும் பகையைச்செய்ய, மணிமுலை அணி சிந்தா வாடினள் - அழகாகியதனங்களையுடைய தலைவி அழகழிந்து வாடினாள், பயோதரச் செல் இனமே-நீரை உதரத்திற் கொண்ட முகிலினமே, எழு செகம் அளந்த சிந்து ஆம் அணி துளவன் தேடு கல்வளைச் செய்ய அருள் சிந்தாமணி வர காணேம்-எழு(தீவாகிய)பூமியை (ஓரடியால்) அளந்த குறளாகிய அணிகின்ற துளவமாலையையுடைய விஷ்ணுமூர்த்தியு நாடுகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற செம்மையாகிய அருளினையுடைய சிந்தாமணிபோலும் விநாயகக்கடவுள் வரக்கண்டிலேம் (இஃதென்னவினையோ).

(கு ரை) நிலா, எழு, சிந்தாமணி: ஆகுபெயர்கள். அன்பருக்கு நினைத்தவற்றைக் கொடுத்தல் பற்றிச் சிந்தாமணியென்றார். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்தபக்கத்தில் தலைவியின் வாட்டங் கண்ட தோழியர் மேகங்களோடு கூறுங்கூற்று. (க௭)

தரங்க வளக்க ரொலிவே யிசைநனி தாக்கத்துப்ப
தரங்க வளக்கரிக் கொங்கைக் குதவிலன் றுரைநிரந்
தரங்க வலைப்பட வென்னை விடாமத தந்திசொல்லாந்
தரங்க வளக்கல் வளைப்பதி மேவிய தற்பரனே.

(இ-ள்.) தரங்க அளக்கர் ஒலி வேய் இசைநனி தாக்க-திரையையுடைய கடலொலியும் வேய்ங்குழலோசையும் (எமது தலைவியை) மிகவுந் தாக்க, (அதனையாமனுப்பிய தூதாலறிந்தும்) துப்பு அதரம் கவளக்கரிக் கொங்கைக்கு - பவளம்போலும் அதரத்தினையுங் கவளவுணவைக் கொள்ளுகின்ற யானைபோலுந் தனத்தினையுமுடைய அத்தலைவிக்கு, நிரந்தரம் கவலைப்பட என்னைவிடா மததந்தி - எப்பொழுதுங்கவலைப்பட என்னைவிடாத மதயானையும், சொல் ஆந்தரங்க வளக் கல்வளைப்பதி மேவியதற்பரன் - (புகழ்ந்து) சொல்லப்படுகின்ற உச்சி

தமாகிய வளத்தினையுடைய கல்வளைப்பதியில் வாழும் ஆன்மநாயகரு மாகிய விநாயகக்கடவுள், தாரை உதவிலன்-(தமது) மாலையைக் கொடுக்கின்றிலர் (அவரது திருவுள்ள மிருந்தவாறென்).

(கு-ரை) வேய், ஆகுபெயர். அதரங்கவளம், மெலிக்கும் வழி மெலித்தல் யானை மான் ஆதிய சிலபொருள்களின் ஒவ்வோருறுப்பு மகளிரது ஒவ்வோருறுப்புக்கு நிகராகவும் முதல் சினைகளி னொற்றுமைபற்றி அம்முதற் பொருள்களை உவமைப் பொருள்களாக வழங்கலும் புலவர்வழக்காதலிற் கரிக்கொங்கை யெனப்பட்டது; ஆகுபெயரெனினுமாம். இதுவும் மேற்படி பக்கத்தில் தலைவிக்கு மாலையைக் கொடாத விநாயகக்கடவுளது நெஞ்சத்தின் வன்மையைத் தோழியர் தம்முட் கூறுங்கூற்று. (சஅ)

பரசங்க முத்தமிழ் கல்லா வெனையனைப் பாவிதிகம்
பரசங் கரவென்று மெய்ந்நொந்து பெற்ற பலனன்றுதா
பரசங் கமவுயி ருக்குயி ராய பரஞ்சுடரே
பரசங்க மாறந் தணர்போற்றுங் கல்வளைப் பண்ணவனே.

(இ-ள்.) தாபர சங்கம உயிருக்கு உயிர் ஆய பரஞ்சுடரே - அசர முஞ்சரமுமாகிய இருவகை உயிர்களுக்கு முயிராகிய பரஞ்சோதியே, பரசு ஆறு அங்க அந்தணர் போற்றும் கல்வளைப் பண்ணவனே - துதிக்கப்படுகின்ற ஆறாகிய வேதாங்கங்களையு முணர்ந்த மறையவர்கள் போற்றுங் கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளே, பர சங்க முத்தமிழ் கல்லா எனை - மேலான சங்கப்புலவரா லாராயப்பட்ட மூன்றாகிய தமிழ் நூல்களைக் கல்லாதவென்னை, பாவி அனை - பாவியாகிய (என்) அன்னை, திகம்பர சங்கர என்று மெய் நொந்து பெற்ற பலன் நன்று - திகம்பரரே சங்கரரே யென்று துதித்துத் தேகம் நொந்து பெற்ற பலன் நல்லது.

(கு-ரை) சங்கம், தமிழ்: ஆகுபெயர்கள். முத்தமிழ்: இயல் இசை நாடகம். என்னை என்பதில் னகரந்தொகுத்தது. அனை இடைக்குறை. நன்று, தீயதென்னும் பொருளைத்தந்தது.

அவலம் புரிமுக் குறும்பைந்து பூத மடக்கிமென்றா
யவலம் புரிமலர் தூய்த்தொழு தேத்த வருண்மெய்யர்மெய்
யவலம் புரிமருப் புத்தக ரூரு மறுமுகன்முன்
னவலம் புரிவயற் கல்வளை யாலயத் தாதிக்கனே.

(இ-ள்.) மெய்யர் மெய்ய - மெய்ம்மையையுடையவர்க்கு மெய்ம்மையானவரே, வலம் புரி மருப்புத் தகர் ஊரும் அறுமுகன் முன்ன-வெற்றியைத் தருகின்ற கொம்பினையுடைய ஆட்டுக்கடா வாகனத்தைச் செலுத்தியருளும் ஆறுமுகக்கடவுளுக்கு முன்னவரே, வலம்புரி வயல் கல்வளை ஆலயத்து ஆதிக்கனே-சங்குகள் (பொருந்திய) வயலையுடைய கல்வளைப்பதியில் வாழு முயர்ச்சியுடையவரே, அவலம் புரி முக்குறும்பு ஐந்து பூதம் அடக்கி - துன்பத்தைச் செய்கின்ற முக்குற்றங்களையும் ஐம்புலன்களையு மடக்கி, மெல் தூய வலம்புரி மலர் தூய்த் தொழுது எத்த அருள் - மென்மையாகிய தூய்மையை யுடைய நந்தியாவர்த்த மலர்களைத் தூவித் தேவரீரை வணங்கித் துதிக்க (எனக்கு) அருள் புரிவீர்.

(கு-ரை.) முக்குற்றம்: காமம் வெகுளி மயக்கம். ஐம்புலன்: நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை. புலன்களைப் பூதமென்று காரணகாரிய ஒற்றுமை நயம்பற்றி உபசரிக்கப்பட்டது. (உ0)

திக்குடை யானடி யைப்போற்றிப் பூவலஞ் சென்றுசெஞ்சோ
திக்குடை நீழலின் மேவந்த ணிர்செப்பு வீரென்றன்பத்
திக்குடை யான்கல் வளையான் சிலம்பினிற் றேன்பண்ணையோ
திக்குடை போதிசசெங் காலியுங் காளையுஞ் சென்றதுவே.

(இ-ள்.) திகரு உடையான் அடியை போற்றி - திக்காகிய ஆடையை யுடையராகிய சிவபெருமானுடைய திருவடியைப் போற்றி, பூ வலம் சென்று - பூமியைப்பிரதக்கிணஞ் (செய்யச்) சென்று, செம் சோதி குடை நீழல் மேவு அந்தணீர் - செம்மையாகிய சோதியினை யுடைய குடைநீழலிற் சேரு மந்தணரே, என்றன் பத்திக்கு உடை

யவருங் கல்வளைப்பதியையுடையவரு மாகிய விநாயகக்கடவுளது மலையில், தேன் பண்ணை ஓதிக் குடை ஓதிச் செம் காவியும் காளையும் சென்றது-வண்டுகளிசையைப் பாடிக் கிண்டபெறுங் கூந்தலையுடைய செவ்வடியினளாகிய ஒரு தலைவியும் ஒரு தலைவனுங் (கூடிச்) சென்றதைக் (கண்டீரோ), செப்புவீர் - கூறுவீர்.

(கு-ரை.) இஃது ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதல். (உக)

வேதா ரணிய முறைவேயின் முத்தருள் வேழமும்ப
வேதா ரணியம்பொ ஞேடேத்து கல்வளை வெற்பன்னமே
வேதா ரணிய மலைதிருக் கோயில் விளங்கநின்பால்
வேதா ரணியந்த காரநம் பாலில் விதித்தனனே.

(இ-ள்.) வேதாரணியம் உறை வேயின் முத்து அருள் வேழம் - திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற மூங்கின் முத்தாகிய சிவபெருமான் பெற்றருளிய யானைமுகக்கடவுளது, தாரணி அம் பொன்ஞேடு உய்யவே ஏத்து கல்வளை வெற்பு அன்னமே- மண்ணுலகத்தாரும் பொன்னுலகத்தாரும் (தாம்) உய்யும் பொருட்டாகவே துதிக்கின்ற கல்வளைப்பதியி லுள்ள மலையில்வாழும் அன்னம் போன்றவளே, வேதா-பிரமதேவர், இரணிய மலை திருக் கோயில் நின்பால் விளங்க-பொன்மலையும் இலக்குமிக்கு மாளிகையாகிய தாமரைப்பூவும் நின்னிடத்து விளங்கவும், வே(ய்) தார் அணி அநதகாரம் நம் பாலில் விதித்தனன் - அலங்கரிக்கப்பட்ட மாலையை யணிந்த இருளை (யான் காண) என் பக்கலில் விதித்தார்.

(கு-ரை.) தாரணி, பொன்ஞேடு, அன்னம், இரணியமலை, திருக்கோயில், அந்தகாரம்: ஆகுபெயர்கள். மேல்வருமாறு பெயர்களையும் முய்த்துணர்க. இரணியமலை - முலை திருக்கோயில் - முகம். அந்தகாரம்-கூந்தல். இஃது இடையூறு கிளத்தற் கிளவியின்பாற்று. (உஉ)

தனையா யுதவிய தநதையில் வாழ்க்கை தணாந்தருட்சிந்
தனையா யுதகந் தனிநின்று செய்யுந் தவத்திர்வெண்டந்

தனையா யுதவி யகிலம் படைக்குஞ் சதுர்வித வே
தனையா யுதன்றொழுங் கல்வளை யானை சரண்புகுமே.

(இ-ள்.) தனை ஆய் உதவிய தந்தை இல்வாழ்க்கை தணந்து-மகவாகப் பெற்ற பிதாவையும் இல்லின்கண் வாழ்தலையும் நீங்கி, அருள் சிந்தனையாய் - திருவருளைப்பெறுஞ் சிந்தனையாகி, உதகந்தன்னில் நின்று செய்யுந் தவத்திர் - நீரின்கணின்று செய்யுந் தவத்தினையுடையீர், (நீவி ரிங்ஙனம் வருந்தாது) வெண்தந்தனை-வெண்மையாகிய (ஏக) தந்தத்தினையுடையவரும், ஆய் உததி அகிலம் படைக்கும் சதுர்வித வேதன்-ஆராய்ந்த கடலையுடைய பூமியைச் சிருட்டித்த நால்வகைமறையையு முணர்ந்த பிரமதேவரும், ஐயாயுதன் - பஞ்சாயுதங்களையுடையராகிய விஷ்ணுமூர்த்தியும், தொழும் - வணங்குகின்ற, கல்வளையானை சரண் புகும் - கல்வளைப்பதியை யுடையவருமாகிய விநாயகக்கடவுளைச் சரணடைவீர் (முத்தி சித்தியாகும்).

(கு றி.) ஆய், ஆகவென்பதன் றிரிபு. ஆயுததி என்பதில் ஆய் 'வரிப்புனைபந்து' என்பதிற்போல வினையெச்சப் பொருடந்தது. (உரு)

சரந்தண் டருமலர் வேண்மைத் துனன்செந் தமிழ்க்கலைபஞ்
சரந்தண் டலையிற் கிளிதேருங் கல்வளை தங்கிடுகுஞ்
சரந்தண்ட பாணி யழகினைக் காணப்பொற் றாமரைவா
சரந்தண் டர்போல விமையாத பார்வையைத் தந்திலரே.

(இ-ள்.) தண் தரு மலர் சரம் வேள் மைத்துனன் - குளிர்மையைத் தருகின்ற மலர்ப்பாணங்களையுடைய மன்மதனுக்கு மைத்துனரும், செம் தமிழ்க் கலை தண்டலையில் பஞ்சரம் கிளி தேரும் கல்வளை தங்கிடு குஞ்சரம்-செந்தமிழ்க்கலைகளைச் சோலையிற் கூட்டின்க ணுள்ள கிளிகள் படிக்கின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கும் யானையும், தண்ட பாணி - தண்டாயுதத்தை யேந்திய திருகரத்தினை யுடையவருமாகிய விநாயகக் கடவுளது, அழகினை காண - பேரழகை (யான்) காண, பொன் தாமரை வாசர் அந்த அண்டர் போல இமையாத பார்வையைத்

தந்திலர் - அழகிய தாமரைப்பூவில் வசிப்பவராகிய பிரமதேவர் அத்தேவர்க்குப் போல இமையாத கண்களை (எனக்குத்) தந்திலர்.

(கு-ரை.) சாத்தண் பஞ்சாத்தண்டலை எனற்பாலன மெலித்தன. அந்த என்றது ஈற்றகரந் தொகுத்தது. மேலும் இங்ஙனம்வரும் விகாரங்களை யுய்த்துணர்க. (உச)

தந்தன தாமரை வெற்பிரு ணேரிடை சாய்நடைபா
தந்தனந் தாரக்குழல் யாமளை கோமளை சாமளைபெண்
தந்தநந் தாபணை நெல்விளை கல்வளை தன்னிலொற்றைத்
தந்தநந் தாவிளக் கேயெனப் போமிருட் சம்பந்தமே.

(இ-ள்.) தந்த அனம் தாமரை வெற்பு இருள் நேர் இடை சாய் நடை பாதம் தனம் தாரக் குழல் - நூலையும் அன்ன நடையினையுந் தாமரைமலரையும் மலையையும் இருளையும் (முறையே) நிகர்த்த இடையினையும் அசைநடையினையும் அடியினையும் முலையினையும் மாலையை யணிகின்ற கூந்தலினையு முடைய, யாமளை கோமளை சாமளைப் பெண் தந்த நந்தா - இளமையாகிய பச்சைநிறத்தையுடைய உமாதேவியார் பெற்ற புதல்வரே, நெல் விளை பணை கல்வளை தன்னில் ஒற்றைத் தந்த - நெல்விளைகின்ற வயல்களையுடைய கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற ஏகதந்தரே, நந்தா விளக்கே - (ஒருகாலும்) ஒளிகெடாத விளக்கே, என - என்று துதிக்க, இருள் சம்பந்தம் போம் - மல சம்பந்தம் நீங்கிவிடும்.

(கு-ரை.) யாமளை கோமளம் ஒரு பொருட்பன்மொழி (உரு)

சம்பந்த மாவினைத் தென்னவற் கிந்தவன் றங்குமருட்
சம்பந்த மாமுனி பாமாலை சூடி தருபொருண்மா
சம்பந்த மாலம் புனைசூழுங் கல்வளைத் தந்திவெம்பா
சம்பந்த மாமையன் பானீக்கி வாழ்வுசம் பாதிப்பனே.

(இ-ள்.) சம்பு அந்த மாவினை தென்னவர்க்கு ஈந்தவன் - சிவனாகிய அக் குதிரைகளை (தமதன்பராகிய மாணிக்கவாசக சுவாமிகளுக்

காகப்) பாண்டியனுக்குக் கொடுத்தவரும், அருள் தாங்கும் மா சம்பந்த முனி பா மாலை சூடி - அருளைத் தாங்கிய பெருமையாகிய திருஞான சம்பந்த மூர்த்தியாகிய அந்தணரது தேவாரப்பாமாலையைச் சூடியவரு மாகிய சிவபெருமான், தரு பொருள் - பெற்ற புத்திரராகிய, மா சம்பு அம் தமாலம் புன்னை சூழும் கல்வளைத் தந்தி - மாமரமும் நாவன் மரமும் அழகிய பச்சிலைமரமும் புன்னை மரமுஞ் சூழப்பெற்ற கல் வளைப் பதியிலுள்ள யானைமுக விநாயகக்கடவுள், பந்த வெம் மாயை பாசம் - கட்டாகிய வெய்ய மாயா பாசத்தை, என்பால் நீக்கி - என்னி டத்தினின்று நீக்கி, வாழ்வு சம்பாதிப்பன்-மோக்ஷவாழ்வைத் தந்தருள் வார். (உசு)

பாலை வனத்தத்தைக் கியாரளிப் பாரென்று பன்னினளாம்
பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்
பாலை வனத்தகன் றுள்கல் வளைப்பர மானந்தன்றன்
பாலை வனத்தள வும்மன்பி லாரிற் பதைபதைத்தே.

(இ-ள்.) ஐம்பாலை வனத் தடம் கார் கண்டு வெட்கும்படி வந்த மின் - (தன்) கூந்தலை நீரையுடைய பெருமையாகிய மேகங் கண்டு நாணும்படி தோன்றிய நமது மகள், வனத் தத்தைக்கு பாலை யார் அளிப் பார் என்று பன்னினள் - அழகையுடைய கிளிக்குப் பாலை யார் கொ டுப்பாரென்று (நெருநலிற்) கூறினள், கல்வளைப் பரமானந்தன் தன் பால் ஐவனத்து அளவும் அன்பிலாரில் பதை பதைத்து பாலைவனத்து அகன்றாள் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற பரமானந்த குணத்தினராகிய விநாயகக்கடவுண்மீது (ஒரு) மலை நெல்லளவாயினு மன்பிலார் போலப் பதைபதைத்து (இன்றொரு தலைவன்பின்னே) பாலைவனத்திற்சென்றாள் (அவன் நெருநற் குறிப்பானுணர்த்தியதை யானுய்த்துணர்ந்திலேன்).

(து-ரை.) இது செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத் தல். (உஎ)

ைதக்கும் பகழி யுடல்பாய் தறுகட் சயிலம்வந்த
ைதக்கும் பகன தனத்தீர்கண் டீரெனிற் சாற்றிடுமே
ைதக்கும் பகனன்முன் னேனைப் பந்தாடித் தகர்த்துரஞ்சி
ைதக்கும் பகவன்றென் கல்வளை வாசன் றடமலைக்கே.

(இ-ள்) கும்ப கன தனத்தீர் - குடத்தை நிகர்த்த கனத்த தனங்களையுடையீர், மேதைக் கும்பகனன் முன்னேனை பந்து ஆடி தகர்த்து உரம் சிதைக்கும் பகவன் - அறிவினையுடைய கும்பகன்னனுக்கு முன்னேனாகிய இராவணனைப் பந்துபோல (எறிந்து) ஆடித் தகர்த்து (அவனது) வலியை யழித்த கடவுளாகிய, தென் கல்வளை வாசன் - அழகிய கல்வளைப்பதியில் வாசஞ்செய்தருளும் விக்கினேசுவரரது, தடமலைக்கு - பெருமையாகிய மலையில், தைக்கும் பகழி பாய் உடல் தறுகண் சயிலம் வந்ததைக்கண்டீரெனில்-(குறித்த இலக்குத் தப்பாது) தைக்கும் (எனது) பாணந் தைத்த உடலையுடைய அஞ்சாமையாகிய மலைபோலும் யானை (யொன்று ஈண்டு) வந்ததைக் கண்டீராயின், சாற்றிடும் - கூறுவீர்.

(கு-ரை.) குவ்வுருபு. கண்ணுருபின்றிரிபு. இது வேழம் வினுதல். (உஅ)

மலைவல் லியம்பிரி யாத்தில்லைக் கானுறை மாமதங்கி
மலைவல் லியம்பிள நீரின் பயோதரி வானிமய
மலைவல்லி யம்பிகை கான்முளை கல்வளை வாணன்பொங்க
மலைவல் லியம்பா வையானெய் யாமுன் வரவில்லையே.

(இ-ள்.) மலை வல்லியம் பிரியாத் தில்லைக் கான் உறை மா மதங்கி - பொருகின்ற புலிகள் நீங்காத தில்லைவனமாகிய சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கின்ற பெருமையாகிய தவப்பெண்ணும, வல் இளநீர் மலை இபம்பு இன் பயோதரி - சூதாடுகருவியையும் இளநீரையும் ஒப்புச்சொல்லுகின்ற நல்ல தனங்களை யுடையவரும், வான் இமய மலை

வல்லி - பெரிய இமயமலையிற் றோன்றியருளிய கொடியை நிகர்த்தவருமாகிய, அம்பிகை கால் முளை - உமாதேவியாருடைய புத்திரரும், கல்வளை வாணன் - கல்வளைப் பதியில் வாழ்பவருமாகிய விநாயகக்கடவுள், பொங்கு வல் அமலை இயம் பரவையான் எய்யாமுன் வர இல்லையே - மிகுந்த வலிய சத்தத்தைக் கொண்ட முரசாகிய கடலையுடைய மன்மதன் (தன் மலர்ப்பாணங்களை யென்மீது) செலுத்தாமுன்னர் வரவில்லையே (இனி யான் யாது செய்வேன்).

(து-ரை.) கால்முளை, இருபெயரொட்டு. இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்தபக்கத்தில் தலைவி தன்னால் விரும்பப்பட்ட விநாயகக்கடவுள் வந்தருளாமையைக் கவன்றுரைத்தல். (உக)

வரம்பல வன்பருக் கீவா ரெனக்குமெய் வாழ்வுதரு
வரம்பல வன்கொன்றை மாலிகை யாத்தி வனைந்தநற்ற
வரம்பல வன்பெற்ற மாதங்க வானனர் மள்ளர்செய்யும்
வரம்பல வன்குண் டலர்மூடுங் கல்வளை வானவரே.

(இ-ள்.) அம்பு அலவன் கொன்றை மாலிகை ஆத்தி வனைந்த கல் தவர் அம்பலவன் பெற்ற மாதங்க ஆனனர் - கங்கைநீரையும் பிறைமதியையுங் கொன்றைப்பூமாலையையும் ஆத்திப்பூவையுந் (திருமுடியிற்) சூடிய மேருமலையாகிய வில்லினையுடைய சிவபெருமான் பெற்றருளிய யானைவதனத்தரும், மள்ளர் செய்யும் வரம்பு அலவன் குண்டு அலர் மூடும் கல்வளை வானவர் - உழவர் கட்டிய வரம்பிலுள்ள ஞெண்டின் குண்டுகளை மலர்கள் மூடுங் கல்வளைப்பதியிலுள்ள தேவருமாகிய விநாயகக்கடவுள், அன்பருக்கு பல வரம் ஈவார் - (தமது) அன்பர்கட்குப் பல வரங்களைக் கொடுப்பவ(ராதலின்), எனக்கும் மெய் வாழ்வு தருவர் - எனக்கும் மெய்ம்மையாகிய (மோக்ஷ) வாழ்வைத் தந்தருள்வார். (உஉ)

மானஞ் சலஞ்சலத் தீபொலி மண்மயங் காவுயிர்போ
வானஞ் சலஞ்சல மந்திடுங் காற்றுயர் மாற்றவரு

வானஞ் சலஞ்ச லெனவுரைப் பான்கல் வளைப்பதிவாழ்
வானஞ் சலஞ்சலக் கைத்தல மாறன் மருமகனே.

(இ-ள்.) வானம் சலம் சலத்தீ ஒலி மண் மயங்கா - ஆகாயத்தின் கூறாகிய செவியும் நீரின் கூறாகிய வாயுஞ் சினத்தையுடைய தேயுவின் கூறாகிய கண்ணுங் காற்றின் கூறாகிய மெய்யும் பிருதிவியின் கூறாகிய மூக்குமாகிய ஐம்பொறிகளினின்றுங் கலங்கி, அஞ்சு அலஞ்சு - (ஓசை சுவை ஒளி ஊறு நாற்றமென்னும்) ஐம்புலன்களு மலைவுற, உயிர்போவான் அலமந்திடுங்கால் - (உடம்பினின்றும்) உயிர்போதற்குச் சுழலுங்காலத்தில், கல்வளைப் பதி வாழ்வான் - கல்வளைப்பதியில் வாழ்பவரும், அம் சலஞ்சலக் கைத்தல மால்தன் மருமகன் - அழகிய பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கைக்கொண்ட கரத்தினையுடைய விஷ்ணுமூர்த்திக்கு மருகருமாகிய விநாயகக்கடவுள், துயர் மாற்ற வருவான் அஞ்சல் அஞ்சல் என உரைப்பான் - துன்பத்தை நீக்க வருவாராகி (என்னை நோக்கி) அஞ்சற்க அஞ்சற்க என்று கூறியருள்வார்.

(கு-ரை.) அலஞ்சு அலைய வென்பதன் றிரிபு. வருவான் வினைமுற்று வினையெச்சம். (நக)

மகரந் தவள மலர்ச்சோலைப் பொங்கரின் வான்குளிரி
மகரந் தவழ்கல் வளையாகு வாகன வல்லவைவா
மகரந் தவள மருப்பானை வேங்கை மடங்கலெண்கு
மகரந் தவளைபுள் ளானு நின்னை மறப்பரிதே.

(இ-ள்.) மகரந்த வள மலர்ச் சோலைப் பொங்கரில் - தேனையும் அழகைபுமுடைய மலர்ச்சோலையி லுள்ள மரங்களில், வான் குளிர் இமகரம் தவழ் கல்வளை ஆகு வாகன-பெருமையாகிய குளிர்ந்த சந்திரனாரப் பெற்ற கல்வளைப்பதியி லுள்ள மூடிக வாகனரே, வல்லவை வாம - வல்லவையை வாமபாகத்திற் கொண்டவரே, கரம் தவளம் மருப்பு ஆனை வேங்கை மடங்கல் எண்கு மகரம் தவளை புள் ஆனலும் - (யான்) கழுதையும் வெண்மையாகிய கொம்பினையுடைய யானையும்

புலியுஞ் சிங்கமுங் காடியு மகரமீனுந் தவளையும் பறவையுமாகப் பிறந்தாலும், நின்னை மறப்பு அரிது - உம்மை மறத்தல் கூடாது.

(கு-ரை.) பொங்கர், இமகரம்: ஆகுபெயர்கள். (௬௨)

அரவம் புலிங்க வனற்கண்ண வென்றரி போற்றச்சிலம்
பரவம் புலிபணி கேட்பமன் றாடி யருண்மதலை
யரவம் புலியணி கோடீரன் கல்வளை யண்ணல்கண்ணே
யரவம் புலிய குணத்தா ரெனினு மவர்முத்தரே.

(இ-ள்) அர அம் புலிங்க அனல் கண்ண என்று அரி போற்ற - (ஆன்மாக்களை இளைப்பாற்றும்பொருட்டுச்) சங்காரஞ்செய்பவரே அழகிய பொறியையுடைய அக்கினிக்கண்ணரேயென்று திருமால் துதிக்கவும், சிலம்பு அரவம் புலி பணி கேட்ப - (திருவடிச்) சிலம்பினொலியை வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலிமுனிவருங் கேட்கவும், மன்று ஆடி அருள் மதலை - (கனக) சபையின் கண்ணே ஆனந்ததாண்டவஞ்செய்தருளுகின்றவராகிய சிவபெருமான் பெற்றருளிய புத்திரரும், அரவு அம் புலி அணி கோடீரன் - சர்ப்பத்தையும் பிறைமதியையுமணிந்த சடையினை யுடையவரும், கல்வளை அண்ணல் கண்ணேயர் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற தலைவருமாகிய விக்கினேசுவரரிடத்து அன்புடையவர், அவம் புலிய குணத்தார் எனினும் - தீமை சார்ந்த குணத்தினையுடையவ ராயினும், அவர் முத்தரே - அவர் சீவன் முத்தரே.

(கு-ரை.) புல்லிய என்றதின் லகரந் தொகுத்தது. (௬௩)

தாரப்பணி யாரம் பலபூண்டு தேர்முதற் றானைதற்சூழ்
தாரப்பணி யாரைத் தடிந்தல காளலிற் சர்க்கரைசுந்
தாரப்பணி யார மமுதுசெய் வோன்கல் வளைத்தலத்தா
தாரப்பணி யார்வத் தொடுஞ்செய்து வாழ்த றகவுடைத்தே.

(இ-ள்.) தரப்பணி ஆரம் பல பூண்டு - கிரீடத்தையும் பல மணிவடங்களையும் பூண்டு, தேர் முதல் தானை தன் சூழ்தர - தேர்முதலா

கிய (சதுரங்க) சேனைகள் தன்னைச் சூழ்தலைச் செய்ய, பணியாரைத் தடிந்து உலகு ஆளலின் - பகைவரைச் செறுத்து உலகத்தை யாளுத லினும், சர்க்கரை சுந்தரப் பணியாரம் அமுதுசெய்வோன் - சர்க்கரை யையு மழகிய பண்ணிகாரங்களையுந் திருவமுதுசெய்பவராகிய விநாய கக்கடவுளது, கல்வளைத் தலத்து - கல்வளைப்பதியில், ஆதரப் பணி ஆர்வத்தொடுஞ் செய்து வாழ்தல் தகவு உடைத்து - அன்பு செய்தலாகிய பணியை ஆசையோடுஞ் செய்து வாழுதல் தகுதியுடையது.

(கு-ரை.) பணியாரம் மரூஉமொழி. ஆதரம் ஆகுபெயர். (உ௪)

தகரங் கமழ்குந் தளந்தா ளந்தள வின்னகையீர்
தகரங் கமலன் மணக்கோலஞ் செய்த றடாதிருபா
தகரங் கமலஞ் சிவந்தோன் மருகன் றவமற்றபா
தகரங்கண் மேவருங் கல்வளை யான்மலைச் சாரலிலே.

(இ-ள்.) தகரம் கமழ் குந்தளம் - சாந்து மணக்கப் பெற்ற கூந்தலையும், தாளம் தளவு இன் நகையீர்-முத்தும் முல்லைஅரும்பும் போலு முறுவலையு முடையீர், இரு பாத கரங் கமலஞ் சிவந்தோன் மருகன் - இரண்டு பாதங்களுங் கைகளுஞ் செந்தாமரைப் பூப்போலச் சிவந்தவரா கிய விட்டுணுவுடைய மருகரும், தவம் அற்ற பாதகர் அங்கண் மே அரு கல்வளையான் - (முன்னர்ச்செய்த) தவமில்லாத பாதகர்கள் அவ்விடத் திற் பொருந்துத லில்லாத கல்வளைப்பதியை யுடையவரும் ஆகிய விநா யகக்கடவுளது, மலைச்சாரலில் - மலைச்சாரலில், தகர் - (ஈண்டுவெட்டக் கொணர்ந்த) ஆடு, அங்கமலன் மணக்கோல் அஞ்சு எய்தல் தடாது - அனங்கனாகிய மன்மதன் நறுமணத்தினைக் கொண்ட மலர்ப்பாணங்க ளைந்தினையும் எய்தலைத் தடுக்காது (ஆதலின் வெறியாட்டாள நீ வாளா உயிர்க்கொலை செய்யவேண்டா).

(கு-ரை.) மே முதனிலைத் தொழிற்பெயர். இது பாங்கி வெறி விலக்கல். (உரு)

இலங்கை யிராவணன் கண்டதுண் டம்பட வெய்சரம்ப
யிலங்கை யிராமன் கடதாரை சிந்து மிரண்டிருகோ
டிலங்கை யிராவதன் றாழ்கல் வளைய னெனின்முத்திவா
யிலங்கை யிராது கடைத்தா டிறப்பிப்ப னேரம்பனே.

(இ-ள்.) இலங்கை இராவணன் கண்ட துண்டம் பட எய் சரம் பயில் அம் கை இராமன் - இலங்கையிலுள்ள இராவணன் கண்ட துண்டம்படச் செலுத்திய பாணம்பொருந்தப்பெற்ற அழகியகரத்தினை யுடைய இராமாவதாரத்தையுடைய விட்டுணுவும், கட தாரை சிந்தும் இரு இரண்டு கோடு இலங்கு ஐராவதன் தாழ் கல்வளையன் எனின் - மத மழையைச் சொரிகின்ற நான்கு கொம்பு விளங்கப்பெற்ற ஐராவத யானையை யுடையனாகிய இந்திரனும் வணங்கப்பெறுங் கல்வளைப் பதியி லுள்ள விநாயகக்கடவுள் என்று துதித்தால், முத்தி வாயில் அங்கை இராது - மோக்கவாயில் அங்கு (திறவுபடாது) இராது, ஏரம்பன் கடைத் தாள் திறப்பிப்பன்-அவ் விநாயகக் கடவுள் அவ் வாயிற் கதவின் றாளைத் திறப்பிப்பார்.

(கு றை.) அங்கு அங்கை என ஈறு திரிந்தது; ஐகாரச் சாரியை பெற்றதெனினு மமையும். கடை ஆகுபெயர். (உசு)

அம்பலங் காசில் வயல்சூழுங் கல்வளை யைங்கரனா
டம்பலங் காசிபென் றாய்கேள்வர் பின்செல வாமதலா
யம்பலங் காசின் முலையாணின் கைதந்த வாசறப்பொன்
னம்பலங் காசிசென் றேவா தரவென் னருஞ்சொர்க்கமே.

(இ-ள்.) அம்பு அலங்கு ஆசு இல் வயல் சூழும் கல்வளை ஐங்கரன் நாட்டு-நீர் அசையப்பெற்ற குற்றமில்லாத வயல் சூழப்பட்ட கல் வளைப்பதியாகிய விநாயகக் கடவுளது நாட்டில், அம்பல் அங்கு ஆசி என்று ஆய் கேள்வர் பின் செல் அவா மதலாய் - பலரறிந்து புறந் தூற்றலை அங்கு வாழ்த்து என்று கருதுந் தலைவர் பின்சென்ற ஆசை

யைத் தருகின்ற மகனே, என் அரும் சொர்க்கம் தா - எனது அரிய முலைப்பாலைத் தருதற்கு, காசின் முலையாள் அம்பலம் நின் கை தந்த ஆசு அற - (பலருமுறுதல் செய்யுங்) குற்றத்தினையுடைய முலையினை யுடையவளாகிய பரத்தை அழகிய பழத்தை நினது கையிற் றந்த குற்றம் நீங்க, பொன்னம்பலம் காசி சென்றே வா - சிதம்பரத்துக்குங் காசிக் குஞ் சென்றே வருவாய்.

(து-ரை) அவர் மதலாய் என்று பாடமாயின் அத் தலைவரது மகனே என்று பொருளுரைக்க; இங்ஙனம் தலைவன் பரத்தை வீட்டுக் குக் கொண்டுசென்றது பொருது எமது மதலாயென்று விளித்தில ளென்க. காசு, சொர்க்கம், பொன்னம்பலம்: ஆகுபெயர்கள். இது தலைவி பரத்தையைப் பழித்தலின்பாற் படும். பரத்தையைப்பழித்தல் என்றொருகிளவி அகப்பொருளில் யாண்டுக் கூறப்பட்டதெனின் தலை மகட்குக் கற்புக்காலத்துக்குரிய வொழுகலாறெல்லாமதொருத்துணர்த் தியவிடத்துப் பரத்தையைப் பழித்தலுங் கூறப்பட்டதென்க. (௩எ)

கமண்டலம் பாற்கரன் போலாழி யேந்துங் கடவுளர்நா
கமண்டலம் பாதலங் கைகூப்பு தாளொன்று காட்டுவையர்க்
கமண்டலம் பார்க்கு முப் யானம் வளைக்குங் கழனியிற்சங்
கமண்டலம் பாய முழங்கிடுங் கல்வளைக் காரணனே.

(இ-ள்.) அர்க்க மண்டலம் பார்க்கும் உய்யானம் வளைக்குங் கழனியிற் சங்கம் - சூரியமண்டலத்தைக் (கிட்டிப்) பார்க்கும் சோலை சூழப்பெற்ற வயலிடத்துள்ள சங்குகள், மண்டு அலம் பாய முழங்கிடும் கல்வளைக் காரணனே - (உழும்போது) நெருங்கிய கலப்பைகள் பாய முழங்குங் கல்வளைப்பதியி லுள்ள (யாவற்றுக்கும்) காரணராகிய விநாயகக்கடவுளே, கமண்டலம் பாற்கரன்போல் ஆழி ஏந்துங் கடவுளர்-கமண்டலத்தையும் சூரியன்போலுஞ் சக்கரத்தையும் (முறையே) ஏந்திய பிரம விட்டுணுக்களும், நாகம் மண்டலம் பாதலம் - விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் பாதல லோகத்தாரும், கைகூப்பு

தாள்-கைகூப்பி வணங்கும் (நமது) திருவடியை, என்று காட்டுவை- (எனக்கு) எந்நாட் காட்டியருள்வீர்.

காரண வாத திரிசூல பூத கணேசவன்பா
காரண வாதடிதன் கல்வளை நாத கடம்பணிவா
காரண வாத முதலைந் திணைவைத்துக் காத்தழிக்குங்
காரண வாத நடந்தை யுலாவுங் கலகத்திலே.

(இ-ள்.) ரணவாத திரிசூல - போர்வாதத்திற்குரிய முத்தலைச் சூலத்தை யுடையவரே, பூதகணேச - பூதங்களுக்குத்தலைவரே அன்பா கார் அணவாத தென் கல்வளை நாத - அன்புடையாரல்லார் நெருங்காத அழகிய கல்வளைப்பதியி லுள்ள நாதரே, கடம்பு அணி வாகார் அண - கடப்பமலர் மாலையை யணியப்பெற்ற புயத்தினையுடைய ராகிய கந்த ஸ்வாமிக்கு முன்னோரே, வாதம் முதல் ஐந்தினை வைத்துக் காத்து அழி கருங் காரண - ஆகாயமுதலிய பஞ்சபூதங்களையும் (உண்டாக்கி) வைத்துக் காத்து அழிக்குங் காரணரே, வாத நடந்து ஐ உலாவுங் கலகத்திலே கா - வாதம்போய்ச் சேடம் உலாவும் (மரணவேதனை நிகழும்) கலகத்திலே (என்னைக்) காத்தருள்வீர்

(கு-ரை.) வாகர் எனற்பாலது வாகார் என நீண்டது. வாதம் காற்று; ஈண்டு காரணகாரிய ஒற்றுமை நயம்பற்றி அதனைத் தரும் ஆகாயத்திற்கு ஆனது. (௩௧)

கலகத் தமரத் திரையின் றுயரைக் களைந்தருள்சக
கலகத் தமரக தக்கம்பி யாற்செய் கடுக்கைபுல்ல
கலகத் தமரளி வாழ்சோலைக் கல்வளைக் கற்பகவென்
கலகத் தமரிந் தத்திருக் காலெந்தக் கால்வைப்பதே.

(இ-ள்.) கலகத் தமரத திரையின் துயரைக் களைந்தருள் சகல கத்த - (அன்பருக்குக் காமாதி யறுபகைப்) போராகிய ஒலியினை யுடைய கடலால் வருந் துன்பத்தை நீக்கியருளுஞ் சருவகர்த்தரே, மரக

தக் கம்பியாற் செய் கடுக்கை புல் அகல - மரகதக் கம்பியாற் செய்த (காம்பையுடைய) கொன்றைப் பூமாலை பொருந்தும் திருமார்பினையுடையவரே, சுத்து அமர்அளி வாழ்சோலைக் கல்வளைக் கற்பக - ஒலிக்கின்ற மிகுதியாகிய வண்டுகள் தங்குஞ் சோலையையுடைய கல்வளைப்பதியில் வாழுங் கற்பகவிநாயகரே, என் கல் அகத்து-எனது கல்லையொத்த நெஞ்சத்தில், அம் அரவிந்தத் திருக்கால் எந்தக்கால் வைப்பது - அழகிய தாமரைமலர் போலுந் திருவடியை எக்காலம் வைப்பது (கூறியருள்வீர்).

(கு-ரை.) உவமைக்கும் உவமிக்கப்படும் பொருட்கு முள்ள ஒற்றுமைபற்றி மரகதக்கம்பியாற் செய்தது போன்றதைச் செய்கடுக்கையென்றார். (௪0)

வையத் திருக்கை யறுப்பா னெகினம் வளைமணிக்கு
வையத் திருக்கை கயிலையில் வெண்மங்கு னேர்கல்வளை
வைபத் திருக்கைப் பரியாக்கி பிள்ளைக்கு மானனையார்
வையத் திருக்கை யயர்ந்தாளென் றோது மதுகரமே.

(இ-ள்.) மதுகரமே - வண்டுகளே, வையத் திருக்கை அறுப்பான் - பூமியிலுள்ள குற்றத்தை நீக்குபவரும், வளைமணிக் குவையத்து எகினம் இருக்கை - சங்கிற்பிறந்த முத்துக்குவியலில் அன்னமிருத்தல், கயிலையில் வெள்மங்குல் நேர் - வெள்ளிமலையின்மேற் படியும் வெண்மையாகிய மேகத்தை நிகர்க்கப்பெறும், கல்வளை - கல்வளைப்பதியிலுள்ள, இருக்கை வையத்து பரிஆக்கி பிள்ளைக்கு - வேதத்தைத் தேரிற் கட்டப்படுங் குதிரையாக்கிய சிவபெருமா னுடைய குமாரருமாகிய விநாயகக்கடவுளுக்கு, மான் அனையார் வைய - மானை நிகர்த்த அயலார் ஏச, திரு - இலக்குமியை நிகர்த்த தலைவி, கை அயர்ந்தாள் என்று ஓதும் - கைசோர்ந்தாளென்று சொல்லும்.

(கு-ரை.) திருக்கையயர்ந்தாள் என்பதில் ககரம் விரித்தல். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் வண்டுவிடு தூது.

கரவடம் பத்தி யிலார்க்களிப் போயிருள் காய்ந்திடும்பாற்
கரவடம் பத்தி யொளிபாய் முலைச்சங் கரிபெறுமைங்
கரவடம் பத்திரக் காலுஞ்சு மான்மரு மாசந்த்ரசே
கரவடம் பத்திரட் கல்வளை யாயெனைக் காத்தருளே.

(இ-ள்.) பத்தியிலார்க்கு கரவடம் அளிப்போய் - (தம்மீது) பத்தியில்லாதவருக்குத் தீமையைக் கொடுப்பவரே, இருள் காய்ந்திடும் பாற்கர - (மல) இருளை வருத்தும் (ஞான) சூரியரே, பத்தி வடம் - வரிசையாகிய மணி வடத்தில், ஒளி பாய் - ஒளி பாயப்பெற்ற, முலைச் சங்கரி பெறும் ஐங்கர - முலையையுடைய உமாதேவியார் பெற்ற ஐங்கரரே, வடம் பத்திரக்கால் துஞ்சும் மால் மருகா - ஆலிலையிடத்துத் துயில்செய்யும் விட்டுணுவுக்கு மருகரே, சந்த்ர சேகர - பிறையையணிந்த சடையினையுடையவரே, அடம்பத் திரள் கல்வளையாய்-அடம்பங்கொடித் திரளையுடைய கல்வளைப்பதியை யுடையவரே, எனைக் காத்தருள் - என்னைக் காத்தருள்வீர்.

(கு-ரை.) கரவடம்-களவு; ஈண்டு தீமைப்பொருளை யுணர்த்தியது.

அருந்ததிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை
யருந்ததிக் கைக்கு மகளாய்ப் பிறந்திடு மன்னைவிட
மருந்ததிக் கைப்புனை கூறைப் பிஞகி யருள்கல்வளை
யருந்ததிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே.

(இ-ள்.) அருந்ததிக்கு ஐயம் இல் கற்பு ஈந்த மேனை அசல அரையரும் துதிக்கைக்கு - அருந்ததிக்கு ஐயமில்லாத கற்பைக் கொடுத்த மேனையும் மலையரசனும் போற்றும்படி, மகளாய்ப் பிறந்திடும் அன்னை - (அவர்கண்மாட்டு) மகளாகத் தோன்றிய உமாதேவியும், விடம் அருந்து திக்கை கூறை புனை பிஞகி - நஞ்சையுண்ட திக்கை ஆடையாகப் புனைந்த சிவபெருமானும், அருள் - பெற்ற, கல்வளை அரும் துதிக்கைக் குன்றமே - கல்வளைப்பதியிலுள்ள அருமையாகிய துதிக்கையை

யுடைய மலைபோலும் யானையாகிய விநாயகக்கடவுளே, அடியேன் உன் அடைக்கலம் - அடியே னுமக்கு அடைக்கலம். (௪௩)

அடைக்கலங் காவென்ற பேர்க்கினி யான்மட வன்னக்கண
மடைக்கலங் காருஞ் சினையென் றணைகல் வளைவரைவா
யடைக்கலங் காட்டுந் தனத்தீர் விரக மகலப்பொன்னி
லடைக்கலங் காக்கவென் றென்றோ குணதிசை யாவதுவே.

(இ-ள்.) அடைக்கலம் கா என்ற பேர்க்கு இனியான்-(யாம் நுமக்கு) அடைக்கலம் (எம்மைக்) காத்தருள்வீரென்று சொல்பவருக்கு இனியவராகிய விநாயகக்கடவுளது, மட அன்னக் கணம் அலங்கு ஆரம் சினை என்று அடைக்கு அணை கல்வளை வரைவாய்-மடமையாகிய அன்னக் கூட்டம் ஒளி செய்கின்ற முத்துக்களைத் (தம்) முட்டையென்று அடைகாத்தற்குச் சாருங் கல்வளைப்பதியின் மலையிடத்துள்ள, அடைக்கலங் காட்டுந் தனத்தீர-(திரட்சியால்) ஊர்க்குருவியின் வடிவைக் காட்டும் முலையினையுடையீர், விரகம் அகல - (எனது) காமநோய் நீங்க, பொன்னில் அடைக்கல் அங்காக்க என்று குணதிசை ஆவது என்றோ-இலக்குமியின் வீடாகிய தாமரை திறவுபடச் சூரியன் றோன்றுவது எப்பொழுதோ (கூறுவீர்).

(கு-ரை.) இது பெண்பாற் கைக்கிளையின்பாற்படும். (௪௪)

வனத்தா னையன்றொழு மம்மானை யம்புலி மானணிசெவ்
வனத்தானை யன்ன வயற்கல் வளைப்பெரு மானைமறை
வனத்தா னையனக் கணைமலை மான்மரு மானைபைம்பூ
வனத்தானை யன்புசெய் வார்முலைப் பாலை மறந்தவரே.

(இ-ள்) வனத்தான் - துழாய்மாலையை யுடையராகிய விட்டுணுவும், அயன் - பிரமதேவரும், தொழும் அம்மானை - வணங்கு மிறைவரும், அம்புலி மான் அணி செவ் வனத்தானை - பிறையையும் மானையுந் தரித்த செம்மையாகிய நிறத்தினையுடையவரும், அன்னவயல் கல்

வளைப் பெருமானை - அன்னங்களையுடைய வயலையுடைய கல்வளைப் பதியிலுள்ள பெருமையை யுடையவரும், மறை வனத்தான் நயனக் கனை மலைமான் மருமானை - வேதாரணியப் பதியையுடையராகிய சிவ பெருமானுக்கும் விழியாகிய பாணத்தைக்கொண்ட உமாதேவிக்கும் புத்திரரும், ஐம்பூ உன் அத்தானை - ஐந்துமலர்ப்பாணங்களை யுடையனாகிய மன்மதனுக்கு மைத்துனரும் ஆகிய விநாயகக்கடவுளை, அன்பு செய்வார் - அன்பு செய்பவர், (யோனிகளிற்சென்று பிறதத லின்மையின்) முலைப்பாலை மறந்தவரே - முலைப்பா லருந்துதலை மறந்தவரே (ஆவர்).

(கு-ரை.) முலைப்பால் ஆகுபெயர். (சரு)

தவராக மாகன கச்சிலை கோலிபொற் றாள்பெறமைத்
தவராக மாக விடந்தவன் சாபந் தவிர்த்தவன்மா
தவராக மாகநற் காமுரல் கல்வளைத் தந்திநன்மா
தவராக மாகான் கண்ணறு பூங்கொன்றைத் தாமத்தனே.

(இ-ள்.) தவராக மா கனகச் சிலை கோலி பொன் தாள் பெற - வில்லாகப் பெருமையாகிய பொன்மலையை வளைத்த சிவபெருமானுடைய பொன் போலும் திருவடியைக் (காணப்) பெற, மைத்த வராகம் ஆக இடந்தவன் சாபந் தவிர்த்தவன்-கருமையுற்ற பன்றிவடிவாகி (பூமியைக்) கிழித்தவராகிய விட்டுணுவுக்கு (உமாதேவியாரிட்ட) சாபத்தை நீக்கினவர், (யாவரெனில்), மா தவ ராகம் ஆக நல் கா முரல் கல்வளைத் தந்தி - வண்டுகள் மிகவு மிராகமாக நல்ல சோலையிற் பாடுங் கல்வளைப் பதியிலுள்ள யானையும், நல் மாதவர் ஆகம் ஆகரன்-நல்ல முனிவரது நெஞ்சமாகிய உறைவிடத்தை யுடையவரும், கள் நாறு கொன்றை பூ தாமத்தனே - தேன் மணக்கப்பெற்ற கொன்றைப் பூமாலையை யுடையவருமாகிய விநாயகக்கடவுளே. (சசு)

மத்தன் பராபரை சீராட்டுப் பிள்ளை மணிமந்தர
மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்தபது

மத்தன் பராகவெண் ணீறணி கல்வளை வானவனு
மத்தன்ப ரானவ ரன்றே கயிலையில் வாழ்பவரே.

(இ-ள்.) கயிலையில் வாழ்பவர் - கயிலாசமலையில் வாழ்பவர்கள், மத்தன் - மத்தம்பூவைச் சூடுபவராகிய சிவபெருமானுக்கும், பராபரை - உமாதேவிக்கும், சீராட்டுப்பிள்ளை - சிறப்புச்செய்தலையுடைய பிள்ளையும், மணி மந்தர மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்த பதுமத்தன் - அழகிய மந்தரமலையை மத்தாகக் கொண்டவராகிய விட்டுணுவால் வணங்கப்பட்டுச் சிவந்த செம்மையையுடைய திருவடியாகிய மாட்சிமைப்பட்ட தாமரைமலரை யுடையவரும், பராக வெண்ணீறு அணி கல்வளை வானவன் - தூளாகிய திருவெண்ணீற்றை யணியுங் கல்வளைப்பதியிலுள்ள வானவருமாகிய விநாயகக்கடவுளது, நாமத்து அன்பரானவ ரன்றே - திருநாமங்களை யுரைத்தலில் அன்பரானவர்களன்றே.

(து-ரை.) பராவல் ஈண்டு வணங்கல். (சஎ)

பவநம் புயர்தொண்டர்க் கில்லாமை யாக்கும் பரன்கனனீர்
பவனம் புயங்க முடியேந்து மண்விண் படிவன்கருப்
பவனம் புயலளக் குங்கல் வளைப்பதி மீதிலுறை
பவனம் புயன்றொழும் பாதாம் புயனெம் பரதெய்வமே.

(இ-ள்.) நம்பு உயர் தொண்டர்க்கு பவம் இல்லாமை ஆக்கும் பரன் - (தம்மை) நம்பிய உயர்ந்த அடியாருக்குப் பிறவி இன்மையாக்கும் முன்னவரும், கனல் நீர் பவனம் புயங்கம் முடி ஏந்து மண் விண் படிவன் - நெருப்பும் நீருங் காற்றும் ஆதிசேடன்சிரத்தாலேந்தின்ற நிலமும் ஆகாயமும் ஆகிய பஞ்ச பூத வடிவானவரும், கருப்பவனம் புயல் அளக்கும் கல்வளைப்பதிமீதில் உறைபவன் - கருப்பஞ்சோலை மேக மண்டலத்தை யளக்கப்பெறுங் கல்வளைப்பதியின்கண் எழுந்தருளியிருப்பவரும், அம்புயன் தொழும் பாத அம்புயன் ஏ-பிரம

தேவரால் வணங்கப்படுந் திருவடித்தாமரையை யுடையவருமாகிய விநா யகக்கடவுளே, எம் பர தெய்வம் - எமது மேலாகிய தெய்வம்.

(கு-ரை.) புயல் ஆகுபெயர். (சஅ)

பரமானந் தக்கன் மழைமாரி காத்திடும் பைங்கனகாம்
பரமானந் தக்கந் தரவிந்தி ராணி பதியயனும்
பரமானந் தக்கல் வளையத்த னுத்தம பத்தர்சித்தன்
பரமானந் தப்பிள்ளை யார்துணைச் சேவடிப் பங்கயமே.

(இ-ள்.) கல் மழை மாரி நந்த ஆன் காத்திடும் பைங் கனக அம் பர மால் - கல்மழையால் வருந் (தீங்கு) கெடப் பசுக்களைக் காத்த பசும் பொன்னுடையை யுடைய விஷ்ணுமூர்த்திக்கும், நந்தக் கந்தர இந்தி ராணி பதி - சங்குபோலுங் கழுத்தினையுடைய இந்திராணி கணவனா கிய இந்திரனுக்கும், அயன் - பிரமதேவருக்கும், உம்பர் - தேவருக் கும், அமான்-இறைவரும், அந்தக் கல்வளை அத்தன் - அழகையுடைய கல்வளைப்பதியி லிருக்கின்ற யாவர்க்குந் தந்தையும், உத்தம பத்தர் சித் தன் - உத்தம அடியாருடைய சித்தத்தில் இருப்பவருமாகிய, பரமா னந்தப்பிள்ளையார் துணைச் சேவடிப் பங்கயமே - பரமானந்தப்பிள்ளை யாருடைய இரண்டாகிய சேவடித் தாமரையே, பரம் - (எனக்குத்) தஞ்சம்.

(கு-ரை.) அம்மானில் மகரந்தொகுத்தது. (சகூ)

பங்கைய மாலை யளிக்குழல் வாய்முலை பண்மொழிகோ
பங்கைய மாலை யனையாட் குதவரன் பாலன்றடப்
பங்கைய மாலை யலர்கல் வளைக்கண் பரிந்தொருகூ
பங்கைய மாலையந் தொட்டியற் றுரெப் படியுய்வரே.

(இ-ள்.) அம் மாலை அளிக் குழல் - அழகிய மாலையை யணிந்த வண்டுகள் (பொருந்துங்) கூந்தலையுடைய, வாய் முலை பண் மொழி கோபம் கயம் ஆலை அனையாட்கு - வாயும் முலையும் பண்ணையுடைய

சொல்லும் (முறையே) இந்திரகோபத்தையும் யானையையும் கரும்பை யும் நிகர்த்தவராகிய உமாதேவியாருக்கு, பங்கை உதவு அரன் பாலன் - (தமது திருமேனியி லொரு) பாகத்தைக் கொடுத்தருளிய சிவபெரு மானுக்குப் புத்திரராகிய விநாயகக்கடவுளது, தடப் பங்கைய மாலை அலர் கல்வளைக்கண் - தடாகத்திற் றாமரைகள் வரிசையாக வலர்கின்ற கல்வளைப்பதியின்கண், பரிந்து ஒரு கூபம் கயம் தொட்டு - அன்புற்று ஒரு கிணற்றை (ஆவது) குளத்தை (ஆவது) தோண்டி, ஆலயம் இய ற்றூர் - கோயிலை இயற்றாதவர்கள், எப்படி உய்வர் - எவ்வாறு (பிறவி யினீங்கி) உய்வார்கள்?

(கு-ரை.) அம்மாலையில் மகரந்தொகுத்தது. (௫௦)

வருந்தும் பிறவி யலைவாரி நீந்த மதுவினைக்க
வருந்தும்பி வீழ்மலர்த் தாட்புணை தாகன்னல் வான்கதிர
வுருந்தும் பிரகாச மணித்தேர் தடுக்கும் வளக்கல்வளை
வருந்தும்பி மாமுகத் தையாமெய் யாகுண்ட வண்டியனே.

(இ-ள்.) கன்னல் வான் கதிரவர் உந்தும் பிரகாச மணித் தேர் தடுக்கும் வளம் கல்வளை வரும் மா தும்பி முகத்து ஐயா - கரும்புகள் ஆகாயத்திலே சூரியன் செலுத்துகின்ற பிரகாசமாகிய அழகையுடைய இரதத்தைத் தடுக்கும் வளத்தையுடைய கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற பெருமையாகிய யானை வதனத்தை யுடைய ஐயரே, மெய் யா - மெய்ம்மையானவரே, குண்ட வண்டியனே - குடம்போலும் வயிற்றினையுடையவரே, வருந்தும் பிறவி அலை வாரி நீந்த - வருந்து கின்ற பிறவியாகிய அலையையுடைய கடலை (யான்) கடத்தற்கு, மது வினைக் கவரும் தும்பி வீழ் மலர் தாள் புணை தா - தேனைக் கவருகின்ற வண்டுகள் விழுகின்ற தாமரைத் தாளாகிய தெப்பத்தைத் தந்தருள்வீர்.

வண்ட மருங்குலை யான்மரு கன்கல் வளைச்சிலம்பா
வண்ட மருங்குலை ஞாளியு மாறு வருமதர்வாய்
வண்ட மருங்குலை விற்கொண்ட வேட்டுவர் மாவலித்து
வண்ட மருங்கு விளவஞ்சி பாலல்லின் வாரலையே.

(இ-ள்.) வண்டு அமரும் குலையான் மருகன் கல்வளைச் சிலம்பா- வண்டுகள் பொருந்துகின்ற துழாய்மாலையையுடைய விஷ்ணுவுக்கு மருகராகிய விநாயகக்கடவுளது கல்வளைப்பதியி லுள்ள பொருப்பனே, வண் தமரும் குலை ஞாளியும் மாறு - (இரவுக் குறி குறித்தற்குரிய இல்லினைச்சார்ந்த வுள்ளிடத்தில் எமது) வளவிய சுற்றத்தவரும் குலைக்கின்ற நாய்களும் மாறுகும, (அன்றியும்) வரும் அதர் வாய் வண்டு அமரும் குலை வில் கொண்ட வேட்டுவர் மா (மாறு) - (நீ) வரும் வழியில் அம்பு பொருந்திய குதையினையுடைய வில்லைக் கொண்ட வேட்டுவர்களும் மிருகங்களும் மாறுகும், (ஆதலின்) வலி துவண்ட மருங்குல் இள வஞ்சிபால் அல்லின் வாரலை - கொடிபோலத் துவண்ட விடையினையுடைய இளமையாகிய தலைவியிடத்து இராவில் வாராதொழிவாய்.

(கு-ரை.) குல்லை வல்லி என்பவற்றின் லகரந் தொக்கன. இது தோழி இறைவன் வரவை மறுத்தல். (நூஉ)

வாரிக் கடுக்கை தனையண்டர் சொல்ல வரவெனைநீர்
வாரிக் கடுக்கையி னூற்பாவி யீர்கன் மனத்துவைத்தேன்
வாரிக் கடுக்கைமென் றுன்றுஞ்சு காமயி லாடக்கண்டு
வாரிக் கடுக்கைசெம் பொன்றூற்று கல்வளை வாசனையே.

(இ-ள்.) அண்டர் கடுக்கைதனை சொல்ல வாரி வர - பகைவராகிய அயலார் பழிமொழியைச் சொல்ல வாயிலில் வர, நீர் எனை வாரி கடுக்கையினுல் - நீவி ரென்னை மிகவுஞ் சினத்தலினுலே, பாவியீர் - பாவிகாள், ஆன் வார் இக்கு அடுக்கை மென்று துஞ்சு கா மயில் ஆடக் கண்டு - பசுக்களானவை நீண்ட கருப்பந் திரளை மேய்ந்து துயிலப் பெறுஞ் சோலையிலே மயில்களாடக்கண்டு, கடுக்கை செம் பொன் வாரித் தூற்று கல்வளை வாசனை - கொன்றைமரங்கள் (தம் மலர்களாகிய) செம்பொன்னை வாரித் தூற்றுகின்ற கல்வளைப் பதியில் வாசஞ் செய்பவராகிய விநாயகக்கடவுளை, கல் மனத்து வைத்தேன் - (இடையறாது எனது) கல்லை யொத்த மனத்தி லிருத்தினேன்.

(கு-ரை.) இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் தலைவி தன்வருத்த மிடையறு திருத்தற் காரணங் கூறல். (௩௩)

வாசவ னந்தர நாட்டோர் துதிக்கு மதக்கலுழி
வாச வனந்தற்கு ஞானோப தேசம் வழங்குமெய்யா
வாச வனந்த வளவளை சேர்கல் வளைப்பதியின்
வாச வனந்த ரவிபோ லுன் றாடலை வைத்தருளே.

(இ-ள்) வாசவன் அந்தர நாட்டோர் துதிக்கும் மதக்கலுழி வாச - இந்திரனும் விண்ணுடோராகிய தேவர்களுந் துதிக்கின்ற மதநீராகிய கான்யாற்று வாசனையை யுடையவரே, அனந்தற்கு ஞான உபதேசம் வழங்கு மெய்யா - விஷ்ணுவுக்கு ஞானோபதேசத்தை யருளிய மெய்யரே, வாச அனம் தவள வளை சேர் கல்வளைப்பதியின் வாச - சிறகையுடைய அன்னங்களும் வெண்மையாகிய சங்குகளுஞ் சேரப்பெற்ற கல்வளைப்பதியில் வாசஞ்செய்பவரே, அனந்த ரவி போல் உன் தாள் தலை வைத்தருள்—அனந்தஞ் சூரியரை நிகர்த்த உமது திருவடியை (என்) சிர மீது வைத்தருள்வீர். (௩௪)

அருக்கரைக் கன்ன றொடுங்கல் வளைய னறுகிதழி
யருக்கரைக் கன்னங்கை யைத்தந்தை யாயுடை யான்வினைநே
யருக்கரைக் கன்னலிற் றீர்ப்பான் வரைமின் னராமணிப்பை
யருக்கரைக் கன்ன நடைக்கென்ற னாவி யகன்றதுவே.

(இ-ள்.) கன்னல் அருக்கரை தொடும் கல்வளையன் - கரும்புகள் சூரியனைத் தொடுங் கல்வளைப்பதியில் வாழ்பவரும், அறுகு இதழி அருக்கரை கல் நங்கையை தந்தை ஆய் உடையான் - அறுகையுங் கொன்றைப்பூ மாலையையு மெருக்கம்பூ மாலையையுஞ் சூடுபவராகிய சிவபெருமானையும் மலைமகளாகிய உமாதேவியாரையும் (முறையே) பிதாவும் மாதாவு மாக வுடையவரும், நேயருக்கு வினை அரைக் கன்னலில் தீர்ப்பான் வரை மின் - அன்பர்களுக்குத் தீவினையை அரை நாழிகையிற்

தீர்ப்பவருமாகிய விநாயகக் கடவுளுடைய மலையிற் பெண்ணினது, அரா மணிப் பை அருக்கு அரைக்கு அன்ன நடைக்கு என்றன் ஆவி அகன்றது - சர்ப்பத்தினது இரத்தினத்தையுடைய படம்போன்ற அல்குலுக்கும் அன்னநடைபோன்ற நடைக்கும் (ஆக) எனதுயிர் கழிகின்றது.

(கு-ரை.) அரை, அன்னம்: ஆகுபெயர்கள். இது தலைவனுற்ற துரைத்தல். (௫௫)

அகம்பத்தர் நெஞ்சமுங் கல்வளைக் கோட்டமு மானவன்றீ
யகம்பத்த ரைச்சங் கரித்தோன் மருகன்றண் டாழிவெள்ளி
யகம்பத்த ரென்றளி யூதாத பூவிறைத் தன்புருகி
யகம்பத்தர் தாம்பெறும் பேறய னுறு மளப்பரிதே.

(இ-ள்) பத்தர் நெஞ்சமும் கல்வளைக் கோட்டமும் அகம் ஆனவன்-அடியவர்களுடைய மனத்தையுங் கல்வளைப்பதியையும் உறைவிடமாகக் கொண்டவர், தீய கம் பத்தரைச் சங்கரித்தோன் மருகன் - கொடிய தலை பத்தினை யுடையனாகிய இராவணனை யழித்த விஷ்ணுவுக்கு மருகர், தண்டு ஆழி வெள்ளிய கம்பு அத்தர் என்று - தண்டாயுதத்தையுஞ் சக்கரத்தையும் வெள்ளிய சங்கையும் ஏந்திய திருக்கரத்தினையுடையவர் என்று விநாயகக்கடவுளைத் துதித்து, அளி ஊதாத பூ இறைத்து அன்பு உருகிய கம்பத்தர் தாம் பெறும் பேறு - வண்டுகளூதாத புதிய மலர்களைத் தூவி அன்பினால் (உள்ளம்) உருகுகின்ற (மெய்) விதிர்ப்புடையவர்களடையும் பேறு, அயனாலும் அளப்பு அரிது-பிரமதேவராலு மளவிடுதலரிது. (௫௬)

அப்பா தகமல நீக்கிச் சிலம்பிசை யார்த்திடுங்கோ
லப்பா தகமலம் பூசித்து நேசிக்க வன்புதவா
யப்பா தகமலங் கார்வயற் கல்வளை யாதிபொன்று
தப்பா தகமலந் தாங்குஞ் சடைக்கரு ணாகரனே.

(இ-ள்.) அப்பா - அப்பரே, தக மலங்கு ஆர் வயல் கல்வளை ஆதி - மிக மலங்கு மீன்கள் பொருந்திய வயலையுடைய கல்வளைப் பதியில் வாழு மாதியே, பொன் தாது அப்பாத கமலம் தாங்கும் சடைக் கருணாகரனே - கங்கை நீரைத் தாங்குகின்ற சடையை யுடைய கிருபைக்குறைவிட மானவரே, அப் பாதக மலம் நீக்கி சிலம்பு இசை ஆர்த்திடும் கோலப் பாத கமலம் பூசித்து நேசிக்க அன்பு உதவாய் - அந்தப் பாதகமாகிய மலத்தை நீக்கிச் சிலம்பி னொலி சத்திக்கப் பெறும் அழகிய (உமது) திருவடித் தாமரையைப் பூசித்து நேசித்தற்கு (எனக்கு) அன்பினைத் தந்தருளவீர்.

(கு-ரை.) பொன்று தப்பாத கமலம் நீர்; பொன்றாது அப்பிய கமலம் தாமரை. (௩எ)

கருவாம் பாயயி னோக்கியர் தூறுகற் றுக்கற் றுப்ப
கருவாம் பாயப் படேலன்ன மேகல் வளைக்களிற் றைக்
கருவாம் பாய்ந்துகண் டோர்காட்டு தூபத் தின் கற்றைபளக்
கருவாம் பாயருண் டாலிக்கு மாலிக் கனமல்லவே.

(இ-ள்.) அளக்கர் உவர் அம்பு ஆயது உண்டு ஆலிக்கும் ஆலிக் கனம் அல்ல - (இவ் விண்ணிற் றோன்றுவது) சமுத்திரத்தின் உவர் நீரைக் குடித்துத் துளிக்கின்ற ஆலாங்கட்டியை யுடைய மேக மன்று, கரு வரம்பு ஆய்ந்து கண்டோர் கல்வளைக் களிற்றை காட்டு தூபத்தின் கற்றை - கருப்பத்தி னெல்லையை ஆராய்ந்து கண்ட வந்தணர்கள் கல்வளைப்பதியில் வாழும் யானையாகிய விநாயகக்கடவுளுக்குக் காட்டுகின்ற தூபத்தின் றிரளை, அன்னமே அம்பாயப்படேல் - அன்னம் போன்றவளே (நீ யதனைக் கார் காலத்து மேகமென்று கருதி) உபத்திர வப்படாதே, (படின்) கரு அரம் பாய் அயில் நோக்கியர் தூறு கற்றுக் கற்றுப் பகருவர் - கரிய அரம் பாயப் பெற்ற வேல் போலும் விழியினையுடைய பெண்கள் பழி மொழியைக் கற்றுக்கற்றுக் கூறுவார்கள்.

(கு-ரை.) ஐபுருபு குவ்வுருபின்றிரிபு. இஃது இருளை பருவமன் றென்றல். (௩அ)

கனஞ்சஞ் சரித்திடும் வண்டலை தண்டலைக் கல்வளையே
கனஞ்சஞ் சலமுறு பாசா டவிவெளி கண்டவனேங்
கனஞ்சஞ் சரிசொலும் வேற்க ணிடைக்குக் கருங்குழலுங்
கனஞ்சஞ் சரிகங்க ளேநீ ரிருக்கை கடனல்லவே.

(இ-ள்.) கனம் சஞ்சரித்திடும் வண்டு அலை தண்டலைக் கல்வளை ஏகன் - மேகங்கள் சஞ்சரிக்கின்ற வண்டுகளலைகின்ற சோலையை யுடைய கல்வளைப்பதியில் வாழும் ஏக நாதரும், நம் சஞ்சலம் உறு பாச அடவி வெளி கண்டவன் ஓங்கல்-நம்முடைய துன்பம் பொருந்திய பாசக் காட்டை வெளியாக்கினவருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிலுள்ள, நஞ்சம் சரி சொலும் வேல் கண் இடைக்கு கருங்குழலும் கனம் - நஞ்சை ஒப்புச்சொல்லுகின்ற வேற்கண்ணை யுடையாளது இடைக்குக் கரிய கூந்தலும் பாரமாகும், சஞ்சரிகங்களே நீர் இருக்கை கடன் அல்ல - வண்டுகாள் நீவிர் (அதனை யெண்ணாது இவளுடைய கூந்தலில்) இருத்தல் முறையன்று.

(த-ரை.) இங்ஙனம் வண்டுகளுக்குக் கூறி ஓச்சும்போது தலைவியினது மெய்யிற் றீண்டினனென்க. இது மெய்தொட்டுப் பயிறல்.

கடம்பிடிக் குங்கமஞ் சூன்மா லளந்திடுங் கல்வளையான்
கடம்பிடிக் குங்கா டத்தறு கட்சிறு கட்களிறு
கடம்பிடிக் குப்புய னீரூட்டு வெற்பநங் காமர்வஞ்சி
கடம்பிடிக் குங்கண்கள் காதள வோடிக் கதித்தனவே.

(இ-ள்.) கடம்பு இடிக்கும் கமம் சூல் மால் அளந்திடும் கல்வளையான்-கடப்பமரங்கள் இடிக்கின்ற நிறைவாகிய சூலினையுடைய மேகத்தை அளக்கின்ற கல்வளைப்பதியை யுடைய விநாயகக் கடவுளது, கடம் பிடிக்கும் கரடத் தறுகண் சிறுகண் களிறுகள் தம் பிடிக்கு புயல் நீர் ஊட்டு வெற்ப - கதுப்பைச் சார்ந்த மதச்சுவட்டினையும் தறுகண்மையையும் சிறுகண்களையுமுடைய (ஆண்) யானைகள் தம்முடைய பிடி

யானைகளுக்கு முகிலினுள்ள நீரை ஊட்டுகின்ற மலையிற் றலைவனே, நம் காமர் வஞ்சி கடு அம்பு இடிக்கும் கண்கள் காது அளவு ஓடிக் கதித்தன - நம்முடைய அழகிய பெண்ணுக்கு நஞ்சையும் அம்பையும் வென்ற கண்கள் காதுவரையும் நீண்டு வளர்ந்தன.

(து-ரை.) பருவங் கூறி வரைவொடு விலக்கல். (௬௰)

கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் கங்கணநா
கதிரைக் கடலொலி போன்மள்ள ரார்த்துக் களைந்தசெந்நெற்
கதிரைக் கடைசியர் போரேற்று கல்வளை யாய்ககனக்
கதிரைக் கடவயிற் றார்ப்பாயென் றால்வருங் கைவலமே.

(இ-ள்.) கதிரை கடவுள் குறமானை மேவ செய் நாக கங்கண - கதிரைமலையில் வீற்றிருக்கின்ற சுப்பிரமணியக் கடவுள் வள்ளியம்மையாரைச் சேரச் செய்த நாக கங்கணத்தை யுடையவரே, திரைக் கடல் ஒலிபோல் மள்ளர் ஆர்த்துக் களைந்த செம் நெல் கதிரை கடைசியர் போர். ஏற்று கல்வளையாய் - திரையினையுடைய சமுத்திர ஒலியைப் போல உழவர்கள் ஆரவாரித்து அரிந்த செம்மையாகிய நெற்கதிரை உழத்தியர்கள் போராக ஏற்றுகின்ற கல்வளைப்பதியில் எழுந்தருளியிருக்கின்றவரே, ககனக் கதிரைக் கட வயிற்று ஆர்ப்பாய் என்றால் கைவலம் வரும் - ஆகாயத்திலுள்ள சூரியனைக் குடம்போன்ற வயிற்றிலே தரித்தவரே யென்றால் முத்தியானது சித்திக்கும். (௬௧)

வரச்சந் திரனெனுஞ் செந்தழற் பந்தம் வழுத்துநற்ற
வரச்சந் திரணத்தின் மாற்றுங் கடாசல மங்குலுலா
வரச்சந் திரதில கம்வளர் கல்வளை மானுயிர்க
வரச்சந் திரவி னடந்தா னுணவென வந்ததுவே.

(இ-ள்.) வர சந்திரனெனும் செம் தழற் பந்தம் - மேலாகிய சந்திரனென்று சொல்லுகின்ற சிவந்த தழற்பந்தமானது, வழுத்தும் நல் தவர் அச்சம் திரணத்தின் மாற்றும் கட அசலம்-துதிக்கின்ற நல்ல

தவத்தினை யுடையவர்களின் அச்சத்தைத் துரும்பைப்போல நீக்கு கின்ற மதம்பொருந்திய யானையாகிய விநாயகக்கடவுளுடைய, மங்குல் உலாவர சந்திர திலகம் வளர் கல்வளை மான் உயிர கவர - முகில்கள் உலாவும்படி சந்தனமரங்கள் வளருகின்ற கல்வளைப்பதியி லிருக்கும் பெண்ணினது உயிரைக் கவருதற்கு, இரவில் சந்து நடந்தான் உணவு என வந்தது - இரவிலே (சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவையா ரிடத்துத்) தூது சென்ற சிவபெருமானுடைய உணவாகிய நஞ்சைப் போல வந்தது.

(கு-ரை) அசலம் ஆகுபெயர். இது நிலவு வெளிப்பட வருந்தல்.()

வந்தனை யன்பர் மனத்தூண் டடைபடு மாதங்கங்க
வந்தனை யன்றுகொன் றோன்முக நாபிகண் வாய்கரஞ்சி
வந்தனை யன்பணி கல்வளை யான்வரை மன்னவனீ
வந்தனை யன்றெனின் மானுயி ரம்புலி மானுண்ணுமே.

(இ-ள்.) வந்தனை அன்பர் மனம் தூண் தடைபடும் மாதங்கம் - வழிபாடு செய்கின்ற அன்பர்களுடைய மனமாகிய தூணிலே கட்டப் படுகின்ற யானையும், கவந்தனை அன்று கொன்றோன் - கவந்தனென் பவனை முன்னே கொன்றவராகிய, முகம் நாபி கண் வாய் கரம் சிவந் தன் அயன் பணி கல்வளையான் வரை மன்னவன் - முகமும் நாபியுங் கண்ணும் வாயுங் கையுஞ் சிவந்த விட்டுணுவும் பிரமதேவரும் பணி கின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருப்பவருமாகிய விநாயகக்கடவு ளுடைய மலைத் தலைவனே, நீ வந்தனை அன்றெனில் மான் உயிர் அம் புலி மான் உண்ணும் - நீ (இப்பொழுது) வந்தனை வாராவிட்டால் தலைவி யினது உயிரைச் சந்திரன் உண்டுவிடும்.

(கு ரை.) சிவந்தவன் சிவந்த னென நின்றது. இது வருத்தங் கூறல். (சுரு)

மானை வலக்கண் டவாவினைப் பஞ்சினை மாய்க்கும்பவ
மான வலக்கண்டை யாவுரி யான்வன சப்பதத்தின்

மான வலக்கண் டரித்தோன் புகழ்கல் வளையிற்பெரு
மான வலக்கண் டகர்க்கொளிப பாயென மாலறுமே.

(இ-ள்.) மான அலக்கண் தவா வினை பஞ்சினை மாய்க்கும் பவமான் - வலிய துன்பம் நீங்காத வினையாகிய பஞ்சை யழிக்கின்ற அக்கினிபோல்பவரே, வலக் கண்டை மா உரியான் வனசப் பதத்தில் மான வலக்கண் தரித்தோன் புகழ் கல்வளையில் பெருமான் - வலிமையுடைய கண்டாமணி கட்டப்பட்ட யானைத்தோலைத் தரித்த சிவபெருமானுடைய தாமரைபோன்ற திருப்பாதத்திலே பெருமைபொருந்திய வலக்கண்ணைச் சாத்தினவராகிய விட்டுணு புகழுகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற பெருமானே, அவலக் கண்டகர்க்கு ஒளிப்பாய் என மால் அறும் - தீங்கையுடைய கீழோர்களுக் கொளிப்பவரே யென்று சொல்ல மயக்கமானது நீங்கும். (சுச)

மாலைய னங்கங் கரியோன் பதம்பெரி தன்றுமன்றின்
மாலைய னங்கங்கை வார்சடி லேசன் மதலைகொன்றை
மாலைய னங்கங் கணவெங் கணபண வாளரவன்
மாலைய னங்கங் குலாங்கல் வளையிரு மாதவர்க்கே.

(இ-ள்.) மன்றில் மா லயன் அம் கங்கை வார் சடில ஈசன் மதலை- சிற்சபையிற் பெரிய நடனத்தை யுடையவரும் அழகிய கங்கையைத் தரித்த நீண்ட சடையினை யுடைய தலைவரு மாகிய சிவபெருமானுடைய திருக்குமாரரும், கொன்றை மாலையன் - கொன்றைமாலையணிந்தவரும், அம் கங்கண வெம் கண பண வாள் அரவன் - அழகிய கங்கணமாகிய வெவ்விய கூட்டமாகிய படத்தினையுடைய ஒளி (பொருந்திய) சர்ப்பத்தையுடைய விநாயகக்கடவுளது, மாலை அனம் கங்கு உலாம் கல்வளை இரு மாதவர்க்கு - சாயங்காலத்தில் அன்னங்கள் வரம்பிலே உலாவுகின்ற கல்வளையி லிருக்கின்ற பெரிய தவத்தினை யுடையவர்களுக்கு, மால் அயன் அங்கம் கரியோன் பதம் பெரிது அன்று - விட்டுணு பிரமதேவன் தேகங் கரியனாகிய இந்திரன் இவர்களுடைய பதவிகள் பெரியனவல்ல. (சுரு)

இரும்புண் டரவெண் டுகண்மணி மந்திர மெய்தன்பரை
யிரும்புண்ட நீரெனத் தற்சேர்க்கு நாதனை யிக்குநெற்ப
யிரும்புண்டரீகமுஞ் சூழ்கல்வளையனை யெண்ணிப்பன்னி[னே.
யிரும்புண் டருமயிற் றென்றிசைக் கோன்பின்னை யென்செய்வ

(இ-ள்.) இரும் புண்டர வெள் துகள் மணி மந்திரம் எய்து அன்பரை இரும்பு உண்ட நீர் என தன் சேர்க்கும் நாதனை - மகிமையாகிய திரிபுண்டரமாகப் பூசுகின்ற வெள்ளிய விபூதியையும் உருத்திராட்சமணியையும் பஞ்சாட்சரத்தையு முடைய அன்பர்களைக் (காய்ந்த) இரும்பு தன்னுள்ளடக்கிய நீரைப்போலத் தம்மோடு (இரண்டறச்) சேர்க்கின்ற தலைவரும், இக்கு நெல் பயிரும் புண்டரீகமும் சூழ் கல்வளையனை - கரும்புகளும் நெற்பயிரும் தாமரைகளுஞ் சூழ்ந்திருக்கின்ற கல்வளைப்பதியை யுடையவருமாகிய விநாயகக்கடவுளை, எண்ணி பன்னி இரும் - நினைத்துத் துதித்து இருங்கள், புண் தரும் அயில் தென் திசைக் கோன் பின்னை என் செய்வன் - புண்ணை யுண்டாக்குகின்ற வேற்படையினையுடைய தென்றிசைக் கரசனாகிய யமன் பின் யாது செய்வான். (௬௬)

வன்னி களங்க னரிமா றுதிக்கு மலைமகள்கை
வன்னி களங்கனி யென்றெண்ணு கண்டன் மகிழ்ந்துபெற்ற
வன்னி களங்கப டற்றோர் பிறவி வலைப்பிணியாம்
வன்னி களங்களை யுங்கல் வளைக்கும்ப மாதங்கமே.

(இ-ள்.) வன்னி களங்கன் அரி மால் துதிக்கும் மலைமகள் கை வன்னி களங்கனி என்று எண்ணு கண்டன் மகிழ்ந்து பெற்ற வன்னி - அக்கினிதேவனுஞ் சந்திரனுஞ் சூரியனும் விட்டுணுவும் துதிக்கின்ற மலைமகளாகிய உமாதேவியாருடைய திருக் கரத்திலேயிருக்கின்ற கிளியானது களம்பழமென் றெண்ணுகின்ற (கரிய) கண்டத்தினை யுடைய சிவபெருமான் மகிழ்ந்து பெற்றருளிய பிரம

சாரியும், சல்வளைக் கும்ப மாதங்கம் - கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற மத்தகத்தையுடைய யானையுமாகிய விநாயகக்கடவுள், களம் கபடு அற்ருேர் பிறவி வலை பிணியாம் வல் நிகளம் களையும் - கள்ளங் கப டில்லாதவர்களுடைய பிறவிவலைப் பிணியாகிய வலிய விலங்கை நீக்கியருளுவர்.

(கு-ரை.) கள்ளம் களம் என நின்றது. (கூஎ)

தங்க மலையதி ளுல்வேதப் போலி தனைவரைமா
தங்க மலையச மேழ்காதம் வாசந் தருங்கல்வளை
தங்க மலையம் பிகைகும ராவென்று சாற்றிற்சந்த
தங்க மலையரும் பாக்கொம் பிரண்டுந் தருவிப்பனே.

(இ-ள்.) தங்க மலையதில் நால் வேதப் போலிதனை வரை மாதங்கம் - மகாமேரு மலையிலே நால்வேதப் போலியாகிய பாரதத்தை யெழுதிய யானையே, மலையசம் ஏழ் காதம் வாசம் தரும் கல்வளை தங்கு அமலை அம்பிகை குமரா என்று சநததம் சாற்றில் - சந்தனம் ஏழு காத எல்லை வரையும் மணக்கின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற நின் மலையாகிய உமாதேவியாருடைய திருக்குமாரரே என் றெப்போழ்துந் துதித்தால், கமலை அரும் பாக்கொம்பு இரண்டுந் தருவிப்பன் - இலக்குமி சரஸ்வதியாகிய இருவரையுங்கொண்டு (செல்வங் கல்வியாகிய) இருபொருளையுந் தருவிப்பார்.

(கு-ரை.) வேதத்தை நிகர்த்த பாரதத்தை வேதப்போலி யென்ருர். அரும் பாக் கொம்பு-அரிய பாக்களையுடைய கலைக்குத் தெய்வமாகிய பூங்கொம்பை நிகர்த்தவள். (கூஅ)

தருமந்தக் காரிடத் தாக்கிடு மாமுகன் சந்தனப்பூந்
தருமந்தக் காலசை கல்வளை வாசன்றன் ளுட்டினின்மா
தருமந்தக் காலமுந் தப்பாமற் சாரதி தாளைத்துளி
தருமந்தக் கார்முந்த முன்ருேர் கடவுதல் சால்புடைத்தே.

(இ-ள்.) தக்கார் இடத்து தருமம் ஆக்கிடும் மாமுகன் - தகுந்தவர்களிடத்தே தருமத்தை யுண்டாக்குகின்ற யானைவதனரும், மந்தக்கால் பூ சந்தனத்தரு அசை கல்வளை வாசன்றன் நாட்டினில் - மந்தமாருதமானது பூக்களையுடைய சந்தனமரத்தை யசைக்கின்ற கல்வளைப்பதியில் வாசருமாகிய விநாயகக்கடவுளுடைய நாட்டிலே, மாதரும் அந்தக் காலமும் தப்பாமல் சாரதி தாரை துளி தரும் அந்த கார் முந்த முன் தேர் கடவுதல் சால்பு உடைத்து - தலைவியும் (யான் கூறிய) அந்தக் காலமுந் தப்பாமல் தேர்ப்பாகனே மழைநீரைத் துளிக்கின்ற அந்த மேகம் முந்துதற்கு முன்னே தேரைச் செலுத்துதல் தகைமையுடைத்து.

(கு-ரை.) கார் முந்தினுற் றலைவி இறந்துபடுவா ளென்பது தோன்ற மாதருந் தப்பாமல் என்றானென்பது. இது பாகனொடு சொல்லல். (சுகூ)

சாலிக்கு வாலிக்கு வெங்கணை யேவித் தயங்கியபாஞ்
சாலிக்கு வாலிய தூசருள் கோலமுன் றாங்குபொறை
சாலிக்கு வாலிப மார்க்கண் டர்க் கீந்தவன் றந்தமைந்தன்
சாலிக்கு வாலிக்கு வான்றாவுங் கல்வளைத் தானத்தனே.

(இ ள்.) சாலிக்கு வாலிக்கு வெம் கணை ஏவி தயங்கிய பாஞ்சாலிக்கு வாலிய தூசு அருள் கோலம் முன் தாங்கு பொறை சால் இக்கு - மராமரத்துக்கும் வாலியென்பவனுக்கும் வெம்மையாகிய அத்திரத்தைச் செலுத்தி (அழகால்) விளங்குகின்ற திரௌபதைக்குச் சுத்தமாகிய வஸ்திரத்தைக் கொடுத்த (விட்டுணுவாகிய) பன்றி முன்னே தாங்கிய பாரம் நிறைந்த இப் பூமியிலே, மார்க்கண்டர்க்கு வாலிபம் ஈந்தவன் தந்த மைந்தன் - மார்க்கண்டேய முனிவருக்கு (எந்நாளும்) வாலிபப் பருவத்தைக் கொடுத்தருளிய சிவபெருமான் பெற்ற திருக்குமாரரே, சாலிக் குவால் இக்கு வான் தாவும் கல்வளை தானத்தன் - நெற்பயிர்க் கூட்டமுங் கரும்புகளும் ஆகாயத்தை யளாவுகின்ற கல்வளைப்பதியை யுடையவர். (எ0)

தானவ ரங்கம்பங் கஞ்செய்யுஞ் சாரங்கன் ரூழுமுத்தித்
தானு வரங்கது வாவேற் குமரன் றமையமழைத்
தானவ ரங்கம் பலத்தான் றருகளி றேகல்வளைத்
தான வரங்க ளுதவாயென் சித்தத் தறியினின்றே.

(இ-ள்.) தானவர் அங்கம் பங்கம் செய்யும் சாரங்கன் தாழும் முத்தித் தான-அசுரர்களுடைய அவயவங்களை ஊறுசெய்த விட்டுணு பணிகின்ற முத்தித்தானத்தை யுடையவரே, அரம் கதுவா வேல் குமரன் தமைய - அரங் கதுவப்பெறாத வேற்படையினை யுடைய முருகக்கடவுளுக்கு அண்ணரே, மழை தான - மழைபோன்ற மத சலத்தினை யுடையவரே, அரங்கு அம்பலத்தான் தரு களிறே - நடமாடு மிடமாகிய சிற்சபையை யுடைய சிவபெருமான் பெற்றருளிய யானையே, கல்வளைத் தான - கல்வளைப்பதியை யுடையவரே, என் சித்தந் தறியில் நின்று வரங்கள் உதவாய் - என்னுடைய மனமாகிய தூணிலே நின்று வரங்களைத் தந்தருளும்.

(கு-ரை.) முத்தித்தானம் முத்திக்கொடை. சார்ங்கன் சாரங்கனென நின்றது. (எக)

சித்தம் பரமுத் தலைவேலன் பாம்பரை சிக்கெனவி
சித்தம் பரமுத் தரிகங்கொண் டோன்மைந்தன் செய்யிற்பரி
சித்தம் பரமுத்த நாகொன்று கல்வளைத் தேவையுன்னுஞ்
சித்தம் பரமுத்த ராவாருக் காகுஞ் செயத்தம்பமே.

(இ-ள்.) சித்தம்பர முத்தலை வேலன்-சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கின்ற முத்தலைச் சூலாயுதத்தை யுடையவரும், பாம்பு அரை சிக்கென விசித்து - சர்ப்பத்தைத் திருவரையிலே (கச்சாக) இறுக்கிக் கட்டி, அம்பரம் உத்தரிகம் கொண்டோன் மைந்தன் - திக்கை யாடையாகக் கொண்டருளியவருமாகிய சிவபெருமானுடைய திருக்குமாரராகிய, அம்பர முத்த நாகு செய்யில் பரிசித்து ஒன்று கல்வளை தேவை உன்னும் - கடலிடத்துள்ள முத்துக்களையுடைய சங்குகள் வயலிடத்

துப் பயின்று பொருந்துகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற விக்கினேசுவரக் கடவுளை நினைக்கும், சித்தம் பர முத்தர் ஆவாருக்கு செயத்தம்பம் ஆகும் - மனத்தினையுடைய மேலாகிய முத்தராவார்க்கே (வினைப்பகையை வென்று நிறுத்தும்) வெற்றித்தம்ப முண்டாகும்.

(கு-ரை.) சிதம்பரம் சித்தம்பரமென நின்றது. (எஉ)

தம்பஞ் சுரதஞ்செய் யாதீன்ற சேய்தொழுந் தாளினன்கீ
தம்பஞ் சுரமிழற் றுஞ்சோலைக் கல்வளைச சாரலிற்பா
தம்பஞ் சுரத்துப் படச்சேக்கும் பொற்கொடி சர்ப்பத்தினி
தம்பஞ் சுராருண்டி போன்மொழி தேன்குழ லுமெங்குமே.

(இ-ள்.) தம்பம் சுரதம் செய்யாது ஈன்ற சேய் தொழும் தாளினன் - தூணனது புணர்ச்சி செய்யாது பெற்ற விட்டுணுமூர்த்தி தொழுகின்ற திருப்பாதத்தையுடைய விநாயகக் கடவுளது, கீதம் பஞ்சுரம் மிழற்றும் சோலை கல்வளை சாரலில் - வண்டுகள் பண்ணைப் பாடுகின்ற சோலையையுடைய கல்வளைப்பதியின் மலைச்சாரலில், பஞ்சு உரத்து பட சேக்கும் பாதம் பொற்கொடி - பஞ்சானது உரத்துப்படச் சிவக்கின்ற பாதத்தினையுடைய அழகிய கொடிபோன்ற பெண்ணினுடைய, சர்ப்பத்தின் நிதம்பம் சுரர் உண்டிபோல் மொழி தேன் குழல் தான் எங்கும் - சர்ப்ப (படம்) போன்ற நிதம்பமும் தேவருணவாகிய அமிர்தத்தை யொத்த சொல்லும் மலர்த்தேனையுடைய கூந்தலுமே எங்குந் (தோன்றுகின்றன).

(கு-ரை.) இது தலைமகன் தலைமகள் துருவ வெளிப்பாடு கண்டு சொல்லியது. (எங)

கும்ப னகத்திய னூலளந் தோகொற்ற வாகல்வளைக்
கும்ப னகத்திற் கனகா சுரற்செற்ற கோளரியே [ய்க்
கும்ப னகத்தின் சிறகரிந் தோன்றொழுங் கோன்வெற்பின்வா
கும்ப னகத்தின் புவிதாங்கி யோகுறைந் தாய்புயமே.

(இ-ள்.) கல்வளைக் கும்பன் நகத்தின் கனகாசுரன் செற்ற கோளரி எகும் பல் நகத்தின் சிறகு அரிந்தோன் தொழும் கோன் வெற்பின் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற மத்தகத்தை யுடையவரும் நகத்தினால் இரணியனைக் கொன்ற நரசிங்கமாகிய விட்டுணு (பறந்து) சென்ற பலமலைகளின் சிறகை யரிந்த இந்திரன் இவர்கள் தொழுகின்ற தலைவருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிலே, கொற்றவா - தலைவனே, கும்பன் அகத்தியன் நூல் அளந்தோ - கும்போற்பவராகிய அகத்தியருடைய தமிழ்நூலை யளந்தோ, (அல்லது) பனகத்தின் வாய்க்கும் புவி தாங்கியோ புயம் குறைந்தாய் - சர்ப்பத்தினாலே தாங்கப்படுகின்ற பூமியைத்தாங்கியோ புயம் வாடினாய்.

(கு-ரை.) பன்னகம் பனகமென நின்றது. இது பாங்கன் தலைவனை உற்றது வினாதல். (எச)

புயங்கந் தரித்தவன் கட்கலன் பூண்டு சிலம்பிசுற்றப்
புயங்கந்த மைந்து மடக்கிச் சடம்புற்று மூடவெம்பேய்
புயங்கந் தாத்தக்க கானுறை மாதவப் போதர்க்கன்றம்
புயங்கந்த நாறிடுங் கல்வளை யானடிப் போதரிதே.

(இ-ள்.) புயங்கம் தரித்தவன் கட்கலன் பூண்டு - சர்ப்பத்தைத் தரித்த சிவபெருமானுடைய கண்ணீரிற் றோன்றிய உருத்திராக்க மணிவடத்தைத் தரித்து, புயம் சிலம்பி சுற்ற கந்தம் ஐந்தும் அடக்கி சடம் புற்று மூட வெம்பேய் புயங்கம் தாத்தக்க கான் உறை மாதவ போதர்க்கு - புயத்திலே சிலம்பிப்பூச்சி சுற்றப் பஞ்சேந்திரியங்களையும் அடக்கித் தேகத்தைப் புற்று மூட வெவ்விய பேய்கள் கூத்தாடத் தக்க காட்டிலே யிருக்கின்ற பெரிய தவத்தினையுடைய முனிவர்களுக்கு, அம்புயம் கந்தம் நாறிடும் கல்வளையான் அடிப்போது அரிது அன்று - தாமரை மணக்கின்ற கல்வளைப் பதியில் வீற்றிருக்கின்ற விநாயகக் கடவுளுடைய திருவடியாகிய மலர் அரிதன்று. (எரு)

அரியா தவனிந் தளகேசன் வானயி ராவதத்தி
னரியா தவனிறைஞ் சுந்தாட் பதுமவண் டார்பிறப்பை
யரியா தவநி மலக்கல் வளையுறை யத்தபொய்யர்க்
கரியா தவநிலை யார்க்கெளி யாவெ னகப்பொருளே.

(இ-ள்.) அரி ஆதவன் இந்து அளகேசன் வான் அயிராவதத்தின் அரி யாதவன் இறைஞ்சும் தாள் பதும - அக்கினிதேவன் சூரியன் சந்திரன் குபேரன் வானுலகத்திலுள்ள ஐராவதத்தினையுடைய இந்திரன் விட்டுணு ஆகிய இவர்கள் வணங்குகின்ற பாததாமரையையுடையவரே, அண்டார் பிறப்பை யரியாதவ - சேராதவர்களுடைய பிறப்பை யரியாதவரே, கல்வளை உறை நிமல அத்த-கல்வளைப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற நின்மலராகிய பிதாவே, பொய்யர்க்கு அரியா - பொய்யர்களுக்குக் (காண்டற்) கரியவரே, தவ நிலையார்க்கு எளியாய்-தவநிலையினை யுடையவர்களுக்கு எளியவரே, என் அகப்பொருளே - என்னுடைய மனத்திலே யிருக்கின்ற பொருளானவரே (என்னைக் காத்தருளும்). (எகூ)

கப்பணத் தந்தமில் வெஞ்சூரட் டோனுடன் கார்விடநா
கப்பணத் தந்த வரைக்குற மாதின் கருத்துறவா
கப்பணத் தந்தக் கரியாய்வந் தோர்க்கிடங் கஞ்சத்திரா
கப்பணந் தந்தவற் செய்தொறு மாமுரல் கல்வளையே.

(இ-ள்.) கப்பணத்து அந்தம் இல் வெம் சூர் அட்டோன் உடன்-வேற்படையினாலே முடிவில்லாத வெய்ய சூரபன்மனை வதைத்த சுப்பிரமணியக்கடவுளோடு, கார் விட நாகப் பணத்து அரை அந்த குறமாதின் கருத்து உறவாகப் பண தந்தக் கரியாய் வந்தோர்க்கு இடம் - கரிய நஞ்சையுடைய அரவின் படம்போன்ற நிதம்பத்தையுடைய அந்த வள்ளியம்மையாருடைய கருத்தை உறவாகப்பண்ணுதற்குக் கொம்புபொருந்திய யானையாக வந்தருளிய விநாயகக்கடவுளுக்கு இரு

ப்பிடம், நத்தம் தவழ்செய் தொறும் கஞ்சத்து மா இராகப் பண் முரல் கல்வளையே - சங்குகள் தவழுகின்ற வயல்கடோறு முள்ள தாமரையிலிருக்கின்ற வண்டுகளிராகமாகிய பண்களைப் பாடுகின்ற கல்வளைப் பதியே.

(கு-ரை.) பண்ண பண என நின்றது. (எஎ)

கல்லார முரற்பெண் ணுக்குபின் ணுக்கணைக் கண்ணனெண்ணுங்
கல்லாரஞ் செங்கழு நீர்வாவி மேவிய கல்வளையான்
கல்லா ருவியங் குன்றத்தி னேற்றுன் கணவர்பொன்னே
கல்லாரம் பூமுருக் கென்று ரறிந்திலன் கான்மயிலே.

(இ-ள்.) கல் ஆரம் முரல் பெண் ஆக்கு பிள் நாக்கு அணை கண்ணன் எண்ணும் - கல்லை முத்துப்போன்ற பற்களினை யுடைய பெண்ணுக்கிய பிளந்த நாவையுடைய சர்ப்ப சயனத்தை யுடைய விட்டுணு எண்ணுகின்ற, கல்லாரம் செங்கழுநீர் வாவி மேவிய கல்வளையான் - நீர்க்குளிரியுஞ் செங்கழுநீரு முள்ள வாவிபொருந்திய கல்வளைப்பதியை யுடைய விநாயகக் கடவுளது, கல் ஆர் அருவி அம் குன்றத்தில் - கல்லென்னுமொலிபொருந்திய அருவியினையுடைய அழகியமலையிலே, நேற்று - நெருநலில், உன் கணவர் - உன்னுடைய கணவர், பொன்னே கல்லார் அம் முருக்கு பூ என்றார் - பொன்போல்வாளே கல்லாதவர்கள் அழகிய முருக்கம்பூவை ஒப்பார் என்று சொன்னார், கான் மயிலே அறிந்திலன் - கானகத்துள்ள மயில்போன்றவளே (அவர் குறிப்பை யான்) அறிந்திலேன்.

(கு-ரை.) இஃது ஓதற்பிரிவு தலைமகன் குறிப்பாலறிந்த தோழி தலைமகட்குணர்த்தல். (எஅ)

கானகத் தானத்தி ருழிலங் கேசனைக் காய்ந்துவெண்மை
கானகத் தானத்தில் வீழ்த்தான் சேய்வளை கான்றமுத்தங்

கானகத் தானத் திருள்சிக்கும் கல்வளைக் கட்டுபின்னற்
கானகத் தானத்தி யென்றேத்தி னென்பவக் கட்டறுமே.

(இ-ள்.) கால் நகத்தால் அத்தி சூழ் இலங்கா ஈசனை காய்ந்து வெண்மை கால் நகத்தானத்தில் வீழ்த்து அரன் சேய் - திருவடியி லுள்ள நகத்தினாலே சமுத்திரஞ் சூழ்ந்த இலங்கைக் கரசனாகிய இராவணனைக் காய்ந்து வெண்மை யொளியைக் காலுகின்ற கைலாசமலையாகிய உறைவிடத்தின் கீழ் விழுத்திய சிவபெருமானுடைய திருக்குமாரராகிய விநாயகக்கடவுளை, வளை கான்ற முத்தம் கால் நக தானத்து இருள் சிக்கும் கல்வளை - சங்கீன்ற முத்துக்கள் வாய்க்காலிலே விளங்கி அவ்விடத்துள்ள இருளை யோட்டுகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற, கட்டு பின்னல் கானகத்தான் அத்தி என்று ஏத்தின் என் பவக்கட்டு அறும்-கட்டுகின்ற சடைக்காட்டை யுடையவர் யானை வதனத்தினை யுடையவரென்று துதிக்கில் என்னுடைய பாவமாகிய கட்டு அறும்.

(கு-ரை.) நக நக்கு என்பதன் றிரிபு. (எக)

கட்கஞ்ச மள்ளர் களைகளை கல்வளைக் கத்தன்றறு
கட்கஞ் சனைவதைத் தோன்மரு கன்வரைக் காவன்மின்னே
கட்கஞ் சனப்புயல் பொங்கால கால கடுவடுவேற்
கட்கஞ்ச மானம் வரைப்பா யிருதொழில் காட்டரிதே.

(இ-ள்.) கள் கஞ்சம் மள்ளர் களை களை கல்வளைக் கத்தன்-தேனை யுடைய தாமரையை உழவர்கள் களையாகக் கட்டல் செய்கின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற தலைவருக்கு, தறுகண் கஞ்சனை வதைத்தோன் மருகன் வரை காவல் மின்னே - தறுகண்மையுடைய கஞ்சனைக்கொன்ற விட்டுணுவுக்கு மருகருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிற் (றினைக்) காவலையுடைய பெண்ணே, கட்கு அஞ்சனப் புயல் பொங்கு ஆலகால கடு வடு வேல் கட்கம் சமானம் வரைப்பாய் இரு

தொழில் காட்டரிது-(நினது) கண்ணுக்குக் கருமையாகிய மேகமும் பொங்கிய ஆலகாலமும் மாம்பிஞ்சும் வேற்படையும் வாளும் சமான மாகும் (ஆயினும் அவை துன்பவின்பங்களுக்கு) எல்லையாகி இரண்டு தொழில்களைக் காட்டுதலில்லை.

(கு-ரை.) ஆலகாலகடு ஒருபொருட்பல்பெயர். இது புகழ்தல். ()

அரக்கர விந்தறக் கொன்றோன் பெறுவமு தேவெங்கொலை
யரக்கர விந்தம் பயில்வன நீத்தண்மி னோநின்று கே
ளரக்கர விந்தன் குலத்தோர் மணிகையி னாற்கல்வளை
யரக்கர விந்தம் புனைவோர்க் கொலிக்கு மரவங்களே.

(இ-ள்.) அரக்கர் அவிந்து அறக் கொன்றோன் பெறு அமுதே - இராக்கதர்கள் அழிந்து முடியக்கொன்ற விட்டுணு பெறாத அமுதம் போல்பவளே, வெம் கொலையர் அக்கர விந்தம் பயில் வனம் நீத்து அண் மினோம் - வெவ்விய கொலைத்தொழிலினையுடைய வேடர்களும் அந்த யானைகளும் பயிலுகின்ற காட்டை நீங்கி (ஊரைக்) கிட்டினோம், அரக்கு அரவிந்தன் குலத்தோர் - செந்தாமரை யாசனராகிய பிரம தேவருடைய குலத்தவர்களாகிய பிராமணர்கள், கல்வளையர் அக்கு அரவு இந்து அம் புனைவோர்க்கு மணி கையினால் ஒலிக்கும் அரவங்கள் நின்று கேள் - கல்வளைப்பதியை யுடையவரும் உருத்திராக்கத்தையுஞ் சர்ப்பத்தையுஞ் சந்திரனையுங் கங்கைநீரையுந் தரிப்பவருமாகிய விநா யகக்கடவுளுக்கு மணியைக் கையினாலே அடிக்கின்ற ஒலிகளை நின்று கேட்பாய்.

(கு ரை.) கரவிந்தம் கைம்மலை யானை. இது தலைவன் தன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தல். (அக)

வங்கங் கணவர் நிதிதேடப் போனதென் வாய்ந்தபில
வங்கங்க ணச்சி யுடைக்குங் குடக்கனி வார்ந்தநற
வங்கங் கணவி மடைதத்து தென்கல் வளையிலா
லங்கங் கணன்கிரி யன்னாள்பொன் னங்க மருவுறவே.

(இ-ள்.) வாய்ந்த பிலவங்கங்கள் நச்சி உடைக்கும் குடக்கனி வார்ந்த நறவம் கந்து அணவி மடை தத்து தென் கல்வளையில் - (ஆண்டுப்) பொருந்திய குரங்குகள் விரும்பி யுடைக்கின்ற குடம்போலும் (பலாக்) கனியினின்று மொழுகுகின்ற தேனானது வரம்பருகிற்போய் மடையிற் றத்துகின்ற அழகிய கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற, அரவம் கங்கணன் கிரி அன்னாள் அங்கம் பொன் மருவுற - சர்ப்பகங்கணத்தையுடைய விநாயகக்கடவுளது மலையை நிகர்த்த தலைவியினுடைய மேனியில் பொன்பொருந்த, வங்கம் கணவர் நிதி தேடப்போனது என் - மரக்கலத்திலே தலைவர் பொன்னைத் தேடப்போனது என்னை!

(து-றை.) இஃது ஆற்றாமை கூறல். (௮௨)

மருக்காவி னாறிடக் குங்குலு வாலயம் வாசங்கொள்ள
மருக்காவி பூம்பண்ணை நாறிடுங் கல்வளை வார்கொன்றைத்தா
மருக்காவி யன்னவனைப்பா டிலர்கவி வாணரென்க
மருக்காவின் பாலுகுத் தாலெனப் பாடுவர் மாந்தரையே.

(இ-ள்) மரு காவில் நாறிட - மருக்கொழுந்து சோலையிலே வாசஞ்செய்யவும், குங்குலு ஆலயம வாசங் கொள்ள - குங்கிலியம் ஆலயத்திலே மணக்கவும், மரு காவி பூம் பண்ணை நாறிடும் கல்வளை வார் கொன்றைத் தாமருக்கு ஆவி அன்னவனைப் பாடிலர் - வாசனையையுடைய காவி மலர்கள் அழகிய வயலிலே மணக்கின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற நெடிய கொன்றைமாலையை யணிந்த சிவபெருமானுக்கு ஆவிபோன்ற விநாயகக்கடவுளைப் பாடுகின்றிலர், கமருக்கு ஆவின் பால் உகுத்தால் என மாந்தரையே பாடுவர் கவிவாணர் - (பூமியிலுள்ள) வெடிப்பிலே பசும்பாலை வார்த்தாற்போல மனிதரையே பாடுகின்றார்கள் டாவாணர்கள், என் - (இவர் செயல்) என்னை!

திரைக்குந் திகிக்குங் கனிவாயங் காந்து தயங்கியமந்
தரைக்குந்த வாளி தனுவாங்கு மால்பணி தற்பரன்மைந்

தரைக்குந் தளக்கஞ்ச மான்மகிழ் கல்வளை தங்கிபநா
தரைக்குந்தன் முன்னவ னைப்பாட லாற்கொள்வர் சங்கத்தரே.

(இ-ள்) தரைக்கும் தறிக்கும் கனிவாய் அங்காந்து தயங்கிய மந்தரைக்கு வாளி உந்த தனு வாங்கும் மால் பணி தற்பரன் மைந்தரை-பூமிக்குந் தயிருக்குங் கனிபோன்ற வாயைத்திறந்து விளங்கிய கூனியென்பவளுக்குப் பாணத்தைச் செலுத்துதற்கு வில்லைவளைத்த விட்டுணு வணங்குகின்ற ஆன்மநாயகராகிய சிவபெருமானுடைய திருக்குமாரரும், குந்தளம் கஞ்சமான் மகிழ் கல்வளை தங்கிய நாதரை-கூந்தலினையுடைய தாமரைப்பூவி லிருக்கின்ற இலக்குமி மகிழுங் கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற தலைவரும், குந்தன் முன்னவனை சங்கத்தர் பாடலால் கொள்வர் - வேற்படையையுடைய முருகக்கடவுளுக்கு முன்னவருமாகிய விநாயகக்கடவுளைப் புலவர்கள் பாடலாலே பெற்றுக்கொள்வார்கள்.

(கு-ரை) விநாயகக்கடவுளைப் பெற்றுக்கொள்ளுதல் அவரதருளைப் பெறுதல். (அச)

சங்கர ளுட்டத் திரண்டஞ்சு நாற்பொறிச் சர்ப்பம்வன
சங்கர ளுட்டந் தவிர்த்தோன் றுயில்வடந் தண்டாளஞ்
சங்கர ளுட்டயில் சேர்வஞ்சி கல்வளைத் தந்தியங்கு
சங்கர ளுட்டன்பி னன்பகண் டாயென் றனதுயிரே.

(இ-ள்.) அன்பின் அன்ப - அன்பினையுடைய பாங்கனே, கல்வளை தந்தி அங்குசம் கரன் நாட்டு-கல்வளைப்பதியிலே வீற்றிருக்கின்ற யானையாகிய அங்குசத்தைக் கையிற் கொண்டவராகிய விநாயகக்கடவுளது நாட்டிலே, சங்கரன் நாட்டத்து இரண்டு அஞ்சு நால் பொறிச் சர்ப்பம் வனசம் கரன் ஆட்டம் தவிர்த்தோன் துயில் வடம் தண் தாளம் சங்கு ஆரம் நாட்டு அயில் சேர் வஞ்சி என்றனது உயிர் - சிவபெருமானுடைய கண்களு ளிரண்டாகிய சந்திர சூரியர்கள் பயப்படுகின்ற நான்கு பொறிகளையுடைய சர்ப்பப் படமுந் தாமரை மலருங் கரனென்

பவனுடைய வலியை நீக்கிய விட்டுணு நித்திரை செய்கின்ற ஆலிலையுங் குளிர்ந்த முத்துஞ் சங்கும் அரங்கதுவப்பெற்ற வேலும் பொருந்திய (ஒரு) கொடியே என்னுடைய உயிர்.

(கு-ரை.) நாற்பொறி: செவியொழிந்த மெய் வாய் கண் மூக்காகிய நான்கிந்திரியங்கள். சர்ப்படம் அல்குலுக்கும், தாமரை முகத்துக்கும், ஆலிலை வயிற்றிற்கும், முத்து பல்லுக்கும், சங்கு கழுத்துக்கும், வேல் கண்ணுக்கும், கொடி இடைக்கும் ஒப்பு என்க. இஃது இவ் விடத்திவ்வியற் றென்றல். (அரு)

தனக்காக்கை யன்றி வழங்காரைப் பாடித் தளர்பசிய
தனக்காக்கை யுண்ணு முடல்வீக் கிடச்சலித் தேன்சிலைவே
டனக்காக்கை போக்கிய நோக்கினன் மைந்ததண் காரினைச்சந்
தனக்காக்கைந் நீட்டுதென் கல்வளை யன்பர் சகாயத்தனே.

(இ-ள்.) தனம் காக்கை அன்றி வழங்காரைப் பாடி தளர் பசி அதனம் காக்கை உண்ணும் உடல் வீக்கிடச் சலித்தேன் - பொருளைக் காத்தலே அன்றி (இரப்பவர்களுக்குக்) கொடாதவர்களைப் பாடித் தளர்ந்த பசிமிகுதியினையுடைய காக்கைகளுண்ணுகின்ற உடலைப் பருப்பித்தற்காகச் சலிப்புற்றேன், சிலை வேள் தனக்கு ஆக்கை போக்கிய நோக்கினன் மைந்த-(கருப்பு) வில்லினையுடைய மன்மதனுக்குத் தேகத்தை நீக்கிய பார்வையினையுடைய சிவபெருமானது திருக்குமாரரே, தண் காரினை சந்தனக் கா கை நீட்டு தென் கல்வளை அன்பர் சகாயத்தனே- குளிர்ந்த மேகத்தைச் சந்தனமரச் சோலைகள் கை நீட்டித் தொடுகின்ற அழகிய கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற அன்பர்களுக்குச் சகாயஞ் செய்கின்றவரே. (அசு)

காயப் படவு துளங்கிச் சிலேட்டுமக் கால்விசைத்துக்
காயப் படவு முடியுதை யோமலர்க் காவணமா
காயப் படவுயர் கல்வளை நாத கரியுரியே
காயப் படவுண்ம காதல னின்ற காமஞ்சனே.

(இ-ள்.) சிலேட்டுமக் கால் விசைத்துக் காய - சிலேட்டுமமாகிய காற்று விசைத்தடிக்க, காயம் படவு துளங்கி படவும் முடியுது ஐயோ-தேகமென்னுந் தோணியானது நடுங்கி அழியவும் முடிகின்றது ஐயோ, மலர் கா ஆகாயம் வணம் பட உயர் கல்வளை நாத - பூஞ்சோலைகள் ஆகாயம்வண்ணம் படும்படி உயருகின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற தலைவரே, கரி உரி ஏகாயப்பட உமை காதலன் ஈன்ற கரமஞ்சனே - யானைத்தோலாகிய உத்தரீய வஸ்திரத்தையுடைய உமாதேவியார்க்கு நாயகராகிய சிவபெருமான் பெற்றருளிய துதிக்கையினையுடைய யானையே (என்னைக் காத்தருள்வீர்).

(கு-ரை.) வண்ணம் வணமென நின்றது மஞ்சு மேகம், ஈண்டு மேகம்போன்ற யானை. (அஎ)

மஞ்சரிக் கண்ணிமின் வேணியன் கல்வளை வாசன்மணி
மஞ்சரிக் கண்ணிய சாபத்தை மாற்றும் வாதன்வெற்பின்
மஞ்சரிக் கண்ணிப் புயத்தாய் மனங்கலங் காயின்றுநீ
மஞ்சரிக் கண்ணி நகைக்குடைந் தாயுன் மனத்துரமே.

(இ-ள்.) மஞ்சு அரி கண்ணி மின் வேணியன் - வலிய சர்ப்பமாகிய மாலை விளங்குகின்ற திருச்சடையையுடையவரும், கல்வளை வாசன் - கல்வளைப்பதியில் வீற்றிருப்பவரும், மணி மஞ்சு அரிக்கு அண்ணிய சாபத்தை மாற்றும் வாதன் வெற்பில் - அழகிய மேகம் போன்ற விஷ்ணுவுக்கு நேரிட்ட சாபத்தை நீக்கியருளிய வரதருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிலே, கண்ணி மஞ்சரி புயத்தாய் மனம் கலங்காய் - மலரரும்புகளாலாய மாலையை யணிந்த புயத்தினையுடைய தலைவனே (முன்யாதாலும்) மனங்கலங்கமாட்டாய், நீ இன்று மஞ்சு அரி கண்ணி நகைக்கு உன் மனத்து உரம் உடைந்தாய் - நீ யின்றைக்கு அழகிய ரேகை பொருந்திய கண்ணினையுடைய (ஒரு) பெண்ணினது முறுவலுக்கு உனது மனவலி யழிந்தாய்.

(கு-ரை.) இது கற்றறிபாங்கன் கழறல். (அஅ)

துரங்கந்தந் தாவளந் தோரா ளெனும்படை சூழ்ந்திடுசா
துரங்கந் தரணி படைத்திந்த்ர லோகமுந் துய்ப்பரிதோ
துரங்கந் தனிலுறை மாலேத்துங் கல்வளைத் தும்பிகற்சிந்
துரங்கந்த வேடுணைக் கன்பான மெய்த்திருத் தொண்டருக்கே.

(இ-ள்.) து ரங்கந்தனில் உறை மால் ஏத்தும் கல்வளை தும்பி - சுத்தமாகிய ஸ்ரீரங்கத்தி லிருக்கின்ற விஷ்ணு துதிக்குங் கல்வளைப் பதியில் வீற்றிருக்கின்ற யானையும், கல் சிந்து உரம் கந்தவேள் துணைக்கு - கிரவுஞ்சகிரியை (வேலால்) அழித்த வலியினையுடைய சுப்பிரமணியக் கடவுளுக்குத் துணைவருமாகிய விநாயகக்கடவுளுக்கு, அன்பான மெய் திரு தொண்டருக்கு - அன்பாகிய மெய்ம்மையையுடைய திருத்தொண்டர்களுக்கு, துரங்கம் தந்தாவளம் தேர் ஆள் எனும் சூழ்ந்திடு சாதுரங்கப்படை தரணி படைத்து இந்த்ரலோகமும் துய்ப்பு அரிதோ - குதிரைகளும் யானைகளுந் தேர்களுங் காலாள்களுமாகிய சூழ்ந்திடுகின்ற சதுரங்க சேனைகளையும் பூமியையும் (இம்மையிற்) பெற்று (மறுமையில்) இந்திரலோக (இன்பத்தையும்) அனுபவித்த லரிதாமோ. (அக)

அருமந்த மாருதத் தேரோற்கு மைத்துன னானபிரா
னருமந்த மாமுகன் கல்வளை யான்வெற்பி னுடைவரை
யருமந்தக் கார்குழன் மாலையும் வாடின தையமில்லை
யருமந்த மானுக் கிருப்புவெள் ளேறுடை யான்வையமே.

(இ-ள்.) அரு மந்த மாருதம் தேரோற்கு மைத்துனன் ஆன பிரான் - நுண்ணிய இளந்தென்றலாகிய தேரையுடைய மன்மதனுக்கு மைத்துனராகிய இறைவரும், அரும் மந்தமா முகன் - அருமையாகிய யானை வதனத்தை யுடையவரும், கல்வளையான் வெற்பின் அருமந்த மானுக்கு - கல்வளைப்பதியில் வீற்றிருப்பவருமாகிய விநாயகக்கடவுளது மலையிலுள்ள அருமருந்தன்ன பெண்ணுக்கு, ஆடவர் அயரும் அந்தம் கார் குழல் மாலையும் வாடினது-ஆடவர்கள் சோரும் அழகினை

யுடைய மேகம்போலுங் கூந்தலிலுள்ள மாலையும் வாடினது (ஆத லால்), இருப்பு வெள் ஏறு உடையான் வையமே ஐயம் இல்லை-(இவள்) உறை பதி வெள்ளிய இடபவாகனத்தை யுடையவராகிய சிவபெருமா னுடைய இரதமாகிய பூமியே ஐயமில்லை.

(கு-ரை.) மாலையும் என்றதி னும்மையால் கண்ணிமைத்த லாதிய னவேயன்றி என்பது பெறப்படும். இது துணிபு. (௧௦)

வைப்பா சத்தி யுரியா னிடத்தின் மகிழ்தருபார்
வைப்பா சத்தி திருமுலைப் பாலுண்ட வாயனமத
வைப்பா சத்தி செறிந்திடுங் கல்வளை வானவர்கோ
வைப்பா சத்தினம் பெற்றாரற் றார்துயர் மாநிலத்தே.

(இ-ள்.) வை பாசு அத்தி உரியான் இடத்தில் மகிழ் தரு பார்வை பாசத்தி திரு முலை பால் உண்ட வாயன் - கூரிய மழுப்படையையும் யானைத்தோற் போர்வையையுமுடைய சிவபெருமானது வாமபாகத்தி லுள்ள மகிழ்வைத் தருகின்ற பார்வையினையுடைய உமாதேவியாரது திருமுலைப்பாலை யுண்ட வாயினையுடையவரும், மதவைப்பு அரசு அத்தி செறிந்திடும் கல்வளை வானவர் கோவை தினம் பாச பெற்றார் மா நிலத்தே துயர் அற்றார் - மிருதிபாசத் தன்னிடத்தே அரசமரமும் அத்திமரமும் பொருந்தப்பெற்ற கல்வளைப் பதியில் வீற்றிருக்கின்ற தேவநாயகருமாகிய விநாயகக்கடவுளை எப்பொழுதும் வணங்கப்பெற்ற வர்கள் பெரிய பூமியின்கண்ணே துயர் நீங்கினவராவர். (௧௧)

மாவா ரணமெனக் கொண்டோன் விழிப்பட்டு மாய்ந்தவெங்கா
மாவா ரணங்க ளொருநாலு மேத்தி வணங்குமந்த
மாவா ரணங்கல் வளையான்றந் தான்கொன்றை மாலையெங்கண்
மாவா ரணங்கினை யென்செய்கு வாய்மலர் வாளிகொண்டே.

(இ-ள்.) மா வாரணம் என கொண்டோன் விழி பட்டு மாய்ந்த வெம் காமா - யானைத்தோலை மேற் போர்வையாகக் கொண்டருளிய

சிவபெருமானுடைய விழிப்பார்வையிற் பட்டிறந்த கொடிய மன்மதனே, ஆரணங்கள் ஒரு நாலும் ஏத்தி வணங்கும் அந்த மா வாரணம் கல்வளையான் கொன்றை மாலை தந்தான்-வேதங்கள் நான்குந் துதித்து வணங்குகின்ற அப்பெரிய யானையாகிய கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற விநாயகக்கடவுள் கொன்றைமாலையைத் தந்தார், எங்கண் மா ஆரணங்கினை மலர் வாளிகொண்டு என் செய்குவாய் - இலக்குமியையொத்த எம் தலைவியைப் புஷ்பபாணத்தைக்கொண்டு (இனி) என் செய்குவாய்.

(கு-ரை.) மா விழி, ஆகுபெயர்கள். மா ஆரணங்கு, இலக்குமியாகிய தெய்வப்பெண். இது புறப்பொருளில் கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தைச் சார்ந்ததோர் கிளவி. (கூஉ)

வாள முருக்கிதழ் வல்லவை சேர்கல் வளையிற்பிர
வாள முருக்கித வேணியன் வெற்பின் மதித்தசக்ர
வாள முருக்கு முலையாய் மலர்க்கரங் கொண்டுகர
வாள முருக்கயி னேர்வாரி பொத்துதன் மற்றரிதே.

(இ-ள்.) கல்வளையில் வாள முருக்கு இதழ் வல்லவை சேர் பிரவாளம் உருக்கு இதம் வேணியன் வெற்பில் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற ஒளியையுடைய முருக்கம்பூவையொத்த அதரத்தையுடைய வல்லவை சேரப்பெற்ற பவளத்தை யுருக்கினாற்போன்ற நல்ல சடையினையுடைய விக்கினேசுரக்கடவுளது மலையில், மதித்த சக்ர வாளம் முருக்கும் முலையாய் - கருதப்படுகின்ற சக்கரவாகப்புள்ளை வென்ற முலையினையுடையாய், கரவாளம் உருக்கு அயில் நேர் வாரி மலர் கரம் கொண்டு பொத்துதல் அரிது - வாளையும் உருக்கினு லியற்றப்பட்ட வேலையுமொத்த கண்ணை மலர்போலுங் கையினுற் பொத்துதலரிது (ஆகும்).

(கு-ரை.) வாரி, நீரையுடையது; கண். மற்று அசைநிலை. இஃது இடையூறு கிளத்தல். (கூ௩)

மற்கடந் தாவருங் காமேவு கல்வளை வாசன்வெங்கா
மற்கடந் தார்புக ழைங்கான் வெற்பில்வன் பார்த்தனுடன்
மற்கடந் தான்கட் டழல்குளிர் தீச்சுர வாரியென்று
மற்கடந் தாங்கிய கொங்கையெவ் வாறு மருவினளே.

(இ-ள்.) மற்கடம் தாவரும் கா மேவு கல்வளை வாசன் - குரங்குகள் தாவுகின்ற சோலைபொருந்திய கல்வளைப்பதியில் வாசஞ்செய்பவரும், வெம் காமன் கடந்தார் புகழ் ஐங்கான் வெற்பில் - கொடிய மன்மதனைவென்ற முனிவர் புகழுகின்ற ஐந்து திருக்கரங்களையுடையவருமாகிய விநாயகக்கடவுளது மலையில், வல் பார்த்தனுடன் மற்கள் தந்தான் கண் தழல் குளிர் தீ சுர வாரி என்னாமல் - வலிய அருச்சுனனோடு மல்யுத்தங்களைச் செய்தருளிய சிவபெருமானுடைய (நெற்றிக்) கண்ணினுள்ள அக்கினியுங் குளிருகின்ற நெருப்பையுடைய சுரவழியென்று கருதாமல், கடம் தாங்கிய கொங்கை எவ்வாறு மருவினள் - குடத்தின் றன்மையைத் தாங்கிய தனங்களையுடைய (எமது) மகள் எவ்வாறு சென்றாள்.

(து-றை) கடம் ஆகுபெயர். இது தன் மகள் மென்மைத்தன்மைக் கிரங்கல். (௬௪)

மரக்கணி யார்தம் மலமேர டவிழ்த்து வயினிடத்த
மரக்கணி யாரெனச் சோதிடஞ் சொல்லினர் வாளரிச்ச
மரக்கணி யாதுசெய் வாணம் விதிவசம் வல்லவைவா
மரக்கணி யார்மைந்தர் கல்வளை வாசர் மலையகத்தே.

(இ-ள்.) வல்லவை வாமர்-வல்லவையை வாமபாகத்திற் கொண்டவரும், அக்கு அணியார் மைந்தர் - என்பு மாலையாகிய அணியினையுடைய சிவபெருமானுக்குப் புத்திரரும், கல்வளை வாசர் மலையகத்து-கல்வளைப்பதியில் வாழ்பவருமாகிய விநாயகக்கடவுளது மலையில், மரக் கணியார் - மரமாகிய கணியார், தம் மலர் எடு அவிழ்த்து - தமது மலரேட்டை அவிழ்த்து, வயினிடத்து அமர் அக் கணியார் என சோதி

டஞ் சொல்லினர் - இந்நிலத்தின்கண்ணேயுள்ள அக் கணிச்சாதியார் போலத் (தினை விளைந்ததென்று) சோதிடங்கூறினர், (எமக்கு இனித் தினைப்புனங் காவலில்லை ஆகவே ஒருபொழுதுந் தலைவரைப் பிரியப் பெருத) வாள் அரி சமரம் கணி யாது செய்வாள் நம் விதிவசம் - வாள் போலும் இரேகைகளையுடைய போரினைப்புரியுங் கண்ணினையுடைய தலைவி (இனி) யாதனைச்செய்வாள் (இஙஙனமானது) எம் விதிவசமே.

(கு-ரை.) மரக்கணி வேங்கைமரம். மலரேடு மலரிதழ். கண்ணி கணியெனநின்றது. இஃது சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல். ()

கத்தாறு காலிசை யார்க்குங் குழற்கரும் பேயுயர்மா
கத்தாறு காலக் கருமாரி வந்தது கன்னியம்பூ
கத்தாறு காலுங் கனியள்ளி யாரங் கரைசிந்திவே
கத்தாறு கால்வருங் கல்வளை வாழைங் கரன்வெற்பிலே.

(இ-ள்.) கத்து ஆறு கால் இசை ஆர்க்கும் குழல் கரும்பே-கத்துகின்ற வண்டுகள் இசையை ஒலிக்கின்ற கூந்தலையுடைய (மொழியாற்) கரும்பை யொத்தவளே, கன்னியம பூகத் தாறு காலுங் கனி அள்ளி ஆரம் கரை சிந்தி வேகத்து ஆறு கால் வரும்-இளமையாகிய கமுகினது குலைகள் சிந்திய கனிகளை யள்ளி முத்துக்களைக் கரையிற் சிதறி வேகத்தோடு யாறுவாய்க்காலின் வழியே வருகின்றது, (ஆதலின்) கல்வளை வாழ் ஐங்கரன் வெற்பிலே உயர் மாகத்து ஆறு காலக் கரு மாரி வந்தது-கல்வளைப்பதியில் வாழ்கின்ற விநாயகக்கடவுளது மலையிலே உயர்ந்த ஆகாய வழியாகக் கார்காலத்துக் கருமேகம் வந்தது (போலும்).

(கு-ரை.) இஃது இறைவி யறியாள்போன்று குறியாள் கூறல்.

கரனு கராமுனி மாதுள மேந்திய கல்வளையான்
கரனு கராவற நேமிப படைக்கல மேவிவரு
கரனுக ராசன் பணிபெரு மான்புகழ் கற்றிடச்சி
கரநாக ராதிப ஞுபிர நாப்பெற்ற காரணமே.

(இ-ள்.) கரன் நாகு அரா முனி மாதுளம் ஏந்திய கல்வளையான்-திருக்கரங்களிலே சங்கையுஞ் சர்ப்பத்தையும் வில்லையும் மாதுளம்

பழத்தையு மேந்திய கல்வளைப்பதியை யுடையவரும், கரன் கார நா அற நேமிப் படைக்கலம் ஏவிவரு கரன்-கரனென்னுமசுரனும் முதலே யும் நடுவறச் சககரப்படையைச் செலுத்திய கையினையுடைய விஷ்ணு, நாகராசன் பணி பெருமான் - விண்ணுலகத்தரசன் இவர்கள் வணங்கு கின்ற இறைவருமாகிய விநாயகக்கடவுளது, புகழ் கற்றிட - புகழைக் கற்றிடுதற்கே, சிகர நாகர் ஆதிபன் ஆயிரம் நா பெற்ற காரணம் - உயர்ச்சியாகிய சர்ப்பங்களுக் கரசனாகிய ஆதிசேடன் ஆயிரம் நாக் களைப்பெற்ற காரணம் (போலும்). (கஎ)

காரப் பிணைவிழி வல்லவை பாலமர் கல்வளையான்
காரப் பிணையென வெங்குநின் றோன்வெற்பிற் காமரந்த
காரப் பிணையற் சுருள்வஞ்சி போற்கன்னி யீர்பொறியா [டே.
காரப் பிணையொன்று வநததுண் டோசொல்லுங் கண்டதுண்

(இ-ள்.) கார் அப்பு இணை விழி வல்லவை பால் அமர் கல்வளை யான் - கரிய அம்புபோன்ற இரண்டு கண்களையுடைய வல்லவை இடப் பாலி லிருக்கப்பெற்ற கல்வளைப்பதியை யுடையவரும், கார் அப்பு இணை என எங்கும் நின்றோன் வெற்பில் - முகிலிலுள்ள நீரைப்போல எங்கும் (நிறைந்து) நிற்கின்றவருமாகிய விநாயகக்கடவுளது மலையி லுள்ள, காமர் அந்தகாரப் பிணையல் சுருள் வஞ்சிபோல் கன்னியீர் - அழகிய இருளை நிகர்த்த மாலையை யணிந்த கூந்தலையுடைய வஞ்சிக் கொம்புபோலுங் கன்னியீர், பொறி ஆகாரப் பிணை ஒன்று வந்தது உண் டோ கண்டது உண்டு சொல்லும்-புள்ளி வடிவினையுடைய மானொன்று (ஈண்டு) வந்ததுண்டோ (நீவிர்) கண்டதுண்டு (ஆயிற்) கூறுமின்.

(கு-ரை.) இது கெடுதி வினாதல். (கஅ)

கண்டால முண்ட பெருமா னுதவிய கான்முளைபுன்
கண்டால மாந்தர்க் ககற்றுரு வாகனன் கல்வளையின்
கண்டால நேருங் கரத்தானைக் காணத் தொழப்புகழக்
கண்டாலங் கைத்தலம் பெற்றேனாற் றேனென் கனதுயரே.

(இ-ள்.) கண்டு ஆலம் உண்ட பெருமான் உதவிய கால் முளை - (அமரர் வருந்துதலைக்) கண்டு நஞ்சினை யுண்ட சிவபெருமான் பெற்றருளிய திருக்குமாரரும், தாலம் மாந்தர்க்கு புன் கண் அகற்று ஆகு வாகனன் - (தம்மை வழிபடுகின்ற) பூமியிலுள்ள மனிதருக்குத் துன்பத்தை நீக்கியருளுகின்ற மூடிகவாகனரும், கல்வளையின் கண் தாலம் நேரும் கரத்தானை - கல்வளைப்பதியின்க ணெழுந்தருளியிருக்கின்ற பனையை நிகர்த்த துதிக்கையினை யுடையவருமாகிய விநாயகக்கடவுளை, காண கண் தொழ கை நதலம் புகழ தாலம் பெற்றேன் என் கன துயர் அற்றேன்-காணக் கண்ணையும் வணங்கக் கரத்தையும் புகழ நாவையும் பெற்றுக்கொண்டேன் (ஆதலின்) எனது மிகுந்த துயரொழிந்தேன்.

(கு-ரை.) கால் முளை இருபெயரொட்டு. (௯௯)

கனகந் தரநிற மால்சாபந் தீர்த்திடுங் காரணவென் [கோ
கனகந் தரநெஞ்சிற் றோன்றுபுன் மாலைகைக் கொள்வைசெங்
கனகந் தருமலர் கோவைசெய் நாருங் கவினுமன்றோ
கனகந் தரள மணிமாடக் கல்வளைக் கற்பகமே.

(இ-ள்.) கனம் கந்தரம் நிறம் மால் சாபம் தீர்த்திடும் காரண மேகம்போலுங் கருநிறத்தையுடைய விஷ்ணுவினது சாபத்தை நீக்கியருளிய (சர்வ) காரணரே, கனகம் தரளம் அணி மாடம் கல்வளை கற்பகமே - பொன்னும் முத்தும் அழகைச் செய்கின்ற மாளிகைகளையுடைய கல்வளைப்பதியில் வாழுங் கற்பகவிநாயகரே, என் கல் நகம் தர நெஞ்சில் தோன்று புல் மாலை கைக்கொள்வை - என்னுடைய கன்மலையை நிகர்த்த உள்ளத்திலிருந்து தோன்றிய புல்லிய விப்பாமாலையை யேற்றுக்கொண்டருள்வீர், செம் கோகனகந்தரும் மலர் கோவை செய் நாரும் கவினும் அன்றோ - செந்தாமரை பூத்த மலர்களைக் கோத்த நாரும் அழகுறுமன்றோ. (௧00)

கல்வளையந்தாதி மூலமும் உரையும் முற்றிற்று.

உ

சிவமயம்.

கல்வளையந்தாதியின்

செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்செந்திநிரோட்டகயமகவந்தாதி.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

செய்த உரையுடன்

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிறபதிப்பிக்கப்பட்டது.

கo - ம் பதிப்பு.

இரத்தாக்ஷி௵ வைகாசிமீ.

1924

உ

கணபதி துணை.

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி

மூலமும் உரையும்

காப்பு.

கொற்றவருணனை நின்றன்றுழக்கியகொக்குருவைச்
செற்றவருணனையன்னசெவ்வேற்படைச்செந்திலர்க்கு
முற்றவருணனையந்தாதியென்றுமுதிர்மதப்பேர்
பெற்றவருணனையானனத்தாதியைப்பேசுவனே.

இதனது பதப்பொருள். அன்று கொற்ற வருணனை நின்று உழக்கிய கொக்குருவைச் செற்ற - (யுத்தஞ்செய்த) அக்காலத்து வெற்றியையுடைய சமுத்திராசனைக் (கடலிடத்தே) நின்று கலக்கிய மாமரவடிவாகிய சூரபத்மனைக் கொன்ற—அருணனை அன்ன செவ்வேற்படைச் செந்திலர்க்கு - சூரியனைப்போன்ற சிவந்த வேலாயுதத்தையுடைய திருச்செந்தூரில் வாழும் முருகக்கடவுளுக்கு—வருணனை அந்தாதி முற்ற - (நான் பாடத்தொடங்கும்) வர்ணனையையுடைய இந்நிரோட்டகயமகவந்தாதியானது (இடையூறின்றி) முடியும்பொருட்டு,—என்றும் முதிர் மதப்பேர் பெற்ற அருள் நனை - எக்காலத்தும் முதிர்ந்த மதநீரென்று (உலகத்தார் சொல்லும்) பெயரைப் படைத்த அருள் வெள்ளமானது தோன்றி நனைக்கப்பெற்ற—ஆனனத்து ஆதியைப் பேசுவன் - யானைமுகத்தையுடைய கணபதியை (யான்) துதிப்பேன். என்றவாறு. ஏ - ஈற்றசை. அந்தாதியானது முடியும்பொருட்டுக் கணபதியைத் துதிப்பேனெனக் கூட்டுக. நிரோட்டகயமகவந்தாதி - நிரோட்டகமும் யமகமுமாகப் பாடப்படும் அந்தாதி. நிரோட்டகமாவது இதழ் முயற்சியாற்பிறக்கும் மெய்யும் உயிரும் உயிர்மெய்யும் வாராமற் பாடப்படுவது. யமகமாவது அடிமுதலெழுத்தொடு இரண்டெழுத்துமுதற் பத்தெ

ழுத்தீறாக ஓரடிபோல நான்கடியும் பாடப்படுவது. இப்பிரபந்தத்தின் முதலிலே தனித்து நிற்கும் இக்காப்புச்செய்யுள் நிரோட்டகமுமன்று, யமகமுமன்று, திருக்கெனக் கண்டுகொள்க. திருக்காவது அடிமுதலெழுத்தொழித்து இரண்டெழுத்துமுதற பன்னிரண்டெழுத்தீறாக ஓரடிபோல நான்கடியும் பாடப்படுவது.

யானைக்கண்டங்கரிசென்றேத்தெழிற்செந்திலின்றடைந்தே
யானைக்கண்டங்கரியற்கங்கயிலையையேத்துதகை
யானைக்கண்டங்கரிசேரெண்டிக்காக்கினற்கீநலிசை
யானைக்கண்டங்கரிதாகியசீர்க்கதியெய்தினனே.

இ - ள். யானைக்கண் தங்கு அரி சென்று ஏத்து எழிற்செந்தில் இன்று அடைந்து - வெள்ளையானையின்மேல் இருக்கின்ற இந்திரன் போய்த் துதிக்கும் அழகினையுடைய திருச்செந்தூரை இன்றைக்குச் சேர்ந்து,—யான் - நான்—ஐக்கண்டம் கரியற்கு- அழகையுடைய கழுத்தாக கரிதாகப்பெற்றவரும்—அம் கயிலையை ஏத்த தகை ஆன் ஐக்கு - அழகிய கைலாசகிரியைப்போன்ற பெருமையையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட கடவுளும—அண்டம் கரி சேர் எண்டிக்கு ஆக்கினற்கு - அண்டங்களையும் அட்ட கஜங்கள் பொருந்திய அட்டதிக்குக்களையும் சிருட்டித்தவருமாகிய பரமசிவனுக்கு—ஈ நல் இசையானைக் கண்டு- (பிரணவப்பொருளை) உபதேசித்தருளிய நன்மையாகிய கீர்த்தியையுடைய சுப்பிரமணிய சுவாமியைத தரிசித்து,—அங்கு அரிதாகிய சீர்க்கதி எய்தினன் - அவ்விடத்தே (யாவர்க்குங் கிடைத்தற்கு) அரிதாகிய சிறப்பையுடைய மோக்ஷத்தை யடைந்தேன். எ - று. நான் சுப்பிரமணியசுவாமியைத் தரிசித்து மோக்ஷத்தை யடைந்தேனெனக் கூட்டுக. (க)

தினகரனந்தநணியிலங்காநின்றசெய்யநற்செந்
தினகரனந்தநிதியாயினனடர்சீரயிலேந்

தினகரனந்தகனைச்செற்றதாளர்திகழ்கனகா
தினகரனந்தநடனர்தனயனென்சிந்தையனே.

இ - ள். தினகரன் நந்த நனி இலங்காநின்ற செய்ய நற்செந்தில் நகரன் - சூரியன் ஒளி குன்றும்படி மிகப்பிரகாசிக்கின்ற செவ்வையாகிய நல்ல திருச்செந்திலென்னும் நகரத்தையுடையவரும்—நந்தம் நிதியாயினன் - நம்முடைய செல்வமாயினவரும்—அடறசீர் அயில் ஏந்தின கரன் - வலிமையையுடைய சிறப்பாகிய வேலாயுதத்தைத் தரித்த கையையுடையவரும்,—அந்தகனைச் செற்ற தாளர் திகழ் கன காதில் நகர் அனந்தன் நடனர் தனயன் - இயமனை வதைத்த பாதங்களையுடையவராகியும் விளங்குகின்ற பாரத்தையுடைய செவிகளிலே அசைகின்ற அனந்தனாகிய குண்டலத்தையுடைய நடேசராகியு மிருக்கின்ற பரமசிவனுடைய குமாரருமாகிய முருகக்கடவுளானவர்—என் சிந்தையன் - என மனத்தின்கண் இருக்கின்றனர். எ - று. (௨)

சிந்தனையாகத்திசையந்தணர்க்கிறைசேரகங்க
சிந்தனையாகத்தரையளித்தாடரைசென்றிரந்த
சிந்தனையாகத்திடையிமையந்தான்றந்தசேயளியாற்
சிந்தனையாகத்தநற்செந்திலாய்நினைச்சேர்ந்தனனே.

இ - ள். சிந்தனை யாகத்து இசை அந்தணர்க்கு இறை - தங்கள் மனமானது வெளியின்கண்ணே பொருந்தப்பெற்ற பிராமணர்கட்குத் தலைவரே,—சேர் அகம கசிந்து அனை ஆகத் தரை அளித்தாள் - பொருந்திய மனங்கசிந்து மாதாவாக இப்பூமியைப்பெற்ற உமாதேவியையும்—சென்று தரை இரந்த சிந்தனை- (மாவலிச்சக்கிரவர்த்தியினிடத்திலே) போய்ப் பூமியை யாசித்த வாமனரூபத்தையுடைய விஷ்ணுமூர்த்தியையும்—ஆகத்திடை இமையந்தான் தந்த சேய் - தமது திருமேனியிலே (இடப்பாதியும் வலப்பாதியுமாகக்) கொண்ட பரமசிவன் பெற்ற குமாரரே,—அளியால் சிந்து அனையா - கிருபையினாலே சமுத்திரத்தைப் போன்றவரே,—கத்த - கருத்தாவே,—நற்செந்திலாய் -

நன்மையாகிய திருச்செந்தூரையுடையவரே,—நினைச் சேர்ந்தனன் - உம்மை (யான் வந்து) அடைந்தேன். எ - று. என்னைக் காத்துக்கொள்ளுமென்பது எஞ்சி நின்றது. அன்னே நினைனை என்பன அனை நினை என இடைக்குறைந்து நின்றன. (௩)

தனத்தலங்காரநிறைநாரியரந்தரத்தசைகே
தனத்தலங்காரநிகழரங்காடச்செய்தன்னியத
தனத்தலங்காரதராயியங்கத்தக்கதண்செந்திற்கந்
தனத்தலங்காரனையானயனேத்திடத்தங்கினனே.

இ - ள். தனத்து அலங்கு ஆரம் நிறை நாரியர் - முலையினிடத்து அசைகின்ற முத்துமாலைகள் நிறையப்பெற்ற பெண்கள்—அந்தரத்து அசை கேதனத்து அலங்காரம் நிகழ் அரங்கு ஆட—ஆகாயத்திலே அசைகின்ற கொடிகளையுடைய அழகு விளங்குகின்ற சபையின்கண்ணே நடிக்கவும்,—செய் தன்னின் நயத்தநத்து அலம் கார் அதராய இயங்கத் தக்க தண் செந்தில் கந்தன் - வயல்களிலே சுகத்தையுடையனவாகிய சங்குகள் கலப்பைச்சாலிலே நிற்கின்ற சலமானது வழியாக அதிலூர்ந்து செல்லவுந்தக்க குளிர்ச்சியையுடைய திருச்செந்தூரில் வாழும் கந்தசுவாமியானவர்—அத்தலம் சார் அனையான் அயன் ஏத்திடத் தங்கினன் - அந்தஸ்தலத்தினிடத்தே மேகம்போலும் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவருந் துதிக்க இருந்தருளினார். எ - று. அலட ஆகுபெயர். (௪)

தங்கந்தனங்களடையத்தனியெனைத்தள்ளியங்கே
தங்கந்தனங்கடரச்சென்றனரதிந்தாரிலைகா
தங்கந்தனங்களலர்காக்கஞரெழிற்றண்செந்திலா
தங்கந்தனங்கநிகர்செக்கர்செய்சஞ்சலத்தினையே.

இ - ள். தனங்கள் தங்கம் அடையத் தனி எனைத் தள்ளி - என் முலைகள் பொன்போலும் தேமலைப்பொருந்தத் தனியாக என்னை இவ்விடத்திலே விட்டுப் பிரிந்து—அங்கே தங்கு அ

தனங்கள் தரச் சென்றனர் - (தாம் போன) அவ்விடத்தில் இருக்கின்ற அழகிய திரவியங்களைக் கொண்டுவரும்பொருட்டுப் போன என்னுடைய நாயகர்—காதம் கந்தம் நம் கள் அலர் காக்கண் ஆர் எழில் தண் செந்திலார் தம் கந்தன் - ஓர்காததூரம் மணம் வீசுகின்ற நம்முடைய தேன்பொருந்திய பூக்கள் நந்தனவனங்களிலே நிறைந்திருக்கப் பெற்ற அழகையும் குளிர்ச்சியையுமுடைய திருச்செந்தூரில் வசிக்கின்றவர்களுடைய கந்தசுவாமியினது—அங்கம் நிகர் செக்கர் செய் சஞ்சலத்தினை அறிந்தாரிலை - திருமேனியைப்போலும் இச்செவ்வானம் எனக்குச் செய்கின்ற துக்கததைை உணர்ந்தாரில்லை. எ - று. [தலைவன் பிரிந்துழித் தலைவி மாலைகண்டிரங்கல்.] (ரு)

சலநதராகந்தரித்தார்தந்தாதன்றனதிடைச்சஞ்
சலநதராகந்தரைநடந்தாலெனச்சார்நததண்டன்
சலந்தராகநதளரச்செறமுர்தனயன்றலநச்
சலந்தராகந்தனக்கிறைசேர்செந்திறசார்ந்திடற்கே.

இ - ள். சலம் தரம் நாகம் தரிததார் - கங்கையையுந் தலைமாலையையும் சர்ப்பத்தையும் தரிததவரும்,—தம் தாதன்றனதிடைச் சஞ்சலம் தர - தம்முடைய அடியாராகிய மார்க்கண்டேயரிடத்திலே துக்கத்தைக் கொடுக்கும்பொருட்டு—நாகம் தரைநடநதாலெனச் சார்நத தண்டன் - யானையானது பூமியிலே நடநதாறபோலச் சேர்ந்த இயமனையும்—சலந்தரன ஆகம் தளரச் செறமுர் தனயன் - சலநதரனையும் உடலஞ்சோரும்படி கொன்றவருமாகிய பரமசிவனுடைய குமாரராகியும்—தரம் நாகந தனக்கு இறை சேர செந்தில் தலம சார்ந்திடறகு நச்சலம் - மேன்மையையுடைய மலைகளுக்குத் தலைவராகியு மிருககின்ற முருகக்கடவுள் வீறறிருக்குந திருச்செந்தூராகிய தலததைை யடைதறகு யாம் விரும்பினோமில்லை. எ - று. (சு)

சாரங்கஞ்சங்கரிகட்கிச்சித்தேய்நதகைச்சஙகரனூர்
சாரஙகஞ்சங்கரிதாஞ்சக்கரஙகையிற்றுங்கினன்சேய்

சாரங்கஞ்சங்கரியாநண்ணினர்க்கந்தத்தந்திரத்தா
சாரங்கஞ்சங்கரிதேயெனச்செய்நின்சரண்டந்ததே.

இ - ள். சாரங்கம் சங்கரி கட்கு இச்சித்து ஏய்ந்த கைச் சங்கரனார் - மானனது உமாதேவியினது கண்ணினழகுக்கு விரும்பிவந்திருந்தாற்போலப் பொருந்திய கையையுடைய சங்கரரும்—சாரங்கம் சங்கு அரிதாம் சக்கரம் கையில் தாங்கினன் சேய் சார் அங்கம் சங்கரியா நண்ணினர்க்கு - சார்ங்க மென்னும் வில்லையும் சங்கையும் அரிதாகிய சக்கரத்தையும் கையிலே தரித்த விஷ்ணுமூர்த்தியுடைய புதல்வனாகிய மன்மதனுடைய பொருந்திய உடலத்தைக் கொன்று (முன்போல யோகத்து) இருந்தவருமாகிய பரமசிவனுக்கு—அந்த தந்திரத்து ஆசாரம் - வேதத்தின் முடிவாகிய சைவாகமத்தினது சீலத்தை—கஞ்சம் கரிதேயெனச் செய் நின் சரண் தந்தது - செந்தாமரை மலரும் கரிதென்று சொல்லும்படி செய்கின்ற உம்முடைய பாதம் கொடுத்தது. எ - று. இரண்டாமடியிலே சார்ங்கமென்பது எதுகை நோக்கிச் சாரங்கமென ஓர் அகரம் விரியப்பெற்று நின்றது. (எ)

தந்தனஞ்சங்கையணிகரர்சேர்க்கத்தடங்கணலை
தந்தனஞ்சங்கையலரென்செய்யாடங்கச்சற்சனர்நித்
தந்தனஞ்சங்கையகலறத்திசெந்திறசார்கதனித்
தந்தனஞ்சங்கையநகனிளையனற்றுடரற்கே.

இ - ள். சங்கை அணி கரர் தம் தனம் சேர்க்கத் தடங்கண் அலை தந்தனம் - சங்குவளையலையணிந்த கையினையுடைய பெண்கள் தங்கள் முலைகளிலே புணர்க்க அவர்களுடைய விசாலமாகிய கண்களினாலே யாம் அலைந்தோம்:—சம் கை - (இனி அவர்களோடனுபவிக்குஞ்) சுகத்தை நீ வெறுத்துவிடு;—அலர் என் - (இதனாலுண்டாகும், பழிமொழி நமக்கு ஏன்?—செய்யாள் தங்கச் சற்சனர் நித்தம் தனம் சங்கை அகல் அறத்து ஈ - இலக்குமி வசிக்கச் சன்மார்க்கமுடைய சனங்களுக்கு எப்பொழுதும் திரவியங்களை ஐயம் நீங்கிய தருமநெறியிலே கொடு:—தனித்தந்

தன் அஞ்சு அங்கை அநகன் இளையன் நல் தாள் தரற்குச் செந்தில் சார்க - ஒற்றைக்கொம்பினையுடையவரும் ஐந்தாகிய அழகிய கைகளையுடைய பாவமில்லாதவருமாகிய விநாயகக்கடவுளுடைய தம்பியாராகிய சுப்பிரமணியசுவாமியானவர் தம்முடைய நன்மையாகிய பாதங்களை நமக்குத் தரும்பொருட்டு அவர் வீற்றிருக்குந் திருச்செந்தூரை அடை. எ - று. (௮)

தரங்கநந்தாரனனியேற்றெழிற்செந்திற்றந்தைநிரந்
தரங்கனந்தாரகநாடினென்றெநினைசத்தியரந
தரங்கநந்தாரநகரீசர்சேய்கிரித்தையலர்க்கந்
தரங்கநந்தாரளகஞ்சிற்றிடைசலசங்கண்களே.

இ - ள். தரங்கம் நந்து ஆரல் நனி ஏற்று எழில் செந்தில் தந்தை - கடற்றிரைகள் சங்குகளை மதிலின்மேலே மிக ஏற்றுகின்ற அழகையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கும் பிதாவாகியும்,—நிரந்தரம் தாரகம் நாடின் கனம் என்று நினை சத்தியர் அந்தரங்கம் நந்தார் - எக்காலத்தும் பிரமஸ்வரூபத்தை விசாரிக்கில் நமக்கு மேன்மையாகுமென்று நினைக்கின்ற மெய்ஞ்ஞானிகளுடைய அந்தரங்கத்திலே கெடுதலின்றி விளங்குகின்றவரும்,—அநகர் ஈசர் - ஆணவமில்லாதவருமாகிய பரமசிவனுடைய—சேய கிரித் தையலர்க்கு-குமாரராகியுமிருக்கின்ற முருகக்கடவுளுடைய மலையிலிருக்கும் பெண்ணுக்கு - தார் அளகம் கனம் - மாலையையுடைய அளகமானது மேகத்தைப்போலும்;—சிற்றிடை அந்தரம் - சிறுமையாகிய இடையானது ஆகாயத்தைப்போலும்:—கண்கள் சலசம் - கண்களானவை செந்தாமரைமலரைப்போலும். எ - று. [தலைவியினது அவயவம் புகழ்தல்.]

சங்கங்களங்கமுனிக்கரைசேர்செந்திற்றங்கினநஞ்
சங்கங்களங்கரநண்ணரன்சேயெய்தச்சார்ந்தனஞ்சற்
சங்கங்களங்கனியையிகர்தண்டதாற்கினிய
சங்கங்களங்கரெனநின்றயாங்கணெஞ்சங்கரைந்தே.

இ-ள். சங்கங்கள் அம் கழனிக்கரை சேர் செந்தில் தங்கினம் - சங்குகள் அழகையுடைய வயல்களினது கரைகளிலே பொருந்திய திருச்செந்தூரின்கண் இருந்தனம்;— நஞ்சம் கம் களம் கரம் நண் அரன் சேய் எய்த - நஞ்சும் தலையும் கழுத்திலும் கையிலும் இருக்கப்பெற்ற பரமசிவனுடைய குமாரராகிய முருகக்கடவுளை அடையும்பொருட்டு,— சரசங்கம் சார்ந்தனம் - சரசங்கத்தைச் சேர்ந்தோம்:— களங்கனியை நிகர் தண்டதரற்கு இனி அசங்கம் - களாப்பழத்தைப்போலும் நிறத்தையுடைய இயமனுக்கு இனி அஞ்சோம்;— களங்கரென நின்ற யாங்கள் நெஞ்சம் கரைந்து - குற்றத்தையுடையவர்களாய் நின்ற நாங்கள் மனம் உருகி. எ-று. நாங்கள் மனமுருகி இருந்தனமெனக் கூட்டுக. (௧௦)

கரத்தரிக்கங்கணங்கட்டரனூர்தந்தகந்தரழ
கரத்தரிக்கங்கணங்கண்டசெய்ச்செந்திலெங்காங்கெயர்சா
கரத்தரிக்கங்கணங்கட்கயனூர்க்கெழிற்காசணிசே
கரத்தரிக்கங்கணங்கற்றிடத்தாங்கினர்கைச்சத்தியே

இ-ள். கரத்து அரிக கங்கணம் கட்டு அரனூர் தந்த கந்தர் - கையிலே சர்ப்பமாகிய கங்கணத்தைக் கட்டிய பரமசிவனார் பெற்ற கந்தசுவாமியும்,— அழகர் - அழகையுடையவரும்,— அத்தர் - பிதாவும்,— இக்கு அங்கணம் கண்ட செய்ச் செந்தில் எங் காங்கெயர் - கரும்புகள் சேற்றினிடத்து உண்டாகப்பெற்ற வயல்களையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற நம்முடைய காங்கேயருமாகிய முருகக்கடவுளானவர்— சாகரத்து அரிக்கு - திருப்பாற்கடலிலே நித்திரைசெய்கின்ற விஷ்ணுமூர்த்திக்கும்,— அம் கணங்கட்கு - அழகிய (தேவர் முதலிய) கணங்களுக்கும்,— அயனூர்க்கு - பிரமதேவருக்கும்,— எழில் காசு அணி சேகரத்து அரிக்கு - அழகையுடைய இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட முடியையுடைய இந்திரனுக்கும்,— அங்கு அணங்கு அற்றிட - அவ்விடத்தே (சூரன் முதலிய அசுரர்களாலுண்டாகிய) வருத

தம் நீங்கும்பொருட்டு—கைச்சத்தி தாங்கினர்-கையின்கண்ணே வேலாயுதத்தைத் தரித்தருளினார். எ - று. காங்கேயரென்பது காங்கெயரெனக் குறுக்கல்விகாரம்பெற்று நின்றது. (௧௧)

சத்திக்கரத்தனகச்சேயங்கத்தினைத்தந்தனனற்
சத்திக்கரத்தனகச்சிலையாளிதன்றாளிணைநே
சத்திக்கரத்தனகத்தியைந்தேத்தரன்றந்தகதிர்ச்
சத்திக்கரத்தனகசெந்திலாய்நின்சரண்சரணே.

இ - ள். சத்திக் கரத்தன் அகச் சேய அங்கத்தினைத் தந்தனன் - வலிமையையுடைய முதலையினது வயிற்றினுள்ளே புகுந்த பிராமணப்பிள்ளையினுடைய உடம்பை (சுந்தரமூர்த்திநாயனாருடைய திருப்பதிகத்தின் பொருட்டு) அழைத்துக்கொடுத்தவரும்—நல் சத்திக்கு அரத்தன - நன்மையாகிய (தமதிடப்பாதியிலிருக்கும்) உமாதேவிக்கு (வலப்பாதியிலே) சிவந்த ரூபமாக விளங்குகின்றவரும்,—நகச் சிலை ஆளி - மகாமேருமலையை வில்லாக ஆண்டவரும்,—தன் தாளிணை - தம்முடைய இரண்டு பாதங்களையும்—நேசத்து இக்கு அரத்தன அகத்து இயைந்து ஏத்து அரன் தந்த - அன்பினைக் கரும்புவில்லையுடைய மன்மதனுக்குப் பிதாவாகிய விஷ்ணுமூர்த்தி மனசிலே பொருந்தித் துதிக்கின்ற சங்காரகர்த்தாவுமாகிய பரமசிவன் பெற்ற—கதிர்ச் சத்திக் கரத்து அனக - கிரணத்தையுடைய வேலாயுதத்தைத் தரித்த கையினையுடைய மலமுத்தரே,—செந்திலாய் - திருச்செந்தூரையுடையவரே,—நின் சரணே சரண் - உம்முடைய பாதங்களே எனக்குப் புகலிடம். எ - று. (௧௨)

சரிதங்கையாரக்கலனந்தனந்தரித்தார்நரகே
சரிதங்கையாரக்கரிடத்தினார்தந்ததணிசெந்திலே
சரிதங்கையாரக்கணத்தினனல்கைத்தல்சரதந்தஞ்சீரச
சரிதங்கையாரக்கசிந்திசைக்கின்றதகையினர்க்கே.

இ - ள். சரி தம் கை ஆரக் கலன் தம் தனம் தரித்தார் நரகேசரி தங்கையார் இடத்தினார் - வளையலைத் தமது கையிலும்

முத்துமாலையாகிய ஆபரணத்தைத் தமது மூலையிலும் தரித்தவரும் நரசிங்கவுருவங்கொண்ட விஷ்ணுமூர்த்தியினுடைய தங்கையாருமாகிய உமாதேவியார் பொருந்திய வாமபாகத்தையுடையவராகிய—அக்கர் தந்த - சங்குமணியை அணிந்த பரமசிவன் பெற்ற—தண் செந்தில் நேசர் - குளிர்ச்சியையுடைய திருச்செந்தூரில் விருப்பத்தையுடைய முருகக்கடவுள்—இதம் கையார் - இன்பத்தை வெறாது செய்வார்;—அக்கணத்து இன்னல் கைத்தல் சரதம் - அந்தக்கணத்திலே துன்பத்தை வெறுத்தொழித்தல் சத்தியம்;—தம் சீர்ச் சரிதம் கை ஆரக் கசிந்து இசைக்கின்ற தகையினர்க்கு - தமது சிறப்பையுடைய சரித்திரத்தை ஒழுக்கம் பொருந்தும்படி மனங்கசிந்து சொல்கின்ற அன்பினையுடையவர்களுக்கு. எ - று. முருகக்கடவுள் அன்பினையுடையவர்களுக்கு இன்பத்தைச் செய்வார், துன்பத்தையொழித்தல் சத்தியமெனக் கூட்டுக. (௧௯)

இன்னந்தியங்கிநிகர்த்தசெங்கேழன்கையீரிரண்டா
யின்னந்தியங்கிரியைச்சிலையாக்கிதன்சேயெழிற்செய்
யின்னந்தியங்கியிருங்கஞ்சஞ்சேர்செந்திலெந்தைதனை
யின்னந்தியங்கிசையக்கதியீந்தனனென்றனக்கே.

இ - ள். இன் அந்தி அங்கி நிகர்த்த செங்கேழன் - இனிதாகிய செவ்வானத்தையும் அக்கினியையும் போன்ற செந்நிறத்தையுடையவராகியும்,—கை ஈரிரண்டு ஆய் இல் நந்தி அம் கிரியைச் சிலையாக்கி தன் சேய - நான்கு கைகளையுடைய மாதாவையில்லாத நந்தியென்னுந் திருநாமத்தையுடையவரும் அழகையுடைய மகாமேருமலையை வில்லாகக்கொண்டவருமாகிய பரமசிவனுடைய குமாரராகியும்—எழில் செய்யில் நந்து இயங்கி இரும் கஞ்சம் சேர் செந்தில் எந்தை - அழகைப்பொருந்திய வயல்களிலே சங்குகள் ஊர்ந்து சென்று பெருமையாகிய தாமரைகளிலே பொருந்தியிருக்கப்பெற்ற திருச்செந்தூரில் வீற்றிருக்கும் நமது பிதாவாகியுமிருக்கின்ற முருகக்கடவுளானவர்,—

தளையினை நந்தி அங்கு இசைய - பாசத்தினற் கெட்டலைந்து அந்தஸ்தலத்தினைக் கண்ணே சேர,—என்றனக்குக் கதி ஈந்தனன் - எனக்கு மோக்ஷத்தைத் தந்தருளினர். எ - று. (கச)

தனக்கடங்காரெயில்செற்றகங்காளன்றனயனங்கந்
தனக்கடங்காதிழிதந்திக்கிளையன்றளிரெழிற்சந்
தனக்கடங்காநிறைசெந்திலினற்சேயசயிலநங்கை
தனக்கடங்காணினச்சாரிலையண்ணறரணியிலே.

இ - ள். தனக்கு அடங்கார் எயில் செற்ற கங்காளன் தனயன் - தமக்கு அமையாத அசுரர்களையுடைய மும்மதில்களையும் அழித்த முழுவெலும்பை யணிந்த பரமசிவனுடைய குமாரரும்,—அம் கந்தன் - அழகைப்பொருந்திய கந்தசுவாமியும்,—அகங் கடம் காது இழி தந்திக்கு இளையன் - அந்த மதமானது காதினின்றும் சொரிகின்ற யானையாகிய விநாயகக்கடவுளுக்குத் தம்பியும்,—தளிர் எழில் சந்தனக் கடம் கா நிறை செந்திலில் நற் சேய் - தளிர்களைப்பொருந்திய அழகையுடைய சந்தனமரங்களின் காடுகளும் பூஞ்சோலைகளும் நிறையப்பெற்ற திருச்செந்தூரில் வீற்றிருக்கும் நல்ல இளையோருமாகிய சுப்பிரமணியசுவாமியினது,—சயில நங்கை தனக் கடம் காணின் - மலையிலிருக்கின்ற பெண்ணினுடைய தனமாகிய குடங்களைக் காண்பாராயின்,—அண்ணல் தரணியில் நச்சார் இலை - தலைவனே, இப்பூமியின்கண்ணே விரும்பாதாரில்லை. எ - று. [பாங்கன் தலைவியின் அவயவத்தழகை வியத்தல்.] (கரு)

தரணியனையநிறத்தண்ணலாரிரந்தன்றளந்
தரணியனையனிறைஞ்சயிலார்நற்றனிச்சிலையாந்
தரணியனையனகனையந்தரித்திடுகந்
தரணியனையனென்சேயலர்த்தாள்கடரித்திறைஞ்சே.

இ - ள். தரணி அனைய நிறத்து அண்ணலார் - சூரியனைப் போன்ற நிறத்தையுடைய பெருமையிற் சிறந்தவராகியும்,— அன்று இரந்து அளந்த தரணியன் அயன் இறைஞ்சு அயிலார் -

அக்காலத்து யாசித்து அளக்கப்பட்ட பூமியையுடைய விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் வணங்குகின்ற வேலாயுதத்தை யுடையவராகியும்,—நல் தனிச் சிலையாம் தரணியன ஐ அனகன் ஆனந்தரி தந்திடு கந்தர் - நல்ல ஒப்பில்லாத வில்லாகிய மலையையுடையவரும் அழகினையுடைய மலரகித்தருமாகிய பரமசிவனைச் சேர்ந்த உமாதேவி பெற்றருளிய கந்தசுவாமியாகியுமிருக்கின்ற முருகக்கடவுளே - அணி அல் - (நமக்குப்)பெருமை பொருந்திய அரணாயிருக்கின்றார்;—நெஞ்சே மையல் - மனமே; நீ வருந்தாதே;—அலாத் தாள்கள் தரித்து இறைஞ்சு—அவருடைய செந்தாமரைமலர்போலும் திருவடிகளைத் தாங்கி வணங்கு. எ-று. அல்லென்பது மதிலுக்குப் பெயராமாறு "இரவுமிருளு மிருமபின் பெயரு—மெயிலுமிரவியுமல்லென லாகும்" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தாலுணர்க. (கரு)

தரிக்கனந்தங்கலைநீள்சடைக்கைக்கனற்சங்கரனந்
தரிக்கனந்தங்கலைநீதிகள்சாற்றரன்றந்தநற்கந்
தரிக்கனந்தங்கலைநீர்ச்செய்க்கணுஞ்செந்திலார்தளையா
தரிக்கனந்தங்கலைநீத்திழந்தேங்கரச்சங்கங்களே.

இ-ள். தரிக்க நந்து அம் கலை நீள் சடை கைக்கனல் சங்கரன் - தன்னைச் சூடிக்கொண்ட மாத்திரத்தில் ஆக்கம்பெற்ற அழகிய சந்திரகலையையுடைய நீண்ட சடையையும் கையிலே பொருந்திய அக்கினியையுமுடைய சங்கரரும—அந்தரிக்கு அனந்தம் கலை நீதிகள் சாற்று அரன் - உமாதேவிக்கு முடிவில்லாத சாத்திரமார்க்கங்களை உபதேசித்த சங்கார கர்த்தாவுமாகிய பரமசிவன்—தந்த நற் கந்தர் - பெற்ற நன்மையையுடைய கந்தசுவாமியாகியும்,—இக்கு அனம் தங்கு அலை நீர்ச் செய்க்கண் ஆம் செந்திலார் - கரும்புகளானவை அன்னங்கள் இருக்கின்ற அலையையுடைய ஜலம் பொருந்திய வயல்களிலே உண்டாகப்பெற்ற திருச்செந்தூரையுடையவராகியு மிருக்கின்ற முருகக்கடவுளுடைய—தளை ஆதரிக்க - மாலையை விரும்பினமாத்திரத்தில்,—

நந்தம் கலை நந்துக் கரச்சங்கங்கள் இழந்தேம் - நம்முடைய வஸ்திரத்தை நங்கைக் கையிலிருந்த சங்கவளையல்களை இழந்தனம் எ - று. [முருகக்கடவுள் பவனிவருதல் கண்டு மால் கொண்டு வஸ்திரமும் வளையலும் இழந்துநின்ற மகளிர் சொல்லியது.] (கஎ)

சங்கரியக்கநிகர்த்தநின்றாதைதகையதென்னச்
சங்கரியக்கரிறைஞ்செழிற்செந்திற்சடானனகஞ்
சங்கரியக்கதிர்தாவிசைகின்றசரணத்திறற்
சங்கரியக்கணத்தேயெற்செறியந்தகற்சினந்தே.

இ - ள். சங்கரி அக்கம் நிகர்த்த நின் தாதை தகையது என்ன - உமாதேவியுடைய கண்ணைப்போன்ற உம்முடைய பிதாவாகிய பரமசிவனது செபகையைப்போல,—சங்கு அரியக்கர் இறைஞ்சு எழிற் செந்திற் சடானன - சங்கையுடைய விஷ்ணு மூர்த்தியும் இயக்கர்களும் வணங்குகின்ற அழகையுடைய திருச்செந்தூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடையவரே,—கஞ்சம் கரியக் கதிர் இசைகின்ற சரணத்திறல் சங்கரி - தாமரைமலரும் கருகும்படியாக ஒளி பொருந்துகின்ற உம்முடைய பாதத்திறற் கொன்றருளும்—அக்கணத்தே எற செறி அந்தகற்சினந்து - அந்தக்கணத்தே என்னைச் சேரும் இயமனைக் கோபித்து. எ - று. இயமனைக் கோபித்துக் கொன்றருளுமெனக் கூட்டுக.()

தகரனலங்கநிறைநிறத்தான்செந்திற்றந்தைசங்கேய்ந்
தகரனலங்கனளிஞத்தினன்றுழளகந
தகரனலங்கடாந்னறசத்தியன்றுளெனினந
தகரநலங்கனன்றுலெனச்சிறிடத்தக்கரனறே.

இ - ள். தகரன் - மேடவாகனத்தையுடையவராகியும்;—நல் அங்கம் நிறை நிறத்தான - நன்மையாகிய திருமேனியிலே நிறைந்த வண்ணத்தை யுடையவராகியும்,—செந்தில் தந்தை - திருச்செந்தூரில் வாழும் பிதாவாகியும்,—சங்கு ஏய்ந்த கரன்

அலங்கல் நளினாதனத்தினன் தாழ் - சங்கு பொருந்திய கையை
யுடைய விஷ்ணுமூர்த்தியும் மாலையையணிந்த தாமரை யாசன
த்தினையுடைய பிரமதேவரும் வணங்குகின்ற—அளகம் தகரநல
ங்கள் தர நின்ற சத்தியன் - அளகமானது மயிர்ச்சாந்தாலா
கிய இன்பத்தைத் தரும்படி நின்ற கிரியாசத்தியாகிய தெய்வ
யானையையுடையவராகியு மிருக்கின்ற கந்தசுவாமியினுடைய—
தாளெனின் - பாதமென்பேனாயின்,—அந்தகர் அனலம் கனன்
றாலெனச் சீறிடத் தக்கரன்று - யமனார் வடவாமுகாக்கினி சுவா
லித்தாற் போலக் கோபித்தற்குத் தக்கவரல்லர். எ - று. (௧௯)

தக்கனகத்தினடற்றணித்தானயன்றன்கதிசந்
தக்கனகத்திகிரிக்கரனாக்கங்கடந்தளிக்கத்
தக்கனகத்தியனையாளியென்னெஞ்சந்தாஞ்சலசந்
தக்கனகத்தினகரன்றன்செந்திலைச்சந்திக்கினே.

இ - ள். தக்கன் அகத்தின் அடல் தணித்தான் (கதி) - தக்
கனுடைய அகங்காரத்தினது வலிமையை அடக்கிய உருத்திர
மூர்த்தியுடைய பதத்தையும்—அயன்றன் கதி - பிரமனுடைய
பதத்தையும்—சந்தக் கனகத் திகிரிக்கரன் ஆக்கங்கள்-அழகினை
யுடைய பொன்மயமாகிய சக்கரத்தைத்தரித்த கையையுடைய
விஷ்ணுவினது செல்வத்தையும்—தந்து அளிக்கத் தக்கன் -
தந்து காக்கத்தக்கவர்—அகத்தியனை ஆளி - அகஸ்திய மகா
முனிவரை ஆண்டருளினவரும்—என் நெஞ்சதாம் சலசம் தக்
கன் நகு அத தினகரன் - என்னிதயமாகிய தாமரைமலருக்கு
அன்பராக விளங்குகின்ற அந்த ஞானசூரியருமாகிய முருகக்
கடவுளானவர்,—தன் செந்திலைச் சந்திக்கின்-தம்முடைய திருச்
செந்தூரைச் சந்திக்கில். எ - று. முருகக்கடவுளானவர் தம்
முடைய திருச்செந்தூரைச்சந்திக்கில் உருத்திரமூர்த்தியினுடைய
பதத்தையும் பிரமனுடைய பதத்தையும் விஷ்ணுவினுடைய
செல்வத்தையும் தந்து காக்கத்தக்கவரெனக் கூட்டுக. (௨௦)

சந்தத்தனத்திகடந்திறத்தாசைதலத்தினிச்சை
சந்தத்தனத்தினசைதீரடியன்றனதில்லிற்சேர்
சுந்தத்தனத்தியதளான்றனயதடக்கயல்கஞ்
சந்தத்தனத்தினினங்கீழிழிசெந்திற்றங்கினற்கே.

இ-ள். சந்தத் தனத்திகள் தம் திறத்து ஆசை - சந்தனத்தையணிந்த தனத்தையுடைய பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும்—தலத்தின் இச்சை – மண்ணில் வைக்கப்படும் ஆசையையும்—சந்தத் தனத்தின் நசை தீர் - அழகையுடைய பொன்னிலேறும் ஆசையையும் தீர்த்தருளும்—அடியன்றனது இல் இல் சந்து சேர் அத்தன் அத்தி அதளான் தனய - தமதடியாராகிய சுந்தரமூர்த்திநாயனாருடைய மனைவியாகிய பரவையினது வீட்டிலே தூதாகச் சென்ற பிதாவும் யானையினது தோலையுடையவருமாகிய பரமசிவனுடைய குமாரரே,—தடக்கயல் கஞ்சம் தத்த நத்தின் இனம் கீழ் இழி செந்தில் தங்கினற்கு - பெரிய கயனமச்சங்கள் தாமரைமலரிலே பாய (அதின்மேற்றுயின்ற) சங்குக கூட்டங்கள் கீழே யிறங்கப்பெற்ற உம்முடைய திருச்செந்தூரிலே வந்து வசித்த எனக்கு. எ-று. பரமசிவனுடைய குமாரரே எனக்குப் பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும் மண்ணில் வைக்கப்படுமாசையையும் பொன்னிலேறு மாசையையும் தீர்த்தருளுமெனக் கூட்டுக. (௨௧)

தங்கச்சினகரநேராக்கலந்திச்சகநிறைந்தார்
தங்கச்சினகரநேயர்தனயன்றனக்கினிதாந்
தங்கச்சினகரநீள்செந்திஞட்டிற்றனகரிதந்
தங்கச்சினகரநறகனனென்னங்கடையலர்க்கே.

இ-ள். தங்கு அச்சின் அகரம் நேராக் கலந்து இச்சகம் நிறைந்தார் - பொருந்திய உயிரெழுத்துக்களுக்குள்ளே அகரமாகிய அக்கரத்தைப்போன்று உயிர்கள்தோறும் பொருந்தி இவ்வுலகத்திலே வியாபித்தவரும்—தம் கச்சி நகரம் நேயர் - தம்முடைய காஞ்சிபுரத்தில் விருப்பத்தை யுடையவருமாகிய பர

மயிலனுடைய—தனயன்றனக்கு இனிதாம் - குமாரராகிய முரு கக்கடவுளுக்கு இனியதாகிய—தமக சினகரம் நீள் செந்தில் நாட்டில் - பொன்னுலாய கோயிலானது உயர்ந்திருக்கப் பெற்ற திருச்செந்தூரைத் தன்னிடத்துடைய நாட்டின்கண்ணே—கரி தந்தத் தனம் கச்சில் நகர நறகனன் என் நஙகள் தையலர்க்கு - யானைக்கோட்டைப் போலும் தனங்கள் கச்சுள்ளே நின்றும் பிதுங்குதற்கு நல்ல கனம் யாது காரணத்தாலுண்டாயது எங் களுடைய பெண்ணுக்கு? எ - று. பாங்கியே நீ சொல்லென்பது எஞ்சி நின்றது. [செவிலி தலைவியினது முலை யிறுமாப்பைக் கண்டையுறறுப் பாங்கியை வினவல்.] (உஉ)

அலரிநனந்தலையாழிகண்டாஙகுச்சிகியினிடை
யலரினனந்தநிகரயிலான்செந்திலாயிழையை
யலரினனந்தநினைநிலநதேர்ந்ததறகன்றயலா
ரலரினனந்தஞ்சொலற்கிடனுநெஞ்சழிகின்றதே.

இ - ள். ஆழி நனந்தலை அலரி கண்டாஙகு - சமுத்திரத்தி னது நடுவிலே சூரியன் தோன்றினாறபோல—சிகியினிடை அலர் இனன் - மயில்வாகனத்திலே விளஙகுகின்ற தலைவரும்,— அந்தம் நிகர் அயிலான்—அழகிய ஒளிபொருந்திய வேலாயுத த்தை யுடையவருமாகிய முருகக்கடவுளது—செந்தில் ஆயிழை - திருச்செந்தூரிலிருக்கும் பெண்ணுக்கு—ஐயலர் இனல் நந்த நினை நிலம் தேர்ந்ததற்கு - ஐந்து புஷ்பபாணஙகளாலாகிய துன்பங்கெடும்படி உன்னை இநநாட்டின்கண்ணே தேடியத றகு—அன்று அயலார் அலரின் அனந்தம் சொலற்கு இடனு நெஞ்சு அழிகின்றது - அந்நாளிலே அயலவர்கள் பழிமொழி யாக அளவில்லாத வார்த்தைகளைப்பேசுதலுக்கு இடமாக மனம் வருந்துகின்றது. எ - று. [அலரறிவுறுத்தல்.] (உங)

தேயத்தியங்கியலகிறலங்களிற்சென்றடிக
டேயத்தியங்கியலையறிடங்கதிசேர்தலைறைந

தேயத்தியங்கினநித்திலந்தாவெறிசெந்திலடைந்
தேயத்தியங்கிதரித்தான்றனயற்றெரிசிக்கினே.

இ - ள். தேயத்து இயங்கி அலகில் தலங்களில் சென்று அடிகள் தேய தியங்கி அலையல்-தேசங்கள்தோறுஞ் சஞ்சரித்து அளவில்லாத க்ஷேத்திரங்களிலே போய்க் கால்கள் தேயும்படி தியங்கி அலையாதே,—க்தி சேர்தல் திடம் - மோக்ஷத்தை அடைதல் நிச்சயம்:—அறைந்து அத்தி அங்கு இனம் நித்திலம் எறி செந்தில் அடைந்து - ஆரவாரித்துச் சமுத்திரமானது அவ்விடத்திற் கூட்டமாகிய முத்துக்களைக் கரையிலெறியப்பெற்ற திருச்செந்தூரைச் சேர்ந்து,—ஏய் அத்தி அங்கி தரித்தான் தனயன் தெரிசிக்கின் - அவ்விடத்திலிருக்கின்ற எலும்பையும் அக்கினியையும் தரித்த பரமசிவனுடைய குமாரராகிய முருகக்கடவுளைத் தரிசிக்கில். எ - று. முருகக்கடவுளைத் தரிசிக்கில் மோக்ஷத்தையடைதல் நிச்சயமெனக் கூட்டுக. மூன்றுமடியின் முதலிலிருக்கும் ஏகாரம அசைநிலை. (உச)

சிக்கத தனங்கடிறக்கின்றகன்னியர்சிந்தைகளே
சிக்கத்தனங்களளித்தழிந்தேறகெழிற்செந்திறரி
சிக்கத்தனங்கழலையேத்தநல்கினன்சீர்நிறைகா
சிக்கத்தனங்களகிலேசன்றந்ததிறற்கந்தனே.

இ - ள். சிக்கத தனங்கள் திறக்கின்ற கன்னியர் சிந்தைகள் நேசிக்க-கச்சுடைவர்கள் தங்களிடத்தில் அகப்படும்படி முலைகளைத் திறவாநின்ற பெண்களுடைய மனம் விரும்பும்பொருட்டு—தனங்கள் அளித்து அழிந்தேற்கு - திரவியங்களை அவர்களுக்குக் கொடுத்துக் கெட்டவனாகிய எனக்கு—எழில் செந்தில் தரிசிக்க - அழகையுடைய திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும்,—தன் அம் கழலை ஏத்த - தம்முடைய அழகிய பாதத்தைத் துதிப்பதற்கும்,—நல்கினன் - அருள்செய்தார்—சீர் நிறை காசிக் கத்தன் நங்கள் அகிலேசன் தந்த திறல்கந்தன் - சிறப்புப்பொருந்திய காசியில் வீற்றிருக்கும் கருத்தாவாகிய எங்கள் விசுவநாத

சுவாமிபெற்ற வலிமையையுடைய கந்தசுவாமியானவர். எ - று. கந்தசுவாமியானவர் எனக்குத திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும் தம்முடைய பாதத்தைத துதிப்பதற்கும் அருள்செய்தாரெனக் கூட்டுக. (உரு)

கந்தரங்கானந்தனிறசென் றடங்கிலென்காசிக்கநே
கந்தரங்கானந்தநண்ணிலென்கன்னியர்கட்டளக
கந்தரங்கானந்தநின்றுடெழிற்செநதிற்கண்டிறைஞ்சிக
கந்தரங்கானந்தநல்கச்சனனங்கடநதிலரே.

இ - ள். கநதரம் கானந்தனில் சென்று அடங்கில் என் - முழையிலும் காட்டிலும் போய்ப் புலனொடுங்க இருந்ததனாற் பயன் யாது?—காசிக்கு அநேகந்தரம் காலநநத நண்ணில என - காசிக்கு அநேகமுறை கால்கள் வருநதும்படி போனதினாற் பயன் யாது?—கன்னியர் கந்தரம் கட்டு அளகம் கான நநத நின்று ஆடு எழில்செந்தில் கண்டு இறைஞ்சி - பெண்கள் மேகம போலும் நிறத்தையுடைய கட்டபபட்ட அளகததிலே வாசம் மிக நின்று நடிக்கின்ற அழகையுடைய திருசசெநதூரைத தரிசித்து வணங்கி,—கந்தர் அங்கு ஆனநதம நல்க - முருககடவுள் அவ்விடத்திற சிவானந்ததமைத அருள—சனனம கடநதிலர் - அதனாலே தங்கள் பிறவியை நீங்காதவாகள். எ - று. சிவானந தம்போற் கர்மயோகங்கள் பயன் படாவென்பது கருத்து. (உகூ)

கடனந்திநகத்ததளாடையாயெனைக்காக்கலிற்கே
கடனந்திநாணிறத்தாயெனநாரணனகண்டிறைஞ்செங
கடனந்திநாதன்றனயனற்செந்திலிற்காரிகையே
கடனந்தியங்காதலர்தேரிறகலிக்கின்றதே.

இ - ள். கடம் நந்து இல் நாகத்து அதள் ஆடையாய் - மதங் கெடுதலில்லாத யானையினது தோலாகிய வஸ்திரத்தையுடையவரே—எனைக் காக்கல் நிற்கே கடன் - அடியேனை இரட்சித்தல் உமக்கே கடனும்—அந்தி நாண் நிறத்தாய் என - செக்கர்

மேகம் நாணத்தக்க செந்நிறத்தையுடையவரே என்று—நாரணன் கண்டு இறைஞ்சு எங்கள்தம் நந்தி நாதன் தனயன் - விஷ்ணுமூர்த்தி தரிசித்து வணங்குகின்ற எங்களுடைய நந்தியென்னும் பெயரைப்பொருந்திய பரமசிவனுடைய குமாரராகிய முருகக்கடவுளது—நற்செந்திலில் காரிகையே - நன்மையாகிய திருச்செந்தூரிலிருக்கும்பெண்ணே,—கடல் நந்தின் நாயகன் காதலர் தேரில் கலிக்கின்றது - சமுத்திரத்திலே தோன்றிய சங்குகளுடைய நாயகமாகிய வலம்புரி உன்னுடைய தலைவரினதுதேரிலே சத்திக்கின்றது. எ - று. [பாங்கி வலம்புரிகேட்டுத் தலைவனது வரவறிவுறுத்தல். (உஎ)

கணைக்காகநாய்கடின்காயநிலையெனக்கண்ணியென்ன
கணைக்காகநானலைந்தெய்த்தேனெழிற்செந்திற்கந்தநெற்றிக்
கணைக்காகனார்தந்தநின்றனையேயினிக்காதலினாற்
கணைக்காகனிகர்ந்தேயழியங்கத்தின்காதலறவே.

இ - ள். கணைக் காகம் நாய்கள் தின காயம் நிலை எனக் கண்ணி - கூட்டமாகிய காகங்களும் நாய்களும் உண்கின்ற சரீரத்தை நித்தியமென்று நினைத்து,—என்ன கணக்கு ஆக நான் அலைந்து எய்த்தேன் - என்ன தாற்பரியத்தின்பொருட்டு யான் அலைந்து இளைத்தேன்?—எழில் செந்தில் கந்த - அழகையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்குங் கந்தசுவாமீ,—நெற்றிக்கண் அக்கு ஆகனார் தந்த நின்றனையே - நெற்றிக்கண்ணையும் எலும்பு மணியைத் தரித்த திருமேனியையுமுடைய பரமசிவன் பெற்ற உம்மையே—இனிக் காதலினால் கணைக் கா - இனி விருப்பத்தினாலே தியானிக்கும்பொருட்டு (இடையூறுவராமற்) காத்தருளும்—கனா நிகர்த்து அழி அங்கத்தின் காதல் அற - சொப்பனத்தைப் போன்று அழிகின்ற சரீரத்தில் வைத்த விருப்பம் நீங்க. எ - று. கண்ணை என்றது கணை என இடைக்குறைந்து நின்றது. சரீரத்தில் வைத்த விருப்பம் நீங்கி உம்மையே தியானிக்கும்பொருட்டுக் காத்தருளுமெனக் கூட்டுக. (உஅ)

காதலையானின்றனக்காக்கினனினிக்காயந்தந்தே
காதலையானின்றனக்காரணனடிக்கஞ்சங்கணீங்
காதலையானின்றகங்கரைந்தேத்தரன்கண்ணியராக்
காதலையானின்றசங்கரன்சேய்செந்திற்காங்கெயனே.

இ-ள். காதலை யான் நின்றனக்கு ஆக்கினன் - விருப்பத்தை நான் உம்மேல் வைத்தேன்;—இனிக் காயம் தந்து காதல்- இனிச் சரீரத்தைப் படைத்துக் கொல்லாதொழியும்.—ஐயான் - சூக்குமரூபியும்—இன் தனம் காரணன்-இனிமையாகிய அருட் செல்வத்துக்குக் காரணரும்—அடிக் கஞ்சங்கள் நீங்காது அலையான் நின்று அகம் கரைந்து ஏத்து அரன் - தம்முடைய பாதமாகிய தாமரைமலர்களை நீங்காமல் திருப்பாற்கடலிலே நித்திரைசெய்யும் விஷ்ணுமூர்த்தி முன்னின்று மனம் உருகித் துதிக்கப்பெற்ற சங்காரகர்த்தாவும்—கண்ணி அராக் காது அலையா நின்ற சங்கரன் சேய - மாலையாகச் சர்ப்பம் காதுகளிலே அசைகின்ற சுகஞ்செய்பவருமாகிய பரமசிவனுடைய குமாரரே,—செந்தில் காங்கெயனே - திருச்செந்தூரிலிருக்கின்ற கங்காபுத்திரரே. எ-று. சனனமரண துக்கங்களை நீக்கி நித்திய பேரின்பமயமாகிய மோக்ஷத்தைத் தந்தருளும் என்பது கருத்து. (உக)

காயங்கலையநலியந்தகனணைகாலஞ்செய்ய
காயங்கலையதளானிலநீரழல்காற்றெழிலா
காயங்கலையனலரிசித்தாயினன்காதலழ
காயங்கலையதிருஞ்செந்திலையெனக்கனறனெஞ்சே.

இ-ள். காயம் கலைய நலி அந்தகன் அணை காலம் - சரீரம் நீங்கும்படி வருத்துகின்ற இயமன்வருங்காலத்திலே—செய்ய காயம் கலை அதளான் - (சாக்கியநாயனாரெறிந்த) செங்கல்லாலாகிய சிவந்த தழும்பையும் கலைமானினது தோலையு முடையவராகியும்—நிலம் நீர் அழல் காற்று எழில் ஆகாயம கலையன் அலரி சித்து ஆயினன் - பிருதிவியும் அப்புவும் தேயுவும் வாயுவும் அழகையுடைய ஆகாசமும் சந்திரனும் சூரியனும் ஆன்மா

வும் ஆனவராகியுமிருக்கின்ற பரமசிவனுடைய—காதல் அழகு ஆய் - குமாரராகிய முருகக்கடவுளினது திருவுருவத்தைத் தியானி;—அங்கு அலை அதிரும் செந்திலாய் என்க - அவ்விடத்தே சமுத்திரம் ஒலிக்கின்ற திருச்செந்தூரை யுடையவரே என்று சொல்லு;—கன்றல் நெஞ்சே - வருந்தாதொழி என்மனமே. எ - று. என்மனமே இயமன் வருங்காலத்திலே வருந்தாதொழி முருகக்கடவுளினது திருவுருவத்தைத் தியானி திருச்செந்தூரையுடையவரே என்று சொல்லு எனக்கூட்டுக. சரீராந்தியத்திலே மனமானது எப்பொருளிலே சிந்தனை வைத்ததோ அப்பொருளே கைகூடும் என்பது சாத்திரசித்தம் ஆதலால், இப்படிச்சொன்னார். எக்காலத்திலும் இடைவிடாமல் வைத்த சிந்தனை எதுவோ அதுவே சரீராந்தியத்திலும் வருவது ஆகையால், முருகக்கடவுளைத் தியானித்தலை எக்காலத்திலும் இடைவிடாது செய்தாலொழியச் சரீராந்தியத்திலே செய்தல் கூடாது எனவும், அதனால் எப்பொழுதும் தியானிக்கவேண்டும் எனவும் அறிந்து கொள்க. (௲)

திருச்செந்திநிரோட்டகயமகவந்தாதியுரை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

கல்வளையந்தாதி.

யாழ்ப்பாணத்து நல்லூர்

சின்னத்தம்பிப்புலவர்

அருளிச்செய்தது.

இஃது

மேற்படியூர்

வித்துவசிரோமணி

ஸ்ரீமத்

ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்

மாணாக்கர்

சி. தம்பையாபிள்ளையால்

சென்னைப்பட்டணம்:
ஆறுமுகவிலாச யந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஜய௵ கார்த்திகை௴

இதன்விலை அணா ௨

1874

ஆக்கியோன்பெயர்.

செம்பொற் குவட்டினிற் பாரதந் தீட்டிய கோட்டினன்சீர்க்
கம்பக் கரிமுகன் கல்வலை வாழுங் கணபதிக்கு
நம்பற் கினியமுற் சங்கத்து நூலென நல்லைச்சின்னத்
தம்பிப் புலவனல் லந்தாதி மாலையைச் சாற்றினனே.

உ

கணபதி துணை.

கல்வளையந்தாதி.

காப்பு.

தார்கொண்ட பூமல்லி கைச்சேக்கை யிற்றும்பி சாலப்பம்புஞ்
சீர்கொண்ட கல்வளை யந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்
பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயுங்கும்பக்
கார்கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே. (க)

ஒன்றா யிருசுடர் முத்தொழி னான்மறை யோதுமைந்தாய்
நன்றாய வாறங்கம யாவுக்குங் காரண நாதனுமாய்
நின்றாய்நின் கல்வளை யந்தாதி பாடவென் னெஞ்சகத்துப்
பொன்றா வருள்புரி வாயானை மாமுகப் புங்கவனே. (உ)

நூல்.

கற்பக நாடர் பதின்சதக் கண்ணனெண் கண்ணன்றொழுங்
கற்பக வஞ்சி யிடக்கண்ணன றந்தமுக் கண்ணனன்றிற்
கற்பக வேலெறி வேடுணை வன்கல் வளைப்பதிவாழ்
கற்பக நன்னிழல் சேர்ந்தார் கருக்கரை கண்டவரே. (க)

கண்டலம் போதைப் புளினமென் றோர்ந்துகங் கம்பதுங்கிக்
கண்டல மார்ந்து சிறகாற்றுங் கல்வளைக் கற்பகநின்
கண்டல மூன்று மெனையாள்பொற் பாதமுங் காணவிண்ணோ
கண்டலன் போற்கண் படைத்திலன் வாசக் கமலத்தனே. (உ)

கவானரம் பையஞ் சுரும்பு விரும்பு கருங்குழற்போ
கவானரம் பைக்குலம் போற்றிட வாழ்தல்கண் ணேனினிச்சங்
கவானரம் பைங்க தலிக்கனி சிந்திடுங் கல்வளைப்புங்
கவானரம் பைத்திகழ் யாழ்க்கூற் றுமையருள் காதலனே. (ங)

அருளத் தனந்து சிலைக்கதை வாள்கட ராழிகொள்ளை
யருளத் தனந்தர் தெரியா வகைநிற்கு மைம்முகனீன்
றருளத் தனந்த வனஞ்சூழுங் கல்வளை யண்ணலடி
யருளத் தனந்தரம் வாழ்வானென் றல்வினை யஞ்சிடுமே. (௪)

அஞ்சத் திரத்தன் முழுவெண வேகொதித் தார்த்துரப்பி
யஞ்சத் திரத்தர் தகனவரும் போதுன் னபயநடை
யஞ்சத் திரத்த வடிவா ணயனத் தமலைபெற்ற
வஞ்சத் திரத்தன் றுணைவாதென் கல்வளை யானந்தனே. (௫)

தனந்தனந் தந்தி மருப்பன்ன மாதர் தரைவிரும்பு
தனந்தனந் தந்திகழ் தண்டுறை தோறுமென் சஞ்சரிகந்
தனந்தனந் தந்திமி யென்கல் வளையன்சங் கக்குழைக்கா
தனந்தனந் தந்தமொன் றனென்று நெஞ்சந் தனிலுன்னமே. (௬)

சந்தன மின்னுபொற் கச்சணி பாரத் தனதடம்ப
சந்தன மின்னிடைப் பூவஞ்சிக் கொம்பனை தையலுட்க
சந்தன மின்னலுற் றுள்கல் வளையன் றனதிடம்போஞ்
சந்தன மின்னம் வரக்கண் டிலோமென்ன தாமதமே. (௭)

தாமதிக் காந்தச் சிலைபோன் மனத்தினைத் தந்தசைகா
தாமதிக் காந்தகை மென்மொழிப் பூமின் றலை[illegible]ட்வே
தாமதிக் காநதர மாகிநின் றோன்மைந்த தண்ணிதழித்
[illegible]மதிக் காந்தம் புகழ்கல் வளையநின் றுட்கஞ்சமே. (௮)

கஞ்சக் கரந்தனின் மூவிலை வேல்கும்பங் கார்முகஞ்சங்
கஞ்சக் கரங்கதை மாதுள மேந்தி கவின்களம்பூ
கஞ்சக் காம்பயில் வேல்வல வைக்கொரு காந்தன்பொன்னு
கஞ்சக் காப்புவி கும்பிடுங் கல்வளைக் கைவரையே. (௯)

வரையாரம் பாலன்ன தோணகை வாணி வலவை[illegible]ணை
வரையாரம் பார்சடை யார்கல் வளைவெற்ப வண்ணமுத்தேன்
வரையாரம் பாளிதப் பூட்கொங்கை மீது வயங்குதொய்யில்
வரையாரம் பால விழியா ளிடையின் வறுமைகண்டே. (௧௦)

மைக்கண்ட னேறிய தேரச் சறுக்கும் வரதன்வெந்தீ
மைக்கண்ட நம்மையொட் டாவைங் கரத்தண்ணல் வாழுமிடம்
மைக்கண்டவள நகையார் குடையு மடுவினின்மா
மைக்கண்ட னீழலிற் சங்கினுந் தெண்கல் வளைப்பதியே. (௧௧)

கல்வளை யாத விரும்புநெஞ் சேகைய ரோடுறவா
கல்வளை யார்சுனை வாயரக் காம்பல்செங் காவியின்பக்
கல்வளை யார நிலாவீச விள்ளுங் கழனிசுற்றுங்
கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன்புகழே. (௧௨)

கரும்பனை யத்தனைப் பூவே மிடந்தசெங் கண்விடைப்பா
கரும்பனை யத்துவக் கீர்த்துடல் போர்த்த கடவுண்மொழிக்
கரும்பனை யத்தன்கை மாங்கனி வாங்கிய கல்வளைமா
கரும்பனை யத்தனை யான்மற வேன்புன் கவிதைகொண்டே. (௧௩)

கவிநாய கன்றிடு வாய்க்கிரைப் பண்டங் கறையிரத்தக்
கவினுய கன்மக் குடம்பையை வீக்கியென் கண்டபயன்
கவிநாய கன்றொழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங்
கவிநாய கதிருக் கல்வளை வாழுங் கணபதியே. (௧௪)

கணத்தலை வன்குழ விப்பிறைக் கோட்டன் கதிர்மணிப்பைக்
கணத்தலை வன்னச் சராக்கச் சரையன் களமரில்லங்
கணத்தலை வன்ன வளையூருங் கல்வளை காணிலரைக்
கணித்தலை வற்பகை முன்பணி மானுங் கருதிடினே. (௧௫)

கரியான னத்தன் றொழுபதம் வேண்டிற்கண் ணூர்பவஞ்சங்
கரியான னத்த மவர்க்கிழைப் பான்கடற் காசினிக்கோர்
கரியான னத்தம் புரிகோட்டுக் கல்வளைக் கன்னமத
கரியான னத்தன் புகழ்பாடி யுள்ளங் களிக்திடுமே. (௧௬)

சிந்தா மணிதென்ற லன்றி னிலாப்பகை செய்யவணி
சிந்தா மணிமுலை வாடின ளேழு செகமளந்த
சிந்தா மணிதுளவ் வன்றேடு கல்வளைச் செய்யுவருட்
சிந்தா முணிவரக் காணேன் பயோதரச் செல்லினமே. (௧௭)

தரங்க வளக்க ரொலிவே யிசைநனி தாக்கத்துப்ப
தரங்க வளக்கரிக் கொங்கைக் குதவிலன் றுரைநிரந்
தரங்க லைப்பட வென்னை விடாமத தந்திசொல்லந்
தரங்க வளக்கல் வளைப்பதி மேவிய தற்பரனே. (கஅ)

பரசங்க முத்தமிழ் கல்லா வெனையனைப் பாவிதிகம்
பரசங் கரவென்று மெய்ந்நொந்து பெற்ற பலனன்றிதா
பரசங் கமவுயி ருக்குயி ராய பரஞ்சுடரே
பரசங்க மாறந் தணர்போற்றுங் கல்வளைப் பண்ணவனே. (க௯)

அவலம் புரிமுக் குறும்பைந்து பூத மடக்கியென்று
யவலம் புரிமலர் தூய்த்தொழு [illegible]க்த வருண்மெய்யர்மெய்
யவலம் புரிமருப் புத்தக ரூரு மறுமுகன்முன்
னவலம் புரிவயற் கல்வளை யாலயத தாதிக்கனே. (உ0)

திக்குடை யானடி யைப்போற்றிப் பூவலஞ்சென்று செஞ்சோ
திக்குடை நீழலின மேவந்த ணீர்செப்பு வீரெனறன்பத்
திக்குடை யான்கல் வளையான் சிலம்பினிற் றேன்பண்ணையோ
திக்குடை யோதிச்செங் காலியுங் காளையுஞ் சென்றதுவே. (உக)

வேதா ரணிய முறைவேயின் முத்தருள் வேழமுய்ய
வேதா ரணியம்பொ றுடேத்து கல்வளை வெற்பன்னமே
வேதா ரணிய மலைதிருக் கோயில விளங்கநின்பால்
வேதா ரணியந்த காரநம் பாலில் விதித்தனனே. (உஉ)

தனையா யுதவிய தந்தையில் வாழ்க்கை தணந்தருட்சிந்
தனையா யுதகந் தனினின்று செய்யுந் தவத்திர்வெண்டர்
தனையா யுததி யகிலம் படைக்குஞ் சதுர்விதவே
தனையா யுதன்றொழுங் கல்வளை யானைச் சரண்புகுமே. (உங)

சரந்தண் டருமலர் வேண்மைத்துனன் செந்தமிழ்க் கலைபஞ்
சரந்தண் டலையிற் கிளிதேருங் கல்வளை தங்கிடுகுஞ்
சரந்தண்ட பாணி யழகினைக் காணப்பொற் றுமைரவா
சரந்தண்டர் போல விமையாத பார்வையைத் தந்திலரே. (உச)

தந்தனந் தாமரை வெற்பிரு ணேரிடை சாய்நடைபா
தந்தனந் தார்க்குழல் யாமள கோமள சாமளப்பெண்
டந்தநந் தாபணை நெல்விளை கல்வளை தன்னிலொற்றைத்
தந்தநந் தாவிளக் கேயெனப் போமிருட் சம்பந்தமே. (உ௫)

சம்பந்த மாவினைத் தென்னவற் கீந்தவன் றுங்குமருட்
சம்பந்த மாமுனி பாமாலை சூடி தருபொருண்மா
சம்பந்த மாலம் புனைசூழுங் கல்வளைத் தந்திவெம்பா
சம்பந்த மாயையென் பானீக்கி வாழ்வுசம் பாதிப்பனே. (உ௬)

பாலை வனத்தத்தைக் கியாரளிப் பாரென்று பன்னினளைம்
பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்
பாலை வனத்தகன் றுள்கல் வளைப்பர மானந்தன்றன்
பாலை வனத்தள வும்மன் பிலாரிற் பதைபதைத்தே. (உ௭)

தைக்கும் பகழி யுடல்பாய் தறுகட் சயிலம்வந்த
தைக்கும் பகன தனத்திர்கண் டீரெனிற் சாற்றிடுமே
தைக்கும் பகனன்முன் ஞேனைப்பந் தாடித் தகர்த்துரஞ்சி
தைக்கும் பகவன்றென் கல்வளை வாசன் றடமலைக்கே. (உ௮)

மலைவல் லியம்பிரி யாத்தில்லைக் கானுறை மாமதங்கி
மலைவல் லியம்பிள கீரின் பயோதரி வாணிமைய
மலைவல் லியம்பிகை கான்முளை கல்வளை வாணன்பொங்க
மலைவல் லியம்பர வையாளெய் யாமுன் வரவல்லையே. (உ௯)

வரம்பல வன்பருக் கீவா ரெனக்குமெய் வாழ்வுதரு
வரம்பல வுன்கொன்றை மாலிகை யாத்தி வணைந்தகற்ற
வரம்பல வன்பெற்ற மாதங்க வானனர் மள்ளர்செய்யும்
வரம்பல வன்குண் டலர்சூடுங் கல்வளை வாணவரே. (௩0)

வானஞ் சலஞ்சலத் தியொலி மண்மயங் காவுயிர்போ
வானஞ் சலஞ்சலம் வந்திடுங் காற்றுயர் மாற்றவரு
வானஞ் சலஞ்ச லெனவுரைப் பான்கல் வளைப்பதிவாழ்
வானஞ் சலஞ்சலக் கைத்தல மாறன் மருமகனே. (௩௧)

மகரந் தவள மலர்ச்சோலைப் பொங்கரின் வான்குளிரி
மகரந் தவழ்கல் வளையாகு வாகன வல்லவைவா
மகரந் தவள மருப்பானை வேங்கை மடங்கலெண்கு
மகரந் தவளைபுள் ளாறுலு நின்னை மறப்பரிதே. (௯௨)

அரவம் புலிங்க வனற்கண்ண வென்றரி போற்றச்சிலம்
பரவம் புலிபணி கேட்பமன் றாடி யருண்மதலை
யரவம் புலியணி கோடீரன் கல்வளை யண்ணல்கண்ணே
யரவம் புலிய குணத்தா ரெனினு மவர்முத்தரே. (௯௩)

தரப்பணி யாரம் பலபூண்டு தேர்முதற் றானைதற்சூழ்
தரப்பணி யாரைத் தடிந்துல காள்தலிற் சர்க்கரைச்சுந்
தரப்பணி யார மமுதுசெய் வோன்கல் வளைத்தலத்தா
தரப்பணி யார்வத் தொடுஞ்செய்து வாழ்த றகவுடைத்தே. (௯௪)

தகரங் கமழ்குந் தளந்தர ளத்தள வின்னகையீர்
தகரங் கமலன் மணக்கோலஞ் செய்த றடாதிருபா
தகரங் கமலஞ் சிவந்தோன் மருகன் றவமற்றபா
தகரங் கண்மேவருங் கல்வளை யான்மலைச் சாரலிலே. (௯௫)

இலங்கை யிராவணன் கண்டதுண் டம்பட வெய்சரம்ப
யிலங்கை யிராமன் கடதாரை சிந்தி யிரண்டிருகோ
டிலங்கை யிராவதன் றாழ்கல் வளைய னெனின்முத்திவா
யிலங்கை யிராது கடைத்தா டிறப்பிப்ப னோம்பனே. (௯௬)

அம்பலங் காசில் வயல்சூழுங் கல்வளை யையங்கரனுட்
டம்பலங் காசியென் றுய்கேள்வர் பின்செ லவர்மதலா
யம்பலங் காசின் முலையாணின் கைதந்த வாசறப்பொன்
னம்பலங் காசிசென் றேவா தரவென் னருஞ்சொர்க்கமே. (௯௭)

கமண்டலம் பாற்கரன் போலாழி யேந்துங் கடவுளர்நா
கமண்டலம் பாதளங் கைகூப்பு தாளென்று காட்டுவையர்க்
கமண்டலம் பார்க்குமுய் யானம் வளைக்குங் கழனியிற்சங்
கமண்டலம் பாய முழங்கிடுங் கல்வளைக் காரணனே. (௯௮)

காரண வாத திரிசூல பூத கணேசவன்பா
காரண வாததென் கல்வலை நாத கடம்பணிவா
காரணி வாத முதலைந் திணைவைத்துக் காத்தழிக்குங்
காரண வாத நடந்தை யுலாவுங் கலகத்திலே. (௩௯)

கலகத் தமரத் திரையின் றுயரைக் களைந்தருட்ச
கலகத் தமர கதக்கம்பி யாற்செய் கடுக்கைபுல்ல
கலகத் தமரளி வாழ்சோலைக் கல்வலைக் கற்பகவென்
கலகத் தமரவிந் ததிருக் காலெந்தக் கால்வைப்பதே. (௪௦)

வையத் திருக்கை யறுப்பா னெனினம் வலைமணிக்கு
வையத் திருக்கை கயிலையில் வெண்மங்கு ணோர்கல்வலை
வையத் திருக்கைப் பரியாக்கி பிள்ளைக்கு மானனையார்
வையத் திருக்கை யயர்ந்தாளென் றோது மதுகரமே. (௪௧)

கரவடம் பத்தி யிலார்க்களிப் போயிருள் காய்ந்திடும்பாற்
கரவடம் பத்தி யொளிபாய் முலைச்சக கரிபெறுமைங்
கரவடம் பத்திரக் காறுஞ்சு மான்மரு காசந்த்ரசே
கரவடம் பத்திரட் கல்வலை யாயெனைக் காத்தருளே. (௪௨)

அருந்துதிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை
யருந்துதிக் கைக்கு மகளாய்ப் பிறந்திடு மன்னைவிட
மருந்துதிக் கைப்புனை கூறைப் பிஞகி யருள்கல்வலை
யருந்துதிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே. (௪௩)

அடைக்கலங் காவென்ற பேர்க்கினி யான்மட வன்னக்கண
மடைக்கலங் காரஞ் சிலையென் றணைகல் வலைவரைவா
யடைக்கலங் காட்டுந் தனத்தீர் விரக மகலப்பொன்னி
லடைக்கலங் காக்கவென் றென்றோ குணதிசை யாவதுவே. (௪௪)

வனத்தானை யன்றெழு மம்மானை யம்புலி மாணணிசெவ்
வனத்தானை யன்ன வயற்கல் வலைப்பெரு மானைமறை
வனத்தானை யனைக் கணைமலை மான்மரு மானையைம்பூ
வனத்தானை யன்புசெய் வார்முலைப் பாலை மறந்தவரே. (௪௫)

தவராக மாகன கச்சிலே கோலிபொற் றாள்பெறமைத்
தவராக மாக விடந்தவன் சாபந் தவிர்த்தவன்மா
தவராக மாகநற் காமுரல் கல்வளைத் தந்திரன்மா
தவராக மாகரன் கண்ணாறு பூக்கொன்றைத் தாமத்தனே. (சசு)

மத்தன் பராபரை சீராட்டு பிள்ளை மணிமந்தர
மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்தபது
மத்தன் பராகவெண் ணீறணி கல்வளை வானவனா
மத்தன் பரான வரன்றோ கயிலையில் வாழ்பவரே. (சஎ)

பவனம் புயர்தொண்டாக் கில்லாமை யாக்கும் பரன்கனனீர்
பவனம் புயங்க முடியேந்து மண்ணின் படிவன்கருப்
பவனம் புயலளக் குங்கல வளைப்பதி மீதிலுறை
பவனம் புயன்றொழும் பாதாம் புயனெம் பரதெய்வமே. (சஅ)

பரமாநந் தக்கன் மழைமாரி காத்திடும் பைங்கானகம்
பரமானந் தக்கந் தரவிந் திராணி பதயயனும்
பரமானந் தக்கல் வளையத்த னுத்தம பத்தசித்தன்
பரமானந் தப்பிள்ளை யார்துணைச் சேவடிப் பங்கயமே. (சகூ)

பங்கைய மாலை யளிக்குழல் வாய்முலை பன்மொழிகோ
பங்கைய மாலை யனையாட் குதவரன் பாலன்றடப்
பங்கைய மாலை யலர்கல் வளைக்கண் பரிந்தொருகூ
பங்கைய மாலையக் தொட்டியற் றாரெப் படியுய்வரே. (ரு0)

வருந்தும் பிறவி யலைவாரி நீந்த மதுவிளைக்க
வருந்தும்பி வீழ்மலர்த் தாட்புணை தாகன்னல் வான்கதிர
வருந்தும் பிரகாசப் பொற்றேர் தடுக்கும் வளக்கல்வளை
வருந்தும்பி மாமுகத் தையாமெய் யாகுண்ட வண்டியனே. (ருக)

வண்ட மருங்குலை யான்மரு கன்கல் வளைச்சிலம்பா
வண்ட மருங்குலை ஞாளியு மாறு வருமதர்வாய்
வண்ட மருங்குலை விற்கொண்ட வேட்டுவர் மாவலிது
வண்ட மருங்கு விளவஞ்சி பாலல்லின் வாரலையே. (ருஉ)

வாரிக் கடுக்கை தனையண்டர் சொல்ல வரவெனைநீர்
வாரிக் கடுக்கையி னாற்பார்வி யீர்கண் மனத்துவைத்தேன்
வாரிக்கடுக்கையென் றுன்றுஞ்சு காமயி லாடக்கண்டு
வாரிக் கடுக்கைசெம் பொன்றூற்று கல்வளை வாசனையே. (௫௩)

வாசவ னந்தர நாட்டோர் துதிக்கு மதக்கலுழி
வாசவ னந்தற்கு ஞானோப தேசம் வழங்குமெய்யா.
வாசவ னந்த வளவளை சேர்கல் வளைப்பதியின்
வாசவ நந்த ரவிபோலுன் றாடலை வைத்தருளே. (௫௪)

அருக்கரைக் கன்ன றொடுங்கல் வளைய னறுகிதழி
யருக்கரைக் கன்னங்கை யைத்தந்தை யாயுடை யான்வினைநே
யருக்கரைக் கன்னலிற் றீர்ப்பான் வரைமின்ன ராமணிப்பை
யருக்கரைக் கன்ன நடைக்கென்ற னாவி யகன்றதுவே. (௫௫)

அகம்பத்தர் நெஞ்சமுங் கல்வளைக் கோட்டமு மானவன்றீ
யகம்பத் தரைச்சங் கரித்தோன மருகன்றனை டாழிவெள்ளி
யகம்பத் தரென்றளி யூதாத பூவிறைத் தன்புருகி
யகம்பத்தர் தாம்பெறும் பேறய னாலு மளப்பரிதே. (௫௬)

அப்பா தகமல நீக்கிச் சிலம்பிசை யார்த்திடுங்கோ
லப்பா தகமலம் பூசித்து நேசிக்க வன்புதவா
யப்பா தகமலங் கார்வயற் கல்வளை யாதிபொன்றா
தப்பா தகமலர் தாங்குஞ் சடைக்கரு ணாகரனே. (௫௭)

கருவரம் பாயயி னோக்கியர் தூறுகற் றுக்கற்றுப்ப
கருவரம் பாயப் படேலன்ன மேகல் வளைக்களிற்றைக்
கருவரம் பாய்ந்துகண் டோர்காட்டு ரூபத்தின் கற்றையளக்
கருவரம் பாயதுண் டாலிக்கு மாலிக் கணமல்லவே. (௫௮)

கனஞ்சஞ் சரித்திடும் வண்டலை தண்டலைக் கல்வளையே
கனஞ்சஞ் சலமுறு பாசா டவிவெளி கண்டவனோங்
கனஞ்சஞ் சரிசொலும் வேற்கண் ணிடைக்குக் கருங்குழலுங்
கனஞ்சஞ் சரிகங் களேநீ ரிருக்கை கடனல்லவே. (௫௯)

கடம்பிடிக் குங்கமஞ் சூன்மா லளந்திடுங் கல்வளையான்
கடம்பிடிக் குங்கர டத்தறு கட்சிறு கட்களிறு
கடம்பிடிக் குப்புய னீரூட்டு வெற்பகங் காமர்வஞ்சி
கடம்பிடிக் குங்கண்கள் காதள வோடிக் கதித்தனவே. (௬௦)

கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் கங்கணநா
கதிரைக் கடலொலி போன்மள்ள ரார்த்துக் களைந்தசெந்நெற்
கதிரைக் கடைச்சியர் போரேற்றுங் கல்வளை யாய்ககனக்
கதிரைக் கடவயிற் றார்ப்பாயென் றல்வருங் கைவலமே. (௬௧)

வரச்சந் திரனெனுஞ் செந்தழற் பந்தம் வழுத்துநற்ற
வரச்சந் திரணத்தின் மாற்றுங் கடாசல மங்குலுலா
வரச்சந் திரதில கம்வளர் கல்வளை மானுயிர்க
வரச்சந் திரவி னடந்தா னுணவென வந்ததுவே. (௬௨)

வந்தனை யன்பர் மனத்தூண் டடைபடு மாதங்கங்க
வந்தனை யன்றுகொன் றோன்முக நாபிகண் வாய்கரஞ்சி
வந்தனை யன்பணி கல்வளை யான்வரை மன்னவனீ
வந்தனை யன்றெனின் மானுயி ரம்புலி மானுண்ணுமே. (௬௩)

மான வலக்கண்ட வாவினைப் பஞ்சினை மாய்க்கும்பவ
மான வலக்கண்டை மாவுரி யான்வன சப்பதத்தின்
மான வலக்கண் டரித்தோன புகழ்கல் வளையிற்பெரு
மான வலக்கண் டகர்க்கொழிப் பாயென மாலறுமே. (௬௪)

மாலை யனங்கங் கரியோன் பதம்பெரி தன்றுமன்றின்
மாலை யனங்கங் கைவார்ச டிலேசன் மதலைகொன்றை
மாலை யனங்கங் கணவெங் கணபண வாளரவன்
மாலை யனங்கங் குலாங்கல் வளையிரு மாதவர்க்கே. (௬௫)

இரும்புண் டரவெண்டு கண்மணி மந்திர மெய்தன்பரை
யிரும்புண்ட நீரெனத் தற்சேர்க்கு நாதனை யிக்குகெற்ப
யிரும்புண்ட ரீகமுஞ் சூழ்கல் வளையனை யெண்ணிப்பண்ணி
யிரும்புண் டருமயிற் றென் றிசைக்கோன் பின்னை யென்செய்வனே.

வன்னி களங்க னரிமா றுதிக்கு மலைமகள்கை
வன்னி களங்கனி யென்றெண்ணு கண்டன் மகிழ்ந்துபெற்ற
வன்னி களங்கப டற்ரோர் பிறவி வலைப்பிணியாம்
வன்னி களங்களை யுங்கல் வளைக்கும்ப மாதங்கமே. (சுஎ)

தங்க மலையதி ளுல்வேதப் போலி தனைவரைமா
தங்க மலையச மேழ்காதம் வாசந் தருங்கல்வளை
தங்க மலையம் பிகைகுமரா வென்று சாற்றிற்சந்த்
தங்க மலையரும் பாக்கொம் பிரண்டுந் தருவிப்பனே. (சுஅ)

திருமந்தக் காரிடத் தாக்கிடு மாமுகன் சந்தனப்பூந்
தருமந்தக் காலசை கல்வளை வாசன்றன் ருட்டினின்மா
தருமந்தக் காலமுந் தப்பாமற் சாரதி தாரைத்துளி
தருமந்தக் கார்முந்த முன்றோர் கடவுதல் சால்புடைத்தே. (சுகூ)

சாலிக்கு வாலிக்கு வெங்கணை யேவித் தயங்கியபாஞ்
சாலிக்கு வாலிய தூசருள் கோலமுன் ருங்குபொறை
சாலிக்கு வாலிப மார்க்கண்டர்க் கீந்தவன் றந்தமைந்தன்
சாலிக்கு வாலிக்கு வான்ருவங் கலவளைத் தானத்தனே. (எ0)

தான வரங்கம்பங் கஞ்செய்யுஞ் சாரங்கன் ருழுமுத்தித்
தான வரங்ஈது வாவேற் குமரன் றமையமழைத்
தான வரங்கம் பலத்தான் றருகளி றேகல்வளைத்
தான வரங்க ளுதவாயென் சித்தத் தறியினின்றே. (எக)

சித்தம் பரமுத் தலைவேலன் பாம்பரை சிக்கெனவி
சித்தம் பரமுத் தரிகங்கொண டோன்மைந்தன் செய்யிற்பரி
சித்தம் பரமுத்த நாகொன்று கல்வளைத் தேவையுன்னுஞ்
சித்தம் பரமுத்த ராவாருக் காகுஞ் செயத்தம்பமே. (எஉ)

தம்பூஞ் சுரதஞ்செய் யாதீன்ற சேய்தொழுந் தாளினன்கீ
தம்பஞ் சுரமிழற் றுஞ்சோலைக் கல்வளைச் சாரலிற்பா
தம்பஞ் சுரத்துப் படச்சேக்கும் பொற்கொடி சுற்பத்தினி
தம்பஞ் சுரருண்டி போன்மொழி தேன்குழ ருனெங்குமே. (எங)

கும்ப னகத்திய னூலளக் தோகோற்ற வாகல்வளைக்
கும்ப னகததிற் கனகா சுரற்செற்ற கோளரியே
கும்ப னகத்தின் சிறகசிக் தோன்முருங்கோன் வெற்பின்வாய்க்
கும்ப னகத்தின் புவிதாங்கி யோருறைக் தாய்புயமே. (எச)

புயங்கந் தரித்தவன் கட்கலன் பூண்டு சிலம்பிசுற்றப்
புயங்கந் தமைந்து மடக்கிச் சடம்புற்று மூடவெம்பேய்
புயங்கந் தரத்தக்க காணுறை மாதவப் போதர்க்கன்றம்
புயங்கந்த நாறிடுங் கல்வளை யானடிப் போதரிதே. (எரு)

அரியா தவனிந் தளகேசன் வானயி ராபதத்தி
னரியா தவனிறைஞ் சுநதாட் பதுமவண் டார்பிறப்பை
யரியா தவனி மலக்கல் வளையுறை யத்தபொய்யர்க்
கரியா தவநிலை யார்க்கெளி யானெ னகப்பொருளே. (எசு)

கப்பணத் தந்தமில் வெஞ்சூரட் டோனுடன் கார்விடநா
கப்பணத் தந்த வரைக்குற மாதின் கருத்துறவா
கப்பணத் தந்தக் கரியாய்வந் தோாக்கிடங் கஞ்சத்திரா
கப்பணத் தந்தவழ் செய்தொறு மாமுரல் கல்வளையே. (எஎ)

கல்லார மூரற்பெண் ணுக்குபிண் ணுக்கணைக் கண்ணனெண்ணுங்
கல்லாரஞ் செங்கழு நீாவாவி மேவிய கல்வளையான்
கல்லா ரருவியங் குன்றத்தி னேற்றுன் கணவர்பொன்னே
கல்லாரம் பூமுருக் கென்று ரறிந்திலன் கான்மயிலே. (எஅ)

கானகத் தானத்தி லுழிலங் கேசனைக் காய்ந்துவெண்மை
கானகத் தானத்தில் வீழ்த்தரன் சேய்வளை கான்றமுத்தங்
கானகத் தானத் திருள்சீய்க்குங் கல்வளைக் கட்டுபின்னற்
கானகத் தானத்தி யென்றேத்தி னென்பவக் கட்டறுமே. (எகூ)

கட்கஞ்ச மள்ளர் களைகளை கல்வளைக் கத்தன்றறு
கட்கஞ் சனைவதைத் தோன்மருகன் வரைக் காவன்மின்னே
கட்கஞ் சனப்புயல் பொங்கா லகால கடுவடுவேற்
கட்கஞ் சமானம் வரைப்பா யிருதொழில் காட்டரிதே. (அ0)

அரக்கர விந்தறக் கொன்றோன் பெருவமு தேவெங்கொலை
யரக்கர விந்தம் பயில்வன நீத்தண்மி னோநின்றுகே
ளரக்கர விந்தன் குலத்தோர் மணிகையி னாற்கல்வளை
யரக்கர விந்தம் புனைவோர்க் கொலிக்கு மரவங்களே. (அக)

வங்கங் கணவர் நிதிதேடப் போனதென் வாய்ந்தபில
வங்கங் கணைச்சி யுடைக்குங் குடக்கனி வாரந்தநற
வங்கங் கணவி மடைதத்து தென்கல் வளையிலர
வங்கங் கணன்கிரி யன்னாள்பொன் னங்க மருவுறவே. (அஉ)

மருக்காவி னாறிடக் குங்குலு வாலயம் வாசங்கொள்ள
மருக்காவி பூம்பண்ணை நாறிடுங் கல்வளை வாரகொன்றைத்தா
மருக்காவி யன்ன வனைபபா டிலர்கவி வாணரென்க
மருக்காவின் பாலுகுத் தாலெனப் பாடுவர் மாந்தரையே. (அங)

தரைக்குந் ததிக்குங் கனிவாயங் காந்து தயங்கியமந்
தரைக்குந் தவாளி தனுவாங்கு மால்பணி தற்பரன்மைந்
தரைக்குந் தளக்கஞ்ச மான்மகிழ் கல்வளை தாங்கியநா
தரைக்குந்தன் முன்னவ னைப்பாட லாற்கொள்வர் சங்கத்தரே. அச

சங்கர னாட்டத் திரண்டஞ்சு நாற்பொறிச் சர்ப்பம்வன
சங்கர னாட்டந் தவிர்த்தோன் றுயில்வடந் தண்டரளஞ்
சங்கர நாட்டயில் சேர்வஞ்சி கல்வளைத் தந்தியங்கு
சங்கர னாட்டன்பி னன்பகண் டாயென் றனதுயிரே. (அரு)

தனக்காக்கை யன்றி வழங்காரைப் பாடித் தளர்பசிய
தனக்காக்கை யுண்ணு முடல்வீக் கிடச்சலித் தேன்சிலைவே
டனக்காக்கை போக்கிய நோக்கினன் மைந்ததண் காரினைச்சந்
தனக்காக்கைந் நீட்டுதென் கல்வளை யன்பர் சகாயத்தனே. (அசு)

காயப் படவு துளங்கிச் சிலேட்டுமக் கால்விசைத்துக்
காயப் படவு முடியுதை யோமலர்க் காவணமா
காயப் படவுயர் கல்வளை நாத கரியுரியே
காயப் படவுமை காதல னீன்ற கரமஞ்சனே. (அஎ)

மஞ்சரிக் கண்ணிமின் வேணியன் கல்வளை வாசன்மணி
மஞ்சரிக் கண்ணிய சாபத்தை மாற்றும் வரதன்வெற்பின்
மஞ்சரிக் கண்ணிப் புயத்தாய் மணங்கலங் காயின்றுநீ
மஞ்சரிக் கண்ணி நகைக்குடைந் தாயுன் மனத்துரமே. (அஅ)

துரங்கந்தந் தாவளந் தேரா ளெனும்படை சூழ்ந்திடுஞ்சா
துரங்கந் தரணி படைத்திந்த்ர லோகமுந் துய்ப்பரிதோ
துரங்கந் தனிலுறை மாலைதரு கல்வளைத் தும்பிகற்சிந்
துரங்கர்த வேழிணைக் கன்பான மெய்த்திருத் தொண்டருக்கே. அகூ

அருமந்த மாருதத் தேரோற்கு மைத்துன னானபிரா
னருமந்த மாமுகன் கல்வளை யான்வெற்பி னுடவரை
யருமந்தக் காக்குழன் மாலையும் வாடின தையமில்லை
யருமந்த மானுக் கிருப்புவெள் ளேறுடை யான்வையமே. (கூ0)

வைப்பர சத்தி யுரியா னிடத்தின் மகிழ்தருபரா
வைப்பர சத்தி திருமுலைப் பாலுண்ட வாயன்மத
வைப்பர சத்தி செறிந்திடுங் கல்வளை வானவர்கோ
வைப்பர சத்தினம் பெற்றாற் றார்துயர் மாநிலத்தே. (கூக)

மாவா ரணமெனக் கொண்டோன் விழிபட்டு மாய்ந்தவெங்கா
மாவா ரணங்க ளொருநாலு மேத்தி வணங்குமந்த
மாவா ரணங்கல் வளையான்றந் தான்கொன்றை மாலையெங்கண்
மாவா ரணங்கினை யென்செய்கு வாய்மலர் வாளிகொண்டே. (கூஉ)

வாள முருக்கிதழ் வல்லவை சேர்கல் வளையிற்பிர
வாள முருக்கித வேணியன் வெற்பின் மதித்தசக்ர
வாள முருக்கு முலையாய் மலர்க்கரங் கொண்டுகர
வாள முருக்கயி னேர்வாரி பொத்துதன் மற்றரிதே. (கூங)

மற்கடந் தாவருங் காமேவு கல்வளை வாசன்வெங்கா
மற்கடந் தார்புக ழைங்கரன் வெற்பில்வன் பார்த்தனுடன்
மற்கடந் தான்கட் டழல்குளிர் தீச்சுர வாபியென்றே
மற்கடந் தாங்கிய கொங்கையெவ் வாறு மருவினளே. (கூச)

மரக்கணி யார்தம் மலரேட விழ்த்து வயினிடத்த
மரக்கணி யாரெனச் சோதிடஞ் சொல்லினர் வாளரிச்ச
மரக்கணி யாதுசெய் வாணம் விதிவசம் வல்லவைவா
மரக்கணி யார்மைந்தர் கல்வளை வாசர் மலையகத்தே. (கூரு)

கத்தாறு காலிசை யார்க்குங் குழற்கரும் பேயுயர்மா
கத்தாறு காலக் கருமாரி வந்தது கன்னியம்பூ
கத்தாறு காலுங் கனியள்ளி யாரங் கரைசிந்திவே
கத்தாறு கால்வருங் கல்வளை வாழைங் கரன்வெற்பிலே. (கூசு)

கரனுக ராமுனி மாதுளை மேந்திய கல்வளையான்
கரனுக ராவற நேமிப் படைக்கல மேவிவரு
கரனுக ராசன் பணிபெரு மான்புகழ் கற்றிடச்சி
கரநாக ராதிப னுயிர நாப்பெற்ற காரணமே. (கூஎ)

காரப் பிணைவிழி வல்லவை பாலமர் கல்வளையான்
காரப் பிணையென வெங்குகின் றேன்வெற்பிற் காமரந்த
காரப் பிணையற் சுருள்வஞ்சி போறகன்னியீர் பொறியா
காரப் பிணையொன்று வந்ததுண்டோ சொல்லுங் கண்டதுண்டே. ()

கண்டால முண்ட பெருமா னுதவிய கான்முளைபுன்
கண்டால மாந்தர்க் ககற்றுரு வாகனன் கல்வளையின்
கண்டால நேருங் கரத்தானைக் காணத் தொழப்புகழக்
கண்டாலங் கைத்தலம் பெற்றேனற் றேனென் கனதுயரே. (கூகூ)

கனகந் தரநிற மால்சாபந் தீர்த்திடுங் காரணவென்
கனகந் தரநெஞ்சிற் றேன்றுபுன் மாலைகைக் கொள்ளைசெங்கோ
கனகந் தருமலர் கோவைசெய் நாருங் கவினுமன்றே
கனகந் தரள மணிமாடக் கல்வளைக் கற்பகமே. (க00)

கல்வளையந்தாதி முற்றிற்று.